# சாதக சிந்தாமணி

பாகம் I



| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>செ | சுக் | புதன் |
| சந்<br>ராகு | இராசி | | சனி |
| | | | கே |
| | குரு | | ல |

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 515

# சாதக சிந்தாமணி

## (கால நிகண்டு, காரக நிகண்டு)

*மூலமும் உரையும்*

**பாகம்-1**

**சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் மற்றும் உரையாசிரியர்**

முனைவர் திருமதி. ***சத்தியபாமா காமேஸ்வரன்,***

எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.எட்.,பிஎச்.டி.,

சோதிடவியல் பட்டயம், சுவடியியல் பட்டயம்.

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2008] [ விலை ரூ. 70-00

சாதக-மு-1

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : சாதக சிந்தாமணி |
| பதிப்பாசிரியர் | : முனைவர். திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 515 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : செப்டம்பர் 2008 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 170 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : ரூ. 70-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக்கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகத்தைத் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும், பிறநாட்டினரும் பயன்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் உள்ளோர் முன்னிலும் கூடுதலான அளவில் தற்போது இந்நூலகத்தைப் பார்வையிட்டும் பயன்படுத்தியும் வரும் மேம்பாடும் நிகழ்ந்து வருகிறது.

நமது நூலகத்தில் சற்றேறக்குறைய ஐம்பதாயிரம் பன்மொழிச் சுவடிகள் பாங்குறக் காக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகளிலிருந்து இதுவரை 505 நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நூலகத்தில் வராகர் ஓரா சாத்திரம், காலச்சக்கரம், சினேந்திரமாலை, சாதகாலங்காரம், சகாதேவ நிமித்த சூடாமணி, நட்சத்திர சிந்தாமணி, பஞ்சபட்சி சாஸ்திரம், குமாரசுவாமியம், சூடாமணி உள்ளமுடையான், சாதக பாரிஜாதம், சர்வார்த்த சிந்தாமணி முதலான தமிழ் சோதிட நூல்களும், ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன. மேலும், இந்நற்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது, சுவடி எண். 783 மற்றும் 784 ஆகிய இரு சோதிடச் சுவடிகளிலிருந்து சாதக சிந்தாமணி எனும் சோதிடப் பாடல்களை சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திருமதி. சத்தியபாமா காமேஸ்வரன் அவர்கள் மிகச் சிறப்பாகவும், செம்மையாகவும் பதிப்பித்துள்ளார். சாதகத்தை விரிவாகக் கூறும்

இந்நூல் விரிவஞ்சி இரு பகுதிகளாகப் பிரித்து பதிப்பிக்கப் பட்டுள்ளது. இப்பகுதியில் பாயிரப் பாடல்களோடு சேர்த்து 260 விருத்தப்பாடல்கள் உள்ளன. இப்பாகத்தில் சோதிட அடிப்படைச் செய்திகளாக கால நிகண்டு, காரக நிகண்டு என இரு பகுதிகள் அமைந்துள்ளன. இரண்டாம் இலக்கன பாவம் முதல் பன்னிரண்டாம் பாவம் வரையில் உள்ளது.

சாதக சிந்தாமணி எனும் இந்நூலாசிரியர் தில்லை நாயகப் புலவர் என அறியலாகிறது. இப்பதிப்பாசிரியர் இது தொடர்பாக இந்நூலிலிருந்து பல மேற்கோளைச் சுட்டி விளக்கியுள்ளார்.

இப்பதிப்பாசிரியர் அரிதில் முயன்று சோதிட அடிப்படைச் செய்திகள் கூறும் கால நிகண்டு மற்றும் காரக நிகண்டு ஆகியவற்றில் கூறப்படும் வாரம், திதிகள், நட்சத்திரங்கள், கரணம்,யோகம், இராசிகள், கோள்கள் மற்றும் இராசிகளின் உருவங்கள், காரகர்கள், அமிர்த பாகை, ஊர் வகைகள், நோக்கு, வலிமை முதலான பல்வகைச் செய்திகளை நிரல்பட தொகுத்துக் கூறியுள்ளார். இவை சோதிடம் அறியும் ஆர்வலர்களுக்குப் பெரிதும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் சோதிடம் பற்றிய பல்வகைச் செய்திகளையும் பயன்களையும் எடுத்துக் காட்டும் இவரது முயற்சிக்கு இனிய பாராட்டுகள்.

நம் முன்னோர்களின் வானியல் அறிவு எந்த அளவிற்கு பரந்து இருந்தது என்பதற்கு இந்த நூலில் எடுத்துக் காட்டப்படும் பாடல்களே சிறந்த சான்று. சிறப்புமிக்க இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினி பிரிவில் பணியாற்றியவர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம். எஸ். சண்முகம்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
**சரசுவதி மகால் நூலகம்.**

*தஞ்சாவூர்*
*12-9-2008*

# பதிப்புரை

தெய்வீகக் கலையான சோதிடக்கலை மக்களால் பெரிதும் விரும்பப்படும் கலையாகும். ஒருவனுடைய பிறந்த நேரம், கோள்களின் நிலை ஆகியவற்றை அடிப்படை யாகக்கொண்டு, அவனுடைய வாழ்வில் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களைக் கணித்துக் கூறுவதால் என்றைக்கும் இக்கலைக்கு வரவேற்பு அதிகம். இக்கலைக்கு ஆதாரங்களாக விளங்குவன சோதிடநூல்கள். சென்ற நூற்றாண்டின் தொடக்கம்வரை தமிழ்நூல்கள் ஓலைச்சுவடிகளில் எழுதப் பட்டிருந்தன. அவற்றுள் பல இன்று அச்சேறிவிட்டன. இன்னும் சில ஓலைச்சுவடிகளிலேயே உறங்கிக் கிடக்கின்றன. பதிப்பிக்கப்பட்டு அச்சேறிய அச்சுநூல்கள் பலவும் இன்று கிடைப்பதில்லை. எனவே, ஓலைச்சுவடிகள் நம்முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற கலைக் கருவூலங்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, பல நிறுவனங்கள் இவற்றைப் பாதுகாத்து, தக்கவர்களைக் கொண்டு இந்நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றன.

அத்தகைய நூல்வெளியீட்டு நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் ஓலைச்சுவடிகளில் உள்ள சோதிட நூல்கள் பலவற்றையும் வெளியிட்டு வருகிறது. அதிகமான சோதிடச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம் என்ற சிறப்பினை உடையது. தமிழ் மொழியையன்றி வடமொழியில் உள்ள சோதிட நூல்களையும் அச்சிட்டு வெளியிடுவது இந்நூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலகத்தில் வராகர் ஓரா சாத்திரம், காலச்சக்கரம், சிநேந்திரமாலை, சாதகாலங்காரம், சகாதேவ நிமித்த சூடாமணி, நட்சத்திர சிந்தாமணி, பஞ்சபட்சி சாஸ்திரம், குமாரசுவாமியம், சூடாமணி உள்ளமுடையான், சாதக பாரிஜாதம், சர்வார்த்த சிந்தாமணி முதலான தமிழ் சோதிட

நூல்களும் ஓலைச்சுவடிகளில் இருந்து பதிப்பிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளில் **சாதக சிந்தாமணி** என்ற நூலும் ஒன்று.

**சாதக சிந்தாமணி சுவடிகள்**

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சாதக சிந்தாமணி என்ற தலைப்பில் சுவடிகள் (சுவடி எண்கள் 783, 807, 1102, 1103, 1887a) கிடைத்தன. அந்த ஐந்து சுவடிகளையும் ஆய்வு செய்தபொழுது, இந்த ஐந்து சுவடிகளில் வெவ்வேறு மூன்று நூல்கள் இருப்பது கண்டறியப்பட்டது. சுவடி எண்கள் 807, 1102, 1103 ஆகியவை ஒத்த நூல்கள். இவை **சாதக நூல்** என்ற நூலாகும். சிறந்த நூல் என்பதைக் குறிக்க சாதகமாம் சிந்தாமணி என்ற தொடர் இருந்ததால், சாதக சிந்தாமணி எனத் தலைப்பிட்டு சுவடிகள் விவர அட்டவணையில் அமைத்துள்ளனர். சுவடி எண். 1887a இல் அமைந்துள்ள நூல் சாதக கணிதாமிர்தம் என்ற நூலாகும். இந்நூலுக்கும் சாதக சிந்தாமணி என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இவையன்றி, சுவடி எண். 783இல் சாதக சிந்தாமணி என்ற நூல் காணப் படுகிறது. இந்நூல், தில்லைநாயகப் புலவர் என்பவரால் எழுதப்பட்ட சாதக சிந்தாமணி என்ற நூலாகும். இச்சுவடியில் சாதக சிந்தாமணியின் தொடக்கம் முதல், முதலாம் பாவம் வரையில் மட்டுமே பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலகத்தின் பிற சோதிடச்சுவடிகளை ஆய்வு செய்த பொழுது, இரண்டாம் பாவகப் பலன் (சுவடி எண். 784) என்ற தலைப்பிலமைந்த சுவடியில் இரண்டாம் பாவம் முதல் பன்னிரு பாவங்கள் வரை சாதக சிந்தாமணியின் தொடர்ச்சியான பாடல்கள் இருந்தது கண்டறியப்பட்டது. அதன் விளைவாக சுவடி எண். 783, 784 ஆகிய இரு சோதிடச் சுவடிகளில் இருந்த சோதிடப்பாடல்கள் பதிப்புப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நூலில் பாயிரப் பாடல் களோடு சேர்த்து 1563 விருத்தப்பாக்கள் உள்ளன.

சாதகத்தைப்பற்றி விரிவாகக் கூறும் நூலாக இது விளங்குகிறது. இந்நூலின் விரிவு கருதி, இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தில் சோதிடம் தொடர்பான அடிப்படைச் செய்திகளாக காலநிகண்டு, காரக நிகண்டு ஆகியவை அமைந்துள்ளன. இப்பகுதியில் பாயிரப் பாடல்களோடு சேர்த்து 260 விருத்தப் பாடல்கள் உள்ளன. இரண்டாம் பகுதியில் இலக்கன பாவம் முதல் பன்னிரண்டாம் பாவம் வரையில் உள்ளது. இப்பகுதியில் 1303 விருத்தப் பாடல்கள் உள்ளன. ஓலைச் சுவடியில் மூலம் மட்டுமே அமைந்திருந்தது. படிப்போருக்கு எளிமை கருதி, பதிப்பாசிரியரால் இப்பாடல்களுக்கு உரை எழுதப்பட்டுள்ளது.

**நூலாசிரியர்**

சாதக சிந்தாமணி என்ற இந்நூலின் ஆசிரியர் தில்லைநாயகப் புலவர். தமிழிலக்கிய வரலாற்றினை எழுதிய கா. சுப்பிரமணியப்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர் வரிசையில், திருவானைக்காத் தில்லைநாயக சோதிடர் என்பவர் சாதக சிந்தாமணி என்னும் சோதிட நூலை இயற்றினார் என்று எழுதியுள்ளார். தில்லைநாயகர் திருவானைக்கா என்னும் பதியிலே பிறந்தார் என்பதற்குச் சான்றாகச், சாதக சிந்தாமணியில்,

அம்புவனப் பொரியோர்பால் சாதகசிந் தாமணியென்
றடியேன் சொல்லச்
சம்புவன நாதர்பங்கில் அகிலாண்ட தேவியவர்
சரணம் காப்பாம். (சாதகசிந்தாமணி; பாயி: 3)

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன. சம்புவன நாதரையும் அகிலாண்ட தேவியையும் துதித்ததிருப்பதால், இவர் திருவானைக்காவில் பிறந்தவராக இருக்கலாம் என்று கருதினார் போலும். ஆனால் இவர் இயற்றிய காலச்சக்கரம் என்ற நூலின் சிறப்புப் பாயிரத்தில்,

"அருணெறி தழைக்குந் தொண்டைநன் னாட்டில்
அணிதிகழ் நந்திமா நகர்வாழ்
இருநிதி யானையான் அருந்தவ னாதன்
இசைந்தருள் தில்லைநா யகனே" (காலச்சக்கரம்; பாயி :2)

என வருவதைக்கொண்டு இவர் தொண்டை நாட்டில் நந்திமா நகரில் பிறந்தவர் என்பது புலனாகிறது. மேலும் இந்நூலாசிரியரின் தந்தையார் பெயர் அருந்தவநாதன் என்பதயைும் அறியலாம்.

"திரைகொடா வழுதிப் புகழ்தொண்டை நாடன்
தில்லை நாயக மகபதியே"

என்ற யோக மஞ்சரி நூலின் இறுதிப் பாடலும் இவர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் என்பதைக் கூறும் சான்றாக விளங்குகிறது.

"காராளன் புகழ்தொண்டை வளநாட்டில் நந்தியர்கோன்
கமழும் காவித்
தாராளன் பெருபற்றப் புலியூரான் கனகசபை
தன்னைப் போற்றும்
ஏராளன் அருந்தவன்சேய தில்லைநாய கன்கணிதத்
தியற்கை யாயும்
சீராளன் சாதகசிந் தாமணியென் பொருள்விளங்க
செப்பி னானால்" (சாதக சிந்தாமணி; பாயிரம்:10)

என்ற பாயிரப்பாடலால் அருந்தவநாதன் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதையும் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளியுள்ள கனகசபையைப் போற்றுபவர் என்பதால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதையும் இவருடைய புத்திரரே தில்லைநாயகன் என்பதையும் அறியலாம். மேலும் 'அட்டகவர்க்கம்' என்ற நூலின் பாயிரத்தில்,

"அருந்தவன் செல்வன் தில்லைநா யகவேள்
அரும்பொருள் விரித்துரைத் தனனே"
(அட்டவர்க்கம் பாடல் எண்: 107)

என்று கூறப்பட்டுள்ளது. இதில் அருந்தவநாதனின் மைந்தன் தில்லை நாயகவேள் என்று சுட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

"தொல்லைநா யகன்வஞ்செய் சிவகாம வல்லிபதம்
தொழுது போற்றித்
தில்லைநாயக னடியேன் சாதகசிந் தாமணியைச்
செப்ப லுற்றேன்"
(சாதக சிந்தாமணி பாயிரம்: 11)

என்ற பாடலடிகள் தில்லைநாயகப் புலவர், தில்லை நாயகனான சிவபெருமான் மீது எல்லையற்ற அன்பு பூண்டவர் என்பதையும் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதையும் காட்டுகின்றன.

**ஆசிரியர்**

தில்லைநாயகப்புலவர், ஆசிரியர், ஞானாசிரியர் இரண்டு ஆசிரியர்களைப் பெற்றவர். சாதக சிந்தாமணியில்

"உண்ணிறைந்த இருள்நீக்கிப் பொருளிதென உணரவைத்த
உண்மை ஞானக்
கண்ணிறைந்த வேங்கடா சலசாமித் திருவடிதன்
கருத்துள் வைப்பாம்
எண்ணிறந்த எழுத்தறிவித் தியல்பாகக் கண்கருத்தும்
இலங்கச் செய்த
பண்ணிறைந்த அம்மையப்ப பூபாலன் துணைமலர்த்தாட்
பணிதல் செய்வாம்"
(சாதகசிந்தாமணி; பாயிரம்:5

என்று கூறப்பட்டிருப்பதன் வாயிலாக இவருடைய ஞானாசிரியர் வேங்கடாசலசாமி என்பதையும், இருவருக்கு எண்ணும் எழுத்தும் அறிவித்த ஆசிரியர் அம்மையப்ப பூபாலர் என்பதையும் அறியலாம்.

**வடமொழி ஆசிரியர்**

தில்லைநாயகப் புலவர் தமிழில் நல்ல தேர்ச்சி உடையவர். அதைப் போலவே வடமொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கியுள்ளார்.

"திருந்திய பாரிலே அஷ்டக வர்க்கச்
சிறப்பினைக் கங்கைவார் சடையோன்
முருந்துறழ் முறுவல் உமையவட குரைத்த
முதுமறை தனைமுனி வரர்தம்
பொருந்திய பொருளால் வடமொழி யதனாற்
புகன்றன றதனைச்செந் தமிழால்
அருந்தவன் செல்வன் தில்லைநா யகவேள்
அரும்பொன் விரித்துரைத் தனனே."
(அஷ்ட வர்க்கம்; பாயிரம்: )

வடமொழியிலமைந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளமைப் புலனாகும். மேலும்,

"நறைகமழ் கமலப் பொருட்டில்வீற் றிருக்கும்
நான்முகக் கடவுள்தான் படைத்த
நிறையுள மாந்தர் வினைப்பய னதனால்
நிலையெனு யோகமஞ் சரியாம்
உரையென வழங்கும் வடமொழி யதனை
தூயசெந் தமிழ்வாற் செய்தான்
திரைகொடா வழுதிப் புகழ்தொண்டை நாடன்
தில்லை நாயக மகபதியே"
(யோகமஞ்சரி பாயிரப்பாடல்)

என்ற இவர் செய்த மற்றொரு நூலும் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் எழுதியதைச் சுட்டுகிறது. இதையன்றி,

"திருவுடன் பிறந்த குழவிவெண் டிங்கட்
செஞ்சடைக் கடவுளம் பிகைக்கே

பொருள்விரித் துரைத்த காலசக் கரத்தைப்
புதியசெந் தமிழாற் செய்தோன்"
(காலச்சக்கரம்; பாயிரம் 2)

என்ற பாடலால் காலச்சக்கரத்தை வடமொழியில் இருந்து மொழிபெயர்த்துள்ளதும் புலனாகும்.

இவற்றால் தில்லைநாயகப்புலவர் வடமொழியில் நல்ல தேர்ச்சிப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. வடமொழியில் உள்ள நூல்களை மொழிபெயர்த்துவைக்க இவருக்குப் பேருதவி புரிந்த பெரியார் அந்தணர் குலத்தில் வடமர் என்னும் குடியில் பிறந்த ஈசுரையர் புதல்வர் அண்ணா சாஸ்திரியார் என்பவராவார்.

நறையிருக்கும் சத்தளபங் கயத்தாமன் வடமரமச
நாக ரீகன்
நிறையிருக்கும் ஈசுரையன் செல்வனண்ணா சாஸ்திரிகள்
நெடுநீர் வைப்பின்
மறையிருக்கும் சோதிடமாம் வடமொழியைப்பெயர்த்துரைக்க
வருமீ ராறு
துறையிருக்கும் சாதகசிந் தாமணிஎன் றேதமிழாற்
சொல்வன் மாதோ!
-(சாதக சிந்தாமணி;பாயிரம்; பாடல்7)

என்ற பாடல் இதனை உணர்த்தும். மேலும் பன்னிரு துறைகளை உடையதாக இந்நூலின் உள்ளமைப்பையும் ஆசிரியர் கூறியுள்ளதை அறியலாம்.

இவையன்றி, "திரைகொடா வழுதிப் புகழ்தொண்டை நாடன் தில்லை நாயக மகபதியே" (யோகமஞ்சரி; பாயிரப் பாடல்) "தில்லை நாயக வேள் அரும்பொருள் விரித்துரைத் தனனே" (அஷ்டவர்க்கம்; பாயிரப்பாடல்) ஆகிய பாடலடிகளில் தில்லைநாயகரை மகபதி; வேள் என்று கூறியிருப்பதால் இவர் தொண்டைநாட்டின் சிற்றரசனாக இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம்.

## சாதக சிந்தாமணி பெயர்க்காரணம்

தமிழில், அனுபவ நட்ட சாதக சிந்தாமணி, சுந்தரானந்தர் கர்ப்ப சிந்தாமணி, கௌசிக சிந்தாமணி, சமர சிந்தாமணி, சர்வயோக தயாபர சிந்தாமணி, சோதிட கிரக சிந்தாமணி, சோதிட கோட்சார சிந்தாமணி, தசாபுத்தி சிந்தாமணி, நட்சத்திர சிந்தாமணி, நவக்கிரக சிந்தாமணி எனச் சிந்தாமணி என்ற பெயரில் பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது சாதக சிந்தாமணி. சாதக சிந்தாமணி என்பதற்கு, சாதகம் கூறும் நூல்கள் யாவற்றிலும் சிறந்த அற்புதமணி என்பது பொருள். சாதகம் குறித்து அறிய விரும்பும் யாவருக்கும் அனைத்து செய்திகளையும் விரிவான நூலாக ஒப்பற்ற நூலாக விளங்குகின்ற தன்மையால் இப்பெயர் பெற்றது போலும். நன்னூலில், முதனூல் என்னும் சூத்திரவுரையில் தன்மையாற் பெயர்பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின என்று மயிலைநாதர் எழுதியிருப்பது இங்கு எண்ணத்தக்கது.

## நூலமைப்பு

சாதக சிந்தாமணியில் முதலில் காப்புச் செய்யுள்களும் பாயிரப்பாடல்களும் சேர்ந்து பன்னிரு பாடல்கள் அமைந்துள்ளன. நூலில் கலிவிருத்தம் அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தப்பாடல்கள் அமைந்துள்ளன. நூலின் தொடக்கத்தில் சாதகத்தை அறிந்துகொள்வதற்கான அடிப்படைச் செய்திகள் 260 பாடல்களில் அமைந்துள்ளன. இதனையடுத்து பன்னிரு பாவங்களின் பலன்களையும் கூறக்கூடிய நூலாக விளங்குவதால், ஒவ்வொரு பாவத்திற்கும் தனித்தனியான பலன்களைக் கூறும் பன்னிரு பகுப்புக்களாக அமைந்துள்ளன.

சாதக சிந்தாமணி நூலில், பாயிரப் பகுதியை அடுத்துள்ள நூலின் பகுதியில், சோதிடத்திற்கு அடிப்படையாக அமையக்கூடிய செய்திகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. அவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. 1. கால நிகண்டு, 2. காரக நிகண்டு.

காலநிகண்டு பகுதியில், வாரம், திதிகள், நட்சத்திரங்கள், கரணம், யோகம், இராசிகள், கோள்கள் முதலானவற்றின் வெவ்வேறு பெயர்கள் தரப்பட்டுள்ளன. சோதிட நூல்களில் மேற்கண்டவற்றின் பல்வேறு பெயர்களும் பரவலாகப் பயன்படுத்தப்படுவதால் இவற்றின் வெவ்வேறு பெயர்களை அறிந்துகொள்ளுதல் சோதிட நூலைப் புரிந்துகொள்ள பெரிதும் உதவக்கூடியதாகும்.

காரக நிகண்டு பகுதியில், இராசிகளின் உருவங்கள், காரகங்கள், அமிர்த பாகை, ஊண் வகைகள், நோக்கு, வலிமை முதலான பல்வகையான செய்திகள் கூறப்பட்டுள்ளன. கிரகங்களின் கால்கள், சலகிரகங்கள், தாது, மூல கிரகங்கள், கிரகங்களின் வலிமை, குளிகன், சாரம், ஓரை, ஓராதிபர், தினவோரை, திரேகாண தோற்றங்கள், அங்கிசங்கள், தெய்வசமயம், கேந்திராதிகளின் பெயர்கள். கிரியா கமனம், மூலத்திரேகாணம், கிரகங்களின் பார்வை, பார்வையின் அளவு, அந்தப் பார்வையின் வலிமை, அந்தப் பார்வையின் இயல்பு, கிரகங்களின் பலக்குறைவு, கிரகயுத்தம், கிரகநிலை முதலான செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், அதியுச்சம், அஸ்தமனம், அதிநீசம் போன்றவைகளும், சாயா கிரகங்களைக் குறித்த தூமாதி பஞ்சக்கிரகங்களின் ஸ்புடம், பாசகாதிபர்களின் உச்சம், பரிவேடம் முதலியவற்றின் உச்சம், குளிகாதிபர் நிலை, பாசகாதியர்களின் கதி முதலான செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

இவையன்றி சயன இராகுவின் அடைவு, அதன்பலன், பல்வேறு வகையான இலக்கனங்கள், நட்சத்திரமண்டலம், புஷ்கரயோகம், மிருத்துபாகம், வாரமுக்குணவேளை, இராகு காலம், கிரகங்களின் அதிகாரம், அங்க நட்சத்திரம், அதன் பலன் வார, திதி, நட்சத்திர, இலக்கனத் தியாச்சியங்கள், இரவி வீதி, கவிப்பு, கிரக உரைப்பு, உபக்கிரக வேதை, திரேகாண இலக்கனம், பாவ இலக்கனம், துவாங்கிச பலன்கள், பிணித்தொகுப்பு, இராசிகளும் இடங்களும் பொதுவிதி அறிதல், கிரகங்களின் காரகத்துவம் பன்னிரு

பாவங்களின் பலன், பன்னிரு இலக்கனங்களில் பிறந்தோரின் குண நலன்கள் போன்றவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சோதிடத்தின் அடிப்படையான செய்திகளைக்கூறும் இந்நூல், சோதிடத்தைக் கற்றுக்கொள்ள விரும்புவோர்க்கும் சோதிட ஆர்வலர்களுக்கும் சோதிட ஆராய்ச்சியாளர் களுக்கும் பயனுள்ளதாகும்.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி சாதக சிந்தாமணி என்னும் இந்நூலை பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குனர் உயர்திரு சா. விஜய ராஜ்குமார்,இ.ஆ.ப., அவர்களுக்கும், இந்நூல் நல்ல முறையில் வெளிவரத் துணை நின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த நூலக கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப்பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா. சத்தியபாமா**
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்

பக்கம்

காப்பு 1
பாயிரம் 1
காலநிகண்டு 8
வாரத்தின் பெயர்கள் 8
திதிகளின் பெயர்கள் 8
நட்சத்திரங்களின் பெயர்கள்
அசுவதி-பரணி-கிருத்திகை ஆகியவற்றின் பெயர்கள் 9
உரோகணி-மிருகசீரிடம்-திருவாதிரை ஆகியவற்றின் பெயர்கள் 9
புனர்பூசம்-பூசம்-ஆயிலியம்-மகம் ஆகியவற்றின் பெயர்கள்10
பூரம்-உத்திரம்-அஸ்தம் ஆகியவற்றின் பெயர்கள் 10
சித்திரை-சுவாதி-விசாகம்-அனுடம் ஆகியவற்றின் பெயர்கள் 11
கேட்டை-மூலம்-பூராடம் ஆகியவற்றின் பெயர்கள் 11
உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-சதயம் ஆகியவற்றின் பெயர்கள் 12
பூரட்டாதி-உத்திரட்டாதி-இரேவதி ஆகியவற்றின் பெயர்கள் 12
யோகத்தின் பெயர்கள் 13
கரணத்தின் பெயர்கள் 13
இராசிகளின் பெயர்கள் 14
மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம் ஆகிவற்றின் பெயர்கள் 14

சிம்மம்-கன்னி-துலாம்-விருச்சிகம் ஆகியவற்றின் பெயர்கள் 14

தனுசு-மகரம்-கும்பம்-மீனம் ஆகியவற்றின் பெயர்கள் 15

கோள்களின் பெயர்கள் 15

சூரியனின் பெயர்கள் 15

மதியின் பெயர்கள் 16

செவ்வாய்-புதன் ஆகியோரின் பெயர்கள் 17

குரு-சுக்கிரன் ஆகியோரின் பெயர்கள் 17

சனி-இராகு-கேது-குளிகன் இவர்களின் பெயர்கள் 18

**காரக நிகண்டு இராசிகளின் உருவங்களும் காரகங்களும்**

மேஷத்தின் உருவமும் காரகமும் 19

இடபத்தின் உருவமும் காரகமும் 19

மிதுனத்தின் உருவமும் காரகமும் 20

கடகத்தின் உருவமும் காரகமும் 20

சிம்மத்தின் உருவமும் காரகமும் 21

கன்னியின் உருவமும் காரகமும் 21

துலாத்தின் உருவமும் காரகமும் 22

விருச்சிகத்தின் உருவமும் காரகமும் 22

தனுசுவின் உருவமும் காரகமும் 23

மகரத்தின் உருவமும் காரகமும் 23

கும்பத்தின் உருவமும் காரகமும் 24

மீனத்தின் உருவமும் காரகமும் 24

இராசிகளின் அமிர்த பாகை 25

இராசியூறும் சல இராசிகளும் 25

கிரகங்களின் கால்களும் சல கிரகங்களும் 26

தாது மூல கிரகங்கள் 26

உதயங்களும் கர்ப்ப, துவார, வான்மீயங்களும் 27

இராசிகளின் திசை நோக்கு 27

இராசிகளின் வகைகள் 28

இராசி வலிதும் கிரகங்களின் காலவலிதும் 28

இரவிமதி பாக இராசிகளில் நின்ற கிரகங்களின் வலிமை 29

இரவிமதி பாக இராசிகளில் நின்ற கிரகங்களின் நட்பு ஆட்சி, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமத்துவம் 29

புதன், குரு கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமத்துவம் 30

சுக்கிரன், சனி கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமத்துவம் 31

இராகுவுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் 32

கேதுவுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் 32

குளிகனுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் 33

குளிகன் சாரம் 33

ஓரைகள் 34

ஓராதிபர்கள் 34

தினவோரையும் அதன் பலன்களும் 35

**திரேகாணங்களும் அவற்றின் தோற்றங்களும்**

மேஷத்தின் முதற்றிரேகாணம் தோற்றம் 36

மேஷத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 37

மேஷத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 37

இடபத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 38

இடபத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 38

இடபத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 39

மிதுனத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 39

மிதுனத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 40

மிதுனத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 40

கடகத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 41

கடகத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 41

கடகத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 42

சிம்மத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 42

சிம்மத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 43

சிம்மத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 44

கன்னியின் முதற்றிரேகாணத் தோற்றம் 44

கன்னியின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 45

கன்னியின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 45

துலாத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 46

துலாத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 46

துலாத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 47

விருச்சிகத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 47

விருச்சிகத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 48

விருச்சிகத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 48

தனுசுவின் முதற்றிரேகாணத் தோற்றம் 49

தனுசுவின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 49

தனுசுவின் மூன்றாம் திரேகணத் தோற்றம் 50
மகரத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 50
மகரத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 51
மகரத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 51
கும்பத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 52
கும்பத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 52
கும்பத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம் 53
மீனத்தின் முதற்றிரேகாணத் தோற்றம் 53
மீனத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம் 54
மீனத்தின் மூன்றாம் திரேகாணத்தோற்றம் 54
நவாங்கிசம் அறியும்படி 55
துவாதாங்கிசம் அறியும்படி 55
திரிமிசாங்கிசம் அறியும்படி 56
சப்தாங்கிசம் அறியும்படி 57
தசாங்கிசம் அறியும்படி 58
சோசாங்கிசம் அறியும்படி 58
சஷ்டியாங்கிசம் அறியும்படி 59
தெய்வ சமயம் அறியும்படி 62
கேந்திராதிய பெயர்கள் 63
தற்கால மித்திரம் அறிதல் 64
தோஷம் தீர்த்தல் 64
கிரியா கமனம் அறியும்படி 65
மூலத்திரிகோணம் அறியும்படி 66
நவக்கிரகப் பார்வை 67

| | |
|---|---|
| கிரக நோக்கின் அளவு | 68 |
| கிரக நோக்கின் வலிமை | 68 |
| இராசி நோக்கு | 69 |
| கிரக நோக்க இயல்பு | 70 |
| சாதகன் குணம் அறியும்படி | 71 |
| அதியுச்சம் அறியும் வகை | 71 |
| அஸ்தமனம் அறியும்படி | 72 |
| கிரக பலக்குறைவு | 72 |
| கிரக யுத்தம் | 73 |
| கிரகநிலை, கால் | 74 |
| அதியுச்சம், அதிநீசம் அறியும்படி | 74 |
| தூமாதி பஞ்சக்கிரகங்களின் ஸ்புடம் | 75 |
| பாசகாதிபர்களின் உச்சம் | 75 |
| பரிவேடம் முதலியவற்றின் உச்சம் | 76 |
| குளிகாதிபர் நிலை | 76 |
| பாசகாதியர்களின் கதி | 77 |
| சயன இராகுவின் அடைவும் அதன் பலனும் | 78 |
| சயன இராகுவின் பலன் | 78 |
| ஓரா இலக்கனம் | 79 |
| கடிகா இலக்கனம் | 79 |
| ஓராதிய இலக்கன பலன் | 80 |
| ஆரூட இலக்கனம் | 80 |
| ஆரூட இலக்கன பலன் | 81 |
| நட்சத்திர இலக்கனம் அறியும்படி | 82 |
| நட்சத்திர இலக்கன பலன் | 82 |
| காரக இலக்கனம் | 83 |

ஆதரிச இலக்கனம் 84
ஆயுர் இலக்கனம் 84
நட்சத்திர மண்டலங்கள் 86
விஷக்கடிகை 86
புஷ்கர யோகம் 87
மிருத்து பாகம் 88
வார, முக்குண வேளை 88
இராகு காலம் 89
கிரகங்களின் அதிகாரம் 89
அங்க நட்சத்திரம் அறியும்படி 90
அங்க நட்சத்திர பலன் 91
வாரதியாச்சியம் 92
திதி தியாச்சியம் 93
நட்சத்திர தியாச்சியம் 94
இலக்கனத் தியாச்சியம் 95
இரவிவீதி அறியும்படி 96
கவிப்பு அறியும்படி 96
கிரக லப்தை அல்லது கிரக உதைப்பு 96
உபக்கிரக வேதை 99
திரேகாண இலக்கனம், பாவ இலக்கனம் இவற்றை அறியும்படி 100

**துவாதாங்கிச பலன்கள்**

மேட துவாதாங்கிச பலன் 101
இடப துவாதாங்கிச பலன் 101
மிதுன துவாதாங்கிச பலன் 102
கடக துவாதாங்கிச பலன் 102

| | |
|---|---|
| சிம்ம துவாதாங்கிச பலன் | 103 |
| கன்னி துவாதாங்கிச பலன் | 104 |
| துலா துவாதாங்கிச பலன் | 104 |
| விருச்சிக துவாதாங்கிச பலன் | 105 |
| தனுசு துவாதாங்கிச பலன் | 105 |
| மகர துவாதாங்கிச பலன் | 105 |
| கும்ப துவாதாங்கிச பலன் | 107 |
| மீன துவாதாங்கிச பலன் | 107 |
| பிணித்தொகுப்பு | 108 |
| இராசிகளும் இடங்களும் | 119 |
| பொதுவிதி அறிதல் | 122 |
| கிரகங்களின் காரகத்துவம் | 127 |


**ஸ்தான பலன்கள்**


| | |
|---|---|
| இலக்கன ஸ்தான பலன் | 132 |
| இரண்டாம் ஸ்தான பலன் | 132 |
| மூன்றாம் ஸ்தான பலன் | 133 |
| நான்காம் ஸ்தான பலன் | 133 |
| ஐந்தாம் ஸ்தான பலன் | 134 |
| ஆறாம் ஸ்தான பலன் | 134 |
| ஏழாம் ஸ்தான பலன் | 135 |
| எட்டாம் ஸ்தான பலன் | 135 |
| ஒன்பதாம் ஸ்தான பலன் | 136 |
| பத்தாம் ஸ்தான பலன் | 136 |
| பதினோராம் ஸ்தான பலன் | 137 |
| பன்னிரண்டாம் ஸ்தான பலன் | 137 |

## இலக்கன பலன்


மேஷ இலக்கன பலன் *138*

இடப இலக்கன பலன் *139*

மிதுன இலக்கன பலன் *140*

கடக இலக்கன பலன் *142*

சிம்ம இலக்கன பலன் *143*

கன்னி இலக்கன பலன் *144*

துலா இலக்கன பலன் *145*

விருச்சிக இலக்கன பலன் *146*

தனுசு இலக்கன பலன் *147*

மகர இலக்கன பலன் *148*

கும்ப இலக்கன பலன் *149*

மீன இலக்கன பலன் *150*




# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.

# சாதக சிந்தாமணி

## [கால நிகண்டு, காரக நிகண்டு]

### நூல்



### காப்பு

சீராயும் பார்மேற் சிறப்புடைய சோதிடத்தோர்
ஆராயும் சாதகசிந் தாமணிக்குப் - பேராயும்
வெற்பகத்தின் தந்தைமைந்தன் வேதமுதல் ஆதரிக்கும்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு. *(1)*

**(இதன் பொருள்)** சிறப்புமிக்க இப்பூவுலகில சோதிடக் கலையில் வல்லவர்கள் ஆராயக்கூடிய சாதக சிந்தாமணி என்ற இந்நூல், சிறப்புற நிறைவேற கயிலயங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் மைந்தனாக விளங்கும் வேதங்களெல்லாம் போற்றக் கூடிய விநாயகப் பெருமானின் பொன்போன்ற பாதக்கமலங்கள் காப்பு என்றவாறு.

### பாயிரம்

பூமருவும் பாரதத்தைத் தவராச முனிராசன்
புகழ்ந்து கூற
மாமருவு மேருகிரி ஏடாக எழுத்தாணி
வன்கோ டாகத்
தேமருவும் பொருளுணர்ந்து விரைத்தெழுந்து காரணத்தன்
செவ்வேள் முன்னோன்
காமருவோர் கொம்பனிரு செவியன்முக் கணால்வாயைங்
கரத்தோன் காப்பாம். *(2)*

(இ-ள்.)இப்புவியுலகோரெல்லாம் புகழ்ந்து கூறும் மகாபாரதக்கதையைத் தவமுனிவராகிய வியாசர் எடுத்துரைக்க, மேரு மலையை ஓலைச்சுவடியாகவும் தன்னுடைய தந்தத்தை எழுத்தாணியாகவும் கொண்டு, சிறந்த பொருளினை நன்குணர்ந்து விரைந்து எழுதியவனான, முருகப்பெருமானின் மூத்தவனான ஓர் கொம்பினையும் இரண்டு செவிகளையும், மூன்று கண்களையும் நால் வாயினையும் ஐந்து கரங்களையும் கொண்ட விநாயகப்பெருமான், இந்நூல் நிறைவுற காக்க வேண்டும் என்றவாறு.

## கலைமகள் வணக்கம்

துதிமணக்கும் சாதகசிந்தாமணியென்றினிதுரைக்க
சொல்வ ழாமல்
விதிமணக்கும் பளிங்கனையாள் கைகால்வாய் மிகச்சிவந்தாள்
வேற்கண் கூந்தல்
பதிமணக்கும் கருநிறத்தாள் புத்தகநன் னீர்க்கரகம்
படிக மாலை
மதிமணக்கும் சின்முத்திரை இலங்குபா ரதித்துணைத்தாள்
மனத்துள் வைப்பாம். (3)

(இ-ள்.) சாதக சிந்தாமணி என்ற இந்நூலை சொற்குற்றம் பொருள் குற்றமின்றி எடுத்துரைக்க, பளிங்கினைப் போன்றவளும் கை, கால், வாய் முதலானவை சிவந்த நிறத்துடன் காட்சிதர விளங்கக் கூடியவளும்,வேல் போன்ற கூரிய பார்வையையுடைய கண்களையும், அழகிய கூந்தலையும் கொண்டு இவ்வுலகெல்லாம் போற்றும் வண்ணம் திகழ்பவளும் கரிய நிறம் கொண்டு தன் சக்கரங்களில் புத்தகம், நன்னீர்க்கரகம், படிகமாலை இவற்றை ஏந்தி, அறிவூட்டும் சின்முத்திரையுடன், காட்சிதரும் கலைமகளின் இரு திருப்பாதங்களை மனதில் எண்ணுகிறேன்.

கம்புவனத் தாமரையாள் செங்கண்மால் சோதிடத்தைக்
கரைகா ணார்கள்
கும்புவனத் தாருலகிற் பலசுருதி சொல்வதென்ன
கோல மன்றோ
அம்புவனம் பெரியோர்பாற் சாதகசிந் தாமணியென்
றடியேன் சொல்லச்
சம்புவன நாதர்பங்கில் அகிலாண்ட தேவியிவர்
சரணம் காப்பாம். (4)

*(இ-ள்.)* திருமகளின் கணவனாம் சிவந்த கண்களை யுடைய திருமால் எடுத்துரைத்த கரைகாண இயலாத சோதிடக்கலையை இவ்வுலகில் நூலாகச் சொல்லக் கருதுதல் விநோதமல்லவா ! அவ்வகையில் அழகான சம்புவனத்தில் (திருவானைக்கா) வாழும் பெரியோர்களிடத்தில் சாதக சிந்தாமணி என்ற இந்நூலை அடியவனாகிய நான் எடுத்துரைக்க, சம்புவன நாதரின் ஒருபால் வீற்றிருக்கக் கூடிய அகிலாண்டதேவியின் திருபாதக்கமலங்களைச் சரணடைந்தேன். காப்பாளாக! என்றவாறு.

## பல கடவுள் வணக்கம்

ஏர்கொண்ட சோதிடத்தை எண்ணரிய முனிவோர்கள்
இயல்பு நூலிற்
யார்கொண்ட பலசுருதிப் பொருத்தமுஞ்சா தகமுகூர்த்தம்
பலவு மாகப்
பேர்கொண்ட வகையதனிற் சாதகசிந் தாமணியென்
றினிது பேசக்
கார்கொண்ட கரிமுகன்செவ் வேடிருமா லயன்மலர்த்தாள்
காப்ப தாமே. (5)

*(இ-ள்.)* எண்ணரிய முனிவர்கள் பலரும் சோதிடத்தினை பொருத்தம், சாதகம்,முகூர்த்தம் போன்ற பொருண்மைகளில் தங்கள் நூல்களில் பலவாறாக எடுத்துரைத்திருக்க, அவ்வகையில் சாதக சிந்தாமணி என்ற இந்நூலையும்

அனைவரும் சிறப்பாகப் பேசும் வண்ணம் நிறைவேற விநாயகன், முருகன், திருமால், பிரமன் போன்றோரின் மலர்ப்பாதங்கள்காப்பாக அமைய வேண்டும் என்றவாறு.

## ஆசிரியர் வணக்கம்

*உண்ணிறைந்த இருள்நீக்கிப் பொருளிதென உணரவைத்த*
*உண்மை ஞானக்*
*கண்ணிறைந்த வேங்கடா சலசாமித் திருவடிதன்*
*கருத்துள் வைப்பாம்*
*எண்ணிறைந்த எழுத்தறிவித் தியல்பாகக் கண்கருத்தும்*
*இலங்கச் செய்த*
*பண்ணிறைந்த அம்மையப்ப பூபாலன் துணைமலர்த்தாட்*
*பணிதல் செய்வாம். (6)*

(இ-ள்.) மனதிலே நிறைந்திருந்த அறியாமை இருளைப் போக்கி, உண்மைப் பொருளினை உணரச் செய்த ஞானம் நிறைந்த **ஆசிரியர் வேங்கடாசலசாமி** அவர்களின் திருவடிகளை என் நெஞ்சில் வைக்கின்றேன். எண்ணையும் எழுத்தையும் எனக்கு இயல்பாக உணர்த்தி, கண்ணையும் கருத்தையும் விளங்கச்செய்த ஆசிரியர் **அம்மையப்ப பூபாலன்** அவர்களின் இரு மலர்ப்பாதங்களையும் பணிந்து வணங்குகின்றேன் என்றவாறு.

## நூல் வரலாறு

*நறையிருக்கும் சத்தளபங் கயத்தாமன் வடமரம்ச*
*நாக ரீகன்*
*நிறையிருக்கும் ஈசுரையன் செல்வனண்ணா சாஸ்திரிகள்*
*நெடுநீர் வைப்பின்*
*மறையிருக்கும் சோதிடமாம் வடமொழியைப்பெயர்த்துரைக்க*
*வருமீ ராறு*
*துறையிருக்கும் சாதகசிந் தாமணிஎன் றேதமிழாற்*
*சொல்வன் மாதோ! (7)*

(இ-ள்.) தேன் நிறைந்திருக்கக் கூடிய தாமரை மலர்களாலான மாலையை அணிந்த வடமர் குலத்தில் உதித்த அறிவார்ந்த **ஈசுவரயரின்** புதல்வரான **அண்ணா சாஸ்திரிகள்**, வடமொழியில் உள்ள சோதிட நூல்கள் பலவற்றையும் மொழிபெயர்த்துப் பன்னிரண்டு துறைகளை உடையதாக, இச்சாதக சிந்தாமணி நூலைத் தமிழில் நான் சொல்லுகின்றேன் என்றவாறு.

## அவையடக்கம்

*நிலைகொண்ட மகமேரு வரையடுத்த காகமும்பொன்*
*நிறம்பெற் றாற்போல்*
*வலைகொண்ட பாற்கடலைச் சார்ந்தநதி எல்லாமே*
*பாலாகி னாற்போல்*
*கலைகொண்ட பெரியகுழாத் தடைத்தலும்கட் கடைபடுமக்*
*காட்சி யாலென்*
*தலைகொண்ட புன்சொல்லும் நன்சொல்லாய்ப் பிறங்கிக்கத்*
*தக்க தாமால். (8)*

(இ-ள்.) பொன் போன்று பொலியக்கூடிய மகாமேரு மலையின் பக்கத்தில் நிற்கும் காகமும் அந்தப் பொன்னின் நிறத்தைப் பெற்றது போல, திருப்பாற்கடலைச் சார்ந்த ஆறுகளனைத்தும் பாலின் நிறத்தைப்பெற்று பாலானதைப் போல, பெரியோர்கள் நிறைந்த பெரிய கூட்டத்திற்கு இடையில் கீழானவர்களும் உயர்வானவர்களைப் போன்று விளங்குவதைப் போல, என்னால் சொல்லப்பட்ட சிறுமையுடைய சொல்லாகிய சாதக சிந்தாமணி நூலும் நல்ல சொற்கள் அமைந்த நல்ல நூலாக எண்ணப்படும் என்றவாறு.

*கற்பாய பெரியோர்கள் சாபானுக் கிரகமுள்ள*
*காட்சி யோர்கள்*
*பொற்பாய சோதிடமாம் வடமொழியைத் தமிழ்ப்படுத்திப்*
*புலவோர் முன்னம்*

எற்பாயும் சாதகசிந் தாமணியென் றேயடியேன்
இயம்பும் வண்ணம்
மற்பாய சர்பகதி தானைத்தொடர்ந்து கழுகுசென்ற
வண்மை யாமே. (9)

(இ-ள்.) இறைவனுடைய அனுக்கிரகம் பெற்ற காட்சியை உடைய பெரியோர்கள் பலரும் வடமொழியிலுள்ள சோதிட நூல்களைத் தமிழ்ப்படுத்திக் கூறியுள்ளனர். அத்தகைய புலவர்களுக்கு முன்னால் **சாதக சிந்தாமணி** என்று நான் பெயரிட்டு எழுத முனைதலானது பாம்பு சென்ற வழிதனைத் தொடர்ந்து கழுகு சென்ற தன்மையுடையதாம் என்றவாறு.

## நூற்பெயரும் நூலாசிரியர் பெயரும்

காராளன் புகழ்தொண்டை வளநாட்டில் நந்தியர்கோன்
கமழுங் காவித்
தாராளன் பெரும்பற்றப் புலியூரான் கனகசபை
தன்னைப் போற்றும்
ஏராளன் அருந்தவன்சேய் தில்லைநாய கன்கணிதத்
தியற்கை யாயும்
சீராளன் சாதகசிந் தாமணிஎன் பொருள்விளங்க
செப்பி னானால். (10)

(இ-ள்.) வேளாளனான, அனைவரும் புகழக்கூடிய தொண்டை நாட்டில் நந்திவர்மன் ஆண்ட நந்திமா நகரில் உள்ள தில்லையில் எழுந்தருளியுள்ள கனகசபையானான சிவபெருமானைப் போற்றும் **அருந்தவன்** என்பாரது மகனான **தில்லை நாயகன்**, சோதிடத்தின் தன்மைகளை ஆராய்ந்து பொருளுரைக்க **சாதக சிந்தாமணி** என்று பெயருடைய நூலை கூறினான் என்றவாறு.

எல்லைநாயக நடஞ்செய்பி ரளயத்தின் மார்க்கண்டர்க்
கிடமன் றீந்தோன்
முல்லைநா யகன்விரிஞ்சன் அடிமுடியும் தேடரிய
முதல்வன் முன்னோன்

தொல்லைநா யகன்வனஞ்செய் சிவகாம வல்லிபதம்
தொழுது போற்றித்
தில்லைநா யகனடியேன் சாதகசிந் தாமணியைச்
செப்ப லுற்றேன். (11)

(இ-ள்.) பிரளய காலத்தில் ஊழித்தாண்டவமாடிய சிவபெருமான், மார்க்கண்டேயருக்கு அருளியவன்; பிரம்மனும் திருமாலும் அடிமுடி தேட அரியவனாக விளங்கிய முதல்வன்; தெய்வங்களுக்கெல்லாம் முன்பே தோன்றிய தொல்லைகளைப்போக்கும் தலைவன்; அவனுடைய தலைவியான சிவகாமவல்லியின் திருமலர்ப் பாதங்களைத் தொழுது வணங்கி, தில்லை நாயகனாகிய நான், சாதக சிந்தாமணியாகிய இந்நூலைச் சொல்லத் தொடங்கு கிறேன் என்றவாறு.

குறிப்பு: விரிஞ்சன் - பிரமன்.

## நுதலிய பொருள்

மன்னுகோள் நட்பாட்சி பகைஉச்சம் நீசம்
வருத்தசம வர்க்ககிரி யாகமனம் திக்கில்
உன்னுபலம் கிரகயுத்தம் கிரகம் கூடல்
உதயமத்த மாம்பார்வை திசைகால சக்ரம்
பின்னுமங் கிசச்சக்ரம் கிரணபயிண் டிகமும்
பேசிலட்ட வர்க்கமுடன் சர்வாட்ட வர்க்கம்
மின்னுதயம் பகலிரவி ராசிகுண காரம்
வேதைநாட் டிதிவருட முதற்பலன்சா தகமே. (12)

(இ-ள்.) நிலைபெற்ற நவகோள்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் முதலானவையும், பத்துவித வர்க்கம், கிரியாகமனம், திக்பலம், கிரகயுத்தம், கிரக கூடல், உதயம், அத்தமனம், பார்வை திசைகள், காலச்சக்கரம், அங்கிச சக்கரம், கிரணம், பயிண்டிகம், அட்டவர்க்கம், சர்வாட்டக வர்க்கம், இராசி குணாகரம், வேதை, நாள், திதி, வருடபலன், சாதகம் ஆகியவையும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

பாயிரம் - முற்றிற்று.

## நூல்

# கால நிகண்டு

## வாரத்தின் பெயர்கள்

*சீர்பெறு ஞாயிறு திங்களும் செவ்வாய்*
*தார்பெறும் ஓர்புதன் தக்கவி யாழமும்*
*பேர்பெறு சுங்கன் பெருஞ்சனி என்றே*
*ஏர்பெறும் வாரப் பெயரிவை தாமே.* ★ *(1)*

*(இ-ள்.)* ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, என்பவை வாரத்தின் பெயர்களாகும்.

### திதிகளின் பெயர்கள்

*பிரதமை துவிதிகை திரிதிகை சதுர்த்தி*
*பெருகிய பஞ்சமி சஷ்டி*
*தரமுள சப்தமி அஷ்டமி நவமி*
*தசமியே காதசி மற்றைச்*
*சருவுது வாதசி யுந்திரி யோதசி*
*சதுர்த்தசி பவுரணை யாகும்*
*மருவுபிற் பக்கப் பிரதமை அம்மா*
*வாசையும் முதலுநன் முடிவே.* *(2)*

*(இ-ள்.)* சுக்லபட்ச பிரதமை, துவிதிகை, திரிதிகை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்தசி, பௌர்ணமியாகும். அமரபட்சப் பிரதமை, துவிதிகை, திரிதிகை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தி அமாவாசையாகும்.

---

★ இக்குறி இடப்பட்டப் பாடல்கள் அச்சுநூல்களில் கிடைத்தவை. பொருள் முழுமையைக் கருத்தில் கொண்டு ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன.

# நாட்களின் பெயர்கள்

## அசுவதி - பரணி - கிருத்திகை ஆகியவற்றின் பெயர்கள்

*பரிமருத் துவநாள் யாழ்ஏறு சென்னி*
*பகர்வாசி ஐப்பசி இரலை*
*மரிவுறு முதனாள் அசுபதி யாகும்*
*பகலவன் தாழிமுக் கூட்டும்*
*சரியுறு கிழவன் பூதஞ்சோ றடுப்புத்*
*தரும்நாள் பரணியே என்பர்*
*எரிபிறந் திடுநாள் நாவிதன் அங்கி*
*இறால்அழ கன்பர்கார்த் திகையே.* (3)

(இ-ள்.) பரி, மருத்துவநாள், யாழ், ஏறு, சென்னி, வாசி, ஐப்பசி, இரலை, முதனாள் ஆகியவை அசுபதியின் பெயர்கள். பகலவன், தாழி, முக்கூட்டு, கிழவன், பூதம், சோறு, அடுப்பு, ஆகியவை பரணியின் பெயர்கள். எரி, பிறந்திடுநாள், நாவிதன், அங்கி, இறால், அழகன் ஆகியவை கார்த்திகையின் பெயர்கள்.

## உரோகணி-மிருகசீரிடம்-திருவாதிரை ஆகியவற்றின் பெயர்கள்

*சகடுதே ரூற்றால் பிரமநாள் பண்டி*
*சதிவயம் விமானம்ரோ கணியே*
*மகசிர மும்மீன் மான்தலை மதிநாள்*
*மார்கழி மாழ்குபே ராளன்*
*திகழ்நரிப் புறமே பாலையே மிருக*
*சீரிட மாஞ்செங்கை யாழும்*
*நிகருமூ திரைஆ திரைசிவன் தினமும்*
*நீருரு ஆதிரை யாமே.* (4)

(இ-ள்.) சகடு, தேர், ஊற்றால், பிரமநாள், பண்டி, சதிவையம், விமானம் ஆகியவை உரோகணியின் பெயர்கள். மகசிரம், மும்மீன், மான்தலை, மதிநாள், மார்கழி, குபேராளன், நரிப்புறம், பாலை ஆகியவை மிருகசீரிடத்தின் பெயர்கள். மூதிரை ஆதிரை, செங்கை, யாழ், சிவன் ஆகியவை திருவாதிரையின் பெயர்கள்.

**புனர்பூசம் -பூசம் - ஆயிலியம் - மகம் - ஆகியவற்றின் பெயர்கள்**

*ஆதிநாள் புனர்தம் பிண்டியும் கரும்போ*
*டாவணம் எரிகழை தானே*
*திதுபுனர் பூசம் குருவிநாள் கொடிறு*
*சூழ்வண்டி காற்குளம் பூசம்*
*அதிசயம் பாம்போ டாவினாள் கௌவை*
*ஆனஆ யிலியம தாகும்*
*விதியுறு வேள்வி மிதிர்மாசி வாய்க்கால்*
*வேட்டுவன் சனியநாள் மகமே.* *(5)*

*(இ-ள்.)* அதிதிநாள், புனர்தம், பிண்டி, கரும்பு, ஆவணம், எரி, கழை ஆகியவை புனர்பூசத்தின் பெயர்கள். குருவிநாள், கொடிறு, வண்டி, காற்குளம் ஆகியவை பூசத்தின் பெயர்கள். அதிசயம், பாம்பு, ஆவிநாள், கௌவை ஆகியவை ஆயிலியத்தின் பெயர்கள். வேள்வி, மிதிர், மாசி, வாய்க்கால், வேட்டுவன், சனியநாள் ஆகியவை மகத்தின் பெயர்கள்.

**பூரம் - உத்திரம் - அஸ்தம் ஆகியவற்றின் பெயர்கள்**

*எலிபக வதிநாள் எழுஞ்சனி துர்க்கை*
*எய்கணை நாவிதன் பூரம்*
*பலிகொளும் சனியன் கதிர்பிறந் திடுநாள்*
*பங்குனி உத்திர மாகும்*
*வலியுறு களிறு சாமரம் அங்கி*
*வருக்கைமீன் கவுத்துவ நவ்வி*
*நலிகை மீனை விரல்சாந்தி நாளெனவும்*
*நவின்றனர் அத்தநாள் பெயரே.* *(6)*

*(இ-ள்.)* எலி, பகவதிநாள், எழுஞ்சனி , துர்க்கை, எய்கணை, நாவிதன் ஆகியவை பூரத்தின் பெயர்கள். சனியன், கதிர், பிறந்திடுநாள், பங்குனி ஆகியவை உத்திரத்தின் பெயர்கள். களிறு, சாமரம், அங்கி, வருக்கைமீன், கௌத்துவம், நவ்வி, ஐவிரல், சாந்திநாள் ஆகிவை அத்தத்தின் பெயர் கள்.

## சித்திரை-சுவாதி-விசாகம் -அனுடம் ஆயிவற்றின் பெயர்கள்

அளக்குநெய் பயறு தூசுமீன் தச்சன்
ஆடையே அறுவைசித் திரையாம்
விளக்கொடு மரக்கால் காற்றுகாண் டீபம்
வெறுநுகம் வீழ்க்கையும் சோதி
துளக்கும்வை காசி முந்துநாட் காற்றுச்
சுளகொடு முறமுற்றில் சேட்டை
பழக்கமாம் விசாகம் போந்தைமித் திரநாள்
பனையுடன் தேளுமே அனுடம். (7)

*(இ-ள்.)* நெய், பயறு, தூசு, மீன், தச்சன், ஆடை, அறுவை ஆகியவை சித்திரையின் பெயர்கள். விளக்கு, மரக்கால், காற்று, காண்டீபம், நுகம், வீழ்க்கை ஆகியவை சுவாதியின் பெயர்கள். வைகாசி முறம், முற்றில், சுளகு, முந்துநாள், காற்று, சேட்டை ஆகியவை விசாகத்தின் பெயர்கள். போந்தை, மித்திரநாள், பனை, தேள் ஆகியவை அனுடத்தின் பெயர்கள்.

## கேட்டை - மூலம் - பூராடம் ஆகியவற்றின் பெயர்கள்

ஈட்டிய சேட்டை எரிதழல் வேதி
இந்திரை நாளும்கேட் டையதாம்
தீட்டிய கொக்கு தேள்கடை குருகும்
சிலையன் றிலானிவில் லுடனே
ஊட்டிய அசுரர் நாளுமே மூலம்
உடைகுளம் முற்குளம் நீர்தாள்
நாட்டிய பூரா டப்பெய ரென்றே
நவின்றனர் நறைமலர் குழலே. (8)

*(இ-ள்.)* சேட்டை, எரிதழல், வேதி, இந்திரைநாள் ஆகியவை கேட்டையின் பெயர்கள். கொக்கு, தேள், காடை, குருகு, சிலை, அன்றில், வில், அசுரர் நாள் ஆகியவை மூலத்தின் பெயர்கள். உடைகுளம், முற்குளம், நீர்நாள் ஆகியவை பூராடத்தின் பெயர்கள் என்று சோதிடநூல்

வல்லுநர்கள் கூறியுள்ளார்கள் என்பதை நறுமணம் நிறைந்த பூக்களைச் சூடியுள்ள கூந்தலையுடைய பெண்ணே ! அறிவாயாக.

### உத்திராடம் - திருவோணம் - அவிட்டம் - சதயம் ஆகியவற்றின் பெயர்கள்

கடைநீர்க் குளமே ஆனிவிச் சுவநாள்
கருதாடி உத்திரா டந்தான்
அடையுறும் உலக்கைச் சிரவண மாகும்
அரித்தின மேதிரு வோணம்
புடையுறு காகம் வசுநாள் பறவை
புள்ளும்ஆ வணியுமே அவிட்டம்
மடையுறும் சுண்டன் செக்குபோர்க் குன்று
வருணநாள் சதயமு மாமே. (9)

(இ-ள்.) கடைநீர்குளம், ஆனி, விசுவநாள், ஆடி ஆகியவை உத்திராடத்தின் வேறு பெயர்கள். உலக்கை, சிரவணம், அரிதினம் ஆகியவை திருவோணத்தின் பெயர்கள். காகம், வசுநாள், பறவை, புள், ஆவணி ஆகியவை அவிட்டத்தின் பெயர்கள். சுண்டன், செக்கு, போர், குன்று, வருணனாள் ஆகியவை சதயத்தின் பெயர்கள்.

### பூரட்டாதி-உத்திரட்டாதி-இரேவதி ஆகியவற்றின் பெயர்கள்

போற்றுமுற் கொழுங்கோல் புரட்டாசி நாழி
பூரட்டா தியுமெனப் புகல்வார்
மாற்றரும் அரிய முரசுபிற் கோலே
மன்னவன் உத்திரட் டாதி
ஏற்றமாம் இரவி நாள்கலந் தோணி
இலங்கிய தொழுவுடன் நாவாய்
சோற்றிய கடைநாள் பெருநாளென் றேதான்
தூயரே வதிப்பெய ராமே. (10)

(இ-ள்.) முற்கொழுங்கோல், புரட்டாசி, நாழி ஆகியவை பூரட்டாதியின் பெயர்கள் என்றவாறு. அரியமுரசு, பிற்கோல், மன்னவன் ஆகியவை உத்திரட்டாதியின்

பெயர்கள் என்றவாறு. இரவிநாள், கலம், தோணி, நாவாய், தொழு, கடைநாள், பெருநாள் ஆகியவை இரேவதியின் பெயர்கள்.

**யோகத்தின் பெயர்கள்**

*மருவியவிட் கம்பமுட னேபிரிதி ஆயுஸ்*
*மான்சவுபாக் கியமும்சோ பனமும்அதி கண்டம்*
*தருசுகர்மந் திருதிச்சூ லங்கண்டம் விருத்திச்*
*சாற்றரிய துருவம்வியாக் காதம்அரி ஷணமும்*
*பெருகியவச் சிரம்சித்தி விதிபாதம் வரியான்*
*பெறுபரிகம் சிவஞ்சித்தம் சாத்யமுடன் சுபமும்*
*மருள்சுப்ரம் பிரமமுயர் ஐந்திரம்வை திருதி*
*ஆகுமிரு பத்தேழும் யோகமெனலாமே.* *(11)*

(இ-ள்.) விஷ்கம்பம், பிரீதி,ஆயுஸ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்யம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி ஆகிய இருபத்தேழும் யோகத்தின் பெயர்கள்.

**கரணத்தின் பெயர்கள்**

*பரிவிற் கரணப் பெயருரைக்கிற்*
*பவம்பா லவமும் கவுலவமும்*
*கரிய குழலாய் ! தைதுலையும்*
*கரசை வணசை பத்திரையும்*
*அரிய சகுனி சதுர்ப்பாதம்*
*ஆன நாக வாகரணம்*
*தெரிகி மித்துக் கரணமெனச்*
*செப்பும் பதினொன் றெனலாமே.* *(12)*

(இ-ள்.) பவம், பாலவம், கவுலம், தைதுலை, கரசை, வனசை, பத்திரை, சகுனி, சதுர்ப்பாதம், நாகவம், கிமித்து ஆகிய பதினொன்றும் கரணத்தின் பெயர்கள்.

## இராசிகளின் பெயர்கள்

### மேஷம் - ரிஷபம் - மிதுனம் - கடகம் ஆகியவற்றின் பெயர்கள்

கூறிய கொண்டல் வருடைமை ஆடு
சொறிமறித் தகருமே டமதாம்
ஏறுசே புல்ல மூரியான் குண்டை
இயல்விடை இடபமே என்பர்
மீறிய தண்டு செயமகள் வீணை
விழவுயா ழிரட்டையாம் மிதுனம்
தேறிய ஞெண்டு சேக்கைநண் டலவன்
செப்பிய நள்ளிகர்க் கடகம். *(13)*

*(இ-ள்.)* கொண்டல், வருடை, ஆடு, மறி, தகர் ஆகியவை மேஷத்தின் பெயர்கள். சே, புல்லம், மூரியான், குண்டை, விடை ஆகியவை இடபத்தின் பெயர்கள். தண்டு, சயமகன், வீணை, விழவு, யாழ், இரட்டை ஆகியவை மிதுனத்தின் பெயர்கள். ஞெண்டு, சேக்கை, நண்டு, அலவன், நள்ளி ஆகியவை கடகத்தின் பெயர்களாகும்.

### சிம்மம் - கன்னி - துலாம் - விருச்சிகம் ஆகிவற்றின் பெயர்கள்

அரிசிங்கம் வேங்கை புலியொடு மாவே
யாளியும் சிங்கமும் என்பார்
தெரிவையர் தமக்குப் பெயருள தெல்லாம்
சிறப்புறு கன்னிக்கே யாகும்
துரிதமாங் கோலே துலைநிறை நிறுப்பான்
தூக்கும்வா ணிபன்துலா பெயராம்
விரிபுறு தெறுக்காற் தோளொடு விருட்சம்
விருட்சிகம் எனவுரைத் தனரே. *(14)*

*(இ-ள்.)* அரி, சிங்கம், வேங்கை, புலி, மா, யாளி ஆகியவை சிம்மத்தின் பெயர்கள். பெண்களைக் குறிக்கும் பெயர்களெல்லாம் கன்னியின் பெயர்கள். (சேடி, தெரிவை, பெண், மாது போன்றவை) கோல், துலை, நிறுப்பான், தூக்கு, வாணிபன் ஆகியவை துலாமின் பெயர்கள். தெறுக்கால், தேள், விருட்சம் ஆகியவை விருச்சிகத்தின் வேறு பெயர்கள்.

### தனுசு - மகரம் - கும்பம் - மீனம் ஆகியவற்றின் பெயர்கள்

கொடுமரம் சாபம் கார்முகம் வில்லும்
கூர்சிலை துரோணமும் தனுவாம்
அடுசுறாக் கலைமான் மகரமே யாகும்
அழகிய சால்குடம் கரகம்
வடிவுறும் சாடி சரீரமே கும்பம்
மயிலைமீன் சலசர மச்சம்
முடுகிய மீனம் பெயரென லாகும்
முகிழ்முலைப் பவளவாய் மொழியே !. (15)

(இ-ள்.) முகிழ்த்திருக்கக்கூடிய தனங்களையும் சிவந்த பவளம் போன்ற வாயினையும் இனிய மொழியையும் உடைய பெண்ணே ! கொடுமரம், சாபம், கார்முகம், வில், கூர்சிலை, துரோணம் ஆகியவை தனுசுவின் பெயர்கள். சுறா, கலைமான் ஆகியவை மகரத்தின் பெயர்கள். சால், குடம், கரகம், சாடி, சரீரம் ஆகியவை கும்பத்தின் பெயர்கள். மயிலை, மீன், சலசரம், மச்சம் ஆகியவை மீனத்தின் பெயர்களாகும்.

## கோள்களின் பெயர்கள்

### சூரியனின் பெயர்கள்

பருதியா தித்தன் பங்கையன் பதங்கள்
பனிப்பகை விண்மணி என்றூழ்
அருணன்மார்த் தாண்டன் பாற்கரன் கதிரோன்
ஆயிரங் கதிரினன் தபனன்
இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன்
எல்லியம் போருக நண்பன்
தருமொழி வேந்தன் சூரனே சவிதா
தரணிபன் சுடரவன் என்பார். (16)

(இ-ள்.) பருதி, ஆதித்தன், பங்கையன், பதங்கன், பனிப்பகை,விண்மணி, என்றூழ், அருணன், மார்த்தாண்டன், பாற்கரன், கதிரோன், ஆயிரம் கதிரினன், தபனன், இருள்வலி, சண்டன், சூரியன், மித்திரன், எல்லி, அம்போருக நண்பன், வேந்தன், சூரன், சவிதா, தரணிபன்,சுடரவன்.

**இதுவுமது**

அனலியே பகலோன் வெய்யவன் பானு
அரிஅண்ட யோனிஏழ் பரியோன்
கனலியே சான்றோன் விரோசனன் ஆத்மா
காலத்தை அளந்திட்டோன் இரவி
இனவிரிச் சிகனே திவாகரன் ஒற்றை
யாழியன் ஆதவன் உதயன்
தினகரன் அருக்கன் ஞாயிறு விகர்த்தன்
செப்பிய கிரணமா லியனே. *(17)*

(இ-ள்.) அனலி, பகலோன், வெய்யவன், பானு, அரி, அண்டயோனி, ஏழ்பரியோன், கனலி, சான்றோன், விரோசனன், ஆத்மா, காலத்தை அளந்திட்டோன், இரவி, இனன், விரிச்சிகன், திவாகரன், ஒற்றையாழியன், ஆதவன், உதயன், தினகரன், அருக்கன், ஞாயிறு, விகர்த்தன், கிரணமாலியன் ஆகியவை சூரியனின் பெயர்கள்.

**மதியின் பெயர்கள்**

மதிஇராக் கதிரோன் நிசாபதி களங்கன்
வளர்பிறை அம்புலி அல்லோன்
விதுவொடு சோமன் உடுபதித் திங்கள்
வெண்கதிர்க் கடவுள்வெண் நிலவும்
புதுமுயற் கூடு சசிகலா நிதியோன்
புனர்சென்மன் புகலுறும் அலவன்
அதிகதன் ணவனாம் குரங்கியோ டிந்து
அரிச்சகன் சந்திர னாமே. *(18)*

(இ-ள்.) மதி, இராக்கதிரோன், நிசாபதி, களங்கன், வளர்பிறை, அல்லோன், விது, சோமன், உடுபதி, திங்கள், வெண்கதிர், கடவுள், வெண்ணிலவு, முயற்கூடு, சசி, கலாநிதி, புனர்சென்மன், அலவன், தண்ணவன், குரங்கி, இந்து, அரிச்சிகன் ஆகியவை சந்திரனின் பெயர்கள்.

**செவ்வாய், புதன் ஆகியோரின் பெயர்கள்**

மங்கலன் குருதி வக்கிரன் செந்தீ
வண்ணனங் காரகன் ஆரல்
பங்கமில் குசன்சேய் நிலமகன் இரத்தன்
பவுமனக் கினியன்செவ் வாயாம்
திங்களின் செல்வந் அனுவழி கணக்கன்
சிந்தைகூ ரியன்மேதை சாமன்
பொங்கிடும் அறிஞன் தூதன்மால் புலவன்
புந்திபண் டிதன்புதன் என்ப. (19)

(இ-ள்.) மங்கலன், குருதி, வக்கிரன், செந்தீவண்ணன், அங்காரகன், ஆரல், குசன், சேய், நிலமகன், இரத்தன், பவுமன், அக்கினியன் ஆகியவை செவ்வாயின் பெயர்கள். திங்களின் செல்வன், அனுவழி, கணக்கர், சிந்தை கூரியன், மேதை, சாமன், அறிஞன், தூதன், மால், புலவன், புந்தி, பண்டிதன் ஆகியவை புதனின் பெயர்கள் என்றவாறு.

**குரு, சுக்கிரன் ஆகியோரின் பெயர்கள்**

தீதிலாத் தெய்வ மந்திரி அமைச்சன்
சிகண்டிகன் இரணியன் வேந்தன்
கோதிலாண் டளப்பான் அந்தணன் மறையோன்
குருபொன்னன் தமனியன் சீவன்
வேநல் வியாழப் பெயர்சுங்கன் மழைக்கோள்
வெள்ளிபார்க் கவன்புகர் பளிங்கு
ஆதிசல் லியனும் பிரசுரன் சிதனோ,
டசுரர்மந் துரிசுக்கிரன் கவியே. (20)

(இ-ள்.) தெய்வமந்திரி, அமைச்சர், சிகண்டிகன், இரணியன், வேந்தன், ஆண்டளப்பான், அந்தணன், மறையோன், குரு, பொன்னன், தமனியன், சீவன் ஆகியவை குருவின் பெயர்கள். சுங்கன், மழைக்கோள், வெள்ளி, பார்க்கவன், புகர், பளிங்கு, சல்லியன், பிரசுரன், சிதன், அசுரர் மந்திரி, கவி ஆகியவை சுக்கிரனின் பெயர்கள்.

**சனி -இராகு - கேது - குளிகன் இவர்களின் பெயர்கள்**

கதிர்மகன் மந்தன் பிணிமகன் பங்கு
கரியவன் முதுமகன் பங்கு
நிதியுறும் காரி முடவன்பச் சிமத்தோன்
நீலன்ஆ யுவுக்கிறை சனியன்
மதியுணும் இராகுப் பெயர்கரும் பாந்தள்
வருகேது பேர்சிகி மற்றை
அதிகசெம் பாந்தள் குளிகன்பேர் மாந்தி
ஆமெனவு ரைத்தனர்கள் அமுதே ! (21)

(இ-ள்.) கதிர்மகன், மந்தன், பிணிமுகன், சவுரி, கரியவன், முதுமகன், பங்கு, காரி, முடவன், பச்சிமத்தோன், நீலன், ஆயுவுக்கிறை, சனியன் ஆகியவை சனியின் பெயர்கள். கரும்பாந்தன் இராகுவின் பெயர். சிகி, செம்பாந்தள் கேதுவின் பெயர்கள். மாந்தி குளிகனின் பெயர் எனவும் கற்றுணர்ந்த சோதிடர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

காலநிகண்டு முற்றிற்று.

# காரக நிகண்டு

## மேஷத்தின் உருவமும் காரகமும்

மேடந்தான் மேட ரூபமே யாகும்
மேவிடம் காடுநாற் காலாம்
நீடிய தாது ஆகுங்கீழ்த் திசையாம்
நிறம்சிவப் பரசன்சா தியதாம்
தேடிய ஆண்பால் நிலமகன் வீடாம்
தினகரன் தனக்குச்ச மாகும்
வீடிய சனிக்கு நீசமாம் இரவில்
விழித்திடும்சர இராசியும் என்பார். (22)

*(இ-ள்.)* மேடத்தின் வடிவம் ஆடாகும். இடம்-காடு; கால்-நாற்கால்; தாது இராசி; திசை-கிழக்குத்திசை; நிறம்-சிவப்பு; சாதி-சத்திரியன்; இராசி-ஆண் இராசி. செவ்வாய்க்கு ஆட்சிவீடு; சூரியனுக்கு உச்சவீடு, சனிக்கு நீசவீடு; இரவில் விழித்திருக்கும் இராசி; இராசி-சர இராசியாகும்.

## இடபத்தின் உருவமும் காரகமும்

இடபந்தான் இடப ரூபமாம் வழியே
இடநிறம் வெண்மைய தாகும்
அடர்திசை கிழக்காம் சாதிவே ளாளன்
அணிநாற் காலதாம் மூலம்
குடமுலைப் பெண்பால் நிலையுள இராசி
கோதறு வெள்ளியின் வீடு
தடமதிக் குச்சம் இராகுவில் நீசம்
தானிராக் காலத்தில் விழிக்கும். (23)

*(இ-ள்.)* இடபத்தின் வடிவம் இடபமாகும்; நிறம் - வெண்மை; திசை-கிழக்கு; சாதி-வேளாளன்; கால்-நாற்கால்; மூல இராசி; இராசி-பெண்இராசி; இராசி-ஸ்திரம்; சுக்கிரனுக்கு ஆட்சி வீடு; சந்திரனுக்கு உச்சவீடு; இராகுவுக்கு நீசவீடு; இரவில் விழிக்கும் இராசி.

## மிதுனத்தின் உருவமும் காரகமும்

*மிதுனமே ஆணும் பெண்ணுரு வாகி*
*வீணையும் தடியுமே ஏந்தி*
*இதமுற நிற்கும் வணிகனிற் சாதி*
*இடமுள ஊர்நிறம் கறுப்பாம்*
*சதருள சீவன் பதமிரண் டுளது*
*சாற்றிய புதனுறை வீடு*
*திதமுறு தென்கீழ்த் திசைசிர சுதயம்*
*திம்பகல் விழித்திடுமு பயராசி.* *(24)*

*(இ-ள்.) மிதுனத்தின் வடிவம் ஆணும் பெண்ணும் வீணையும் தடியும் ஏந்தி நிற்பது போன்றதாகும். சாதி- வணிகர் சாதி; இடம்-ஊர்; நிறம்-கறுப்பு; சீவ இராசி; கால்-இரண்டு; புதனுக்கு ஆட்சிவீடு; கிழக்கு-தென்கிழக்கு; சிரசு உதய மாகும்; பகல் விழித்திடும் இராசி; உபய இராசியாகும்.*

## கடகத்தின் உருவமும் காரகமும்

*இகல்கட கந்தான் நண்டுள ரூபம்*
*இடங்கரை மறையவர் சாதி*
*திகல்திசை தெற்காம் பகலினிற் றூங்கும்*
*திரிஇராசி தாதுவு மாகும்*
*பகர்நிறம் வெள்ளை யாம்பல காலாம்*
*பாம்புக்குப் பகைமதி வீடாம்*
*பகல்குருக் குச்சம் குசனுக்கு நீசம்*
*பொருஞ்சர ராசியும் என்பர்.* *(25)*

*(இ-ள்.) கடகத்தின் வடிவம் நண்டாகும்; இடம்-கடற்கரை; சாதி-மறையவர்; திசை-தெற்கு; பகலினில் தூங்கும்; பெண் இராசியாகும்; தாது இராசி; நிறம்-வெண்மை; கால்கள் பல உண்டு; பாம்புக்குப் பகைவீடாகும்; சந்திரனுக்கு ஆட்சி வீடாகும். குருவுக்கு உச்ச வீடாகும்; செவ்வாய்க்கு நீச வீடாகும்; சர இராசியாகும்.*

## சிம்மத்தின் உருவமும் காரகமும்

மன்னிய சிங்கம் சிங்கரூ பந்தான்
மலையிடந் திசைதெற்க தாகும்
மின்னிறம் சிவப்பாம் பகல்விழித் திருக்கும்
விளங்கிய மூலநாற் காலம்
பொன்னணி வேதர் சாதிசெங் கதிரோன்
பொருந்திய வீடதே யாகும்
பன்னிய பலமே கூர்திர ராசிப்
பாம்புக்குப் பகையுள வீடே. *(26)*

*(இ-ள்.)* சிம்ம இராசி - சிங்கத்தின் வடிவை உடையது; இடம்-மலை; திசை-தெற்கு; நிறம்-சிவப்பு; பகலில் விழித்திருக்கும்; மூல இராசி; கால்-நாற்காலாகும்; சாதி-அந்தணர்; சூரியனுக்கு ஆட்சிவீடு; பாம்புக்குப் பகைவீடு; திர இராசியாகும்.

## கன்னியின் உருவமும் காரகமும்

கோதிலாக் கன்னி பெண்ணுரு வாகிக்
கொழுங்கனல் ஏந்தியே நிற்கும்
சாதிவே ளாளன் ஊரிட மாகும்
சாருந்தென் மேற்றிசை இருகால்
தீதிலா உபயம் சீவனாம் பகலிற்
றிருட்டியாம் நிறங்கறுப் பாகும்
ஓதிய புந்திக் காட்சியுச் சமொடு
ஒண்புகர் நீசம்பாம் பாட்சி. *(27)*

*(இ-ள்.)* கன்னி இராசி-பெண் உருவினில் கைகளில் தீக்கனலை ஏந்தி நிற்கும். சாதி-வேளாளன்; இடம்- ஊர்; திசை-மேற்றிசை; கால்-இருகால்; உபய இராசியாகும்; சீவ இராசியாகும்; பகல் பார்வை உடையது; நிறம்-கறுப்பாகும்; புதனுக்கு ஆட்சிவீடும்; உச்சிவீடும்; சுக்கிரனுக்கு நீச வீடாகும்; பாம்புக்கு ஆட்சி வீடாகும்.

## துலாத்தின் உருவமும் காரகமும்

வருந்துலாத் தானேதராசுகைக் கொண்டே
வணிகன்போல் இருக்குங்கால் இரண்டாம்
தருபுனல் வரையில் இடநிறம் வெள்ளை
சாதியில் வணிகனே யாகும்
உருகிய தாது மேற்றிசை இரவி
உறங்கிடும் வெள்ளியின் வீடாம்
பொருசனிக் குச்சம் அருக்கர்க்கு நீசம்
பொருந்திய வீடெனப் புகல்வார். (28)

*(இ-ள்.)* துலாம் இராசி-தராசுவை கையில் ஏந்திய வணிகனின் தோற்றம். கால்-இரண்டு; இடம்-மலை; நிறம்-வெள்ளை; சாதி-வணிகன்; தாது இராசியாகும்; திசை-மேற்றிசை; பகலில் உறங்கிடும்; சுக்கிரனுக்கு ஆட்சி வீடு; சனிக்கு உச்சவீடு; சூரியனுக்கு நீசவீடு; சர இராசியாகும்.

## விருச்சிகத்தின் உருவமும் காரகமும்

விருட்சிகம் தேளின் உருவமாய் கிணறு
வியனிட மாகும்பல் காலாம்
முரிப்பிலா மறையோர்சாதிமேற் றிசையாம்
மூலமாம் பெண்ணெனமொழிவார்
வரிப்பொடு பகலில் விழித்திடும் பசுமை
வண்ணமாம் இராகுவுக் குச்சம்
பரித்தசேய் வீடு சோமர்க்கு நீசம்
பகர்ந்தனர் பங்கயத் திருவே. (29)

*(இ-ள்.)* விருச்சிகம் தேளின் உருவம்; இடம்-கிணறு; கால்-பலகால்கள்; சாதி-மறையோர்; திசை-மேற்றிசை; மூல இராசியாகும்; பெண் இராசியாகும்; பகலில் விழித்திருக்கும்; இராகுவுக்கு உச்சவீடு; செவ்வாய்க்கு ஆட்சிவீடு; சந்திரனுக்கு நீசவீடு; திர இராசியாகும் என்று சோதிட வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

## தனுசுவின் உருவமும் காரகமும்

வடிவுள தனுவே அரையின்கீழ்க் குதிரை
வடிவுமேல் மானிட வடிவாம்
நெடியவிற் கையில ஏந்தியே வடமேல்
நிலையுறும் இடமது தோட்டம்
முடிமன்னர் சாதி நிறம்சிவப் பிருகால்
மொழியும்ஆண் சீவனாம் உபயம்
துடிபெறு குருவின் வீடதாம் பகலிற்
றுணைவிழித் துஞ்சிடும் இராசி. (30)

*(இ-ள்.)* தனுசு -மனிதனின் இடுப்பிற்குக் கீழே குதிரையின் வடிவம். கையில் வில்லை ஏந்தியபடி இருக்கும்; இடம்-தோட்டம்; சாதி-சத்திரியர்; நிறம்-சிவப்பு; கால்-இரண்டு; ஆண் இராசியாகும். சீவ இராசியாகும். உபய இராசியாகும். குருவிற்கு ஆட்சி வீடாகும். பகலில் உறங்கிடும் இராசி.

## மகரத்தின் உருவமும் காரகமும்

மகரந்தான் சுறவும் கலையுமென் றிரண்டு
வடிவதாம் வடதிசை உதிக்கும்
பகரிடம் நதியாம் சாதிவே ளாளன்
பறவைபெண் தாதுவென் றுரைப்பார்
புகனிறங் கறுப்பு நிசிவிழித் திருக்கும்
பூமகள் தனக்குச்ச வீடாம்
நிகறசனிக் காட்சி வீடுபொன் னவர்க்கு
நீசமென் றுரைத்தனர் நிறையோர். (31)

*(இ-ள்.)* மகர இராசி சுறா, கலைமான் என்று இரண்டு வடிவங்கள்; திசை-வடதிசை; இடம்-நதி; சாதி-வேளாளன்; பறவை; பெண் இராசியாகும்; தாது இராசியாகும்; நிறம்-கருப்பு; இரவில் விழித்திருக்கும்; செவ்வாய்க்கு உச்சவீடு; சனிக்கு ஆட்சிவீடு, குருவிற்கு நீசவீடு என்று சோதிடக்கலை வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

## கும்பத்தின் உருவமும் காரகமும்

கும்பந்தான் புருட னாகியே கையிற்
குடந்தனை ஏந்தியே நிற்கும்
அம்புவி இடமாம் வாணிகன் இருகால்
ஆள்வட திசையினி திருக்கும்
விம்பமாம் பச்சை நிறம்பகல் விழிக்கும்
மிகநின்ற ராசிநீ லனுக்கே
நம்புறு வீடாம் அதனன்பா ணத்தை
நகைசெயும் மலர்விழித் திருவே. (32)

(இ-ள்.) மன்மதனின் மலர் அம்புகளை எள்ளி நகையாடும் மலர் போன்ற விழிகளை உடைய பெண்ணே! கும்ப இராசி - ஆண் ஒருவன் கையில் குடத்தை ஏந்திய வடிவம்; இடம்-நிலம்; சாதி-வணிகன்; கால்-இருகால்; ஆண் இராசியாகும்; திசை-வடதிசை; நிறம்-பச்சை; பகலில் விழிக்கும் சனிக்கு ஆட்சி வீடு; திர இராசியாகும்.

## மீனத்தின் உருவமும் காரகமும்

மீனமே இருமீன் வாலொரு தலையு
மேவைத்து வட்டம தாகித்
தானெழு வதும்வி ழுவதும் ஆகும்
சாதியின் மறையவன் வடகீழ்
ஆனதிக் கிடநீர்ப் பெண்ணிறம் பச்சை
அரும்பகல் விழித்திடும் சீவன்
பூனதப் பறனவு பயம்பொன் வீடு
புகர்க்குச்சம் புதனுக்கு நீசம். (33)

(இ-ள்.) மீன இராசி-இரு மீன்கள் வாலோடு தலையை வைத்து வட்டமானது போன்று மேலெழுவதும் கீழெழுவது மான தோற்றம். சாதி-மறையவன்; திசை-வடகிழக்கு; இடம்-நீர்; பெண் இராசியாகும்; நிறம்-பச்சை; பகலில் விழிக்கும் இராசி; உபய இராசியாகும்; குருவுக்கு ஆட்சி வீடு; சுக்கிரனுக்கு உச்சவீடு; புதனுக்கு நீச வீடாகும்.

### இராசிகளின் அமிர்த பாகை

சிலையரி மறியும் இருபத்தொன் றதனிற்
தெரிவைமான் விடைபதி னாறிற்
துலையுடன் கும்பம் மிதுனமோர் மூன்றிற்
சொல்லுஞெண் டிருபத்து நான்கின்
மலைவிலா மீன்றே நடக்குமே ஏழாம்
வகுத்தஇப் பாகையி லேதான்
நிலையுறும் அமிர்த மாமென உரைத்தார்
நிறைமதி முகத்தணங் கரசே! (34)

(இ-ள்.) நிறைந்த திங்களைப் போன்ற முகத்தைக் கொண்ட பெண்களுக்கரசே! தனுசு, சிம்மம். மேடம் ஆகியவற்றிற்கு இருபத்தோராம் பாகை அமிர்த பாகை; கன்னி, மகரம், இடபம் ஆகியவற்றிற்குப் பதினாறாம் பாகை அமிர்த பாகை; துலாம், கும்பம், மீனம் ஆகியவற்றிற்கு மூன்றாம் பாகை அமிர்த பாகை; கடகத்திற்கு இருபத்து நான்காம் பாகை அமிர்த பாகையாகும்.

### இராசியூணும் சல இராசிகளும்

மேடமோ டிடபங் கன்னிவெஞ் சிலையின்
விடமரா முற்பங்கில் உண்ணும்
நாடிய மிதுனம் சிங்கம்கோற் கும்பம்
நடுக்கூற்றில் விடங்கழு கூணாம்
ஆடிய மகரங் கடகம் தேள்மீன்
அந்தத்தில் விடம்பன்றி ஊணாம்
கூடிலா வன்கோல் விடைகுடம் மான்மீனை
கொறிசல இராசியாய்க் கூறும். (35)

(இ-ள்.) மேடம், இடபம், கன்னி, தனுசு ஆகியவற்றை முற்பங்கில் **பாம்பு ஊண்**; மிதுனம், சிம்மம், துலாம், கும்பம் ஆகியவற்றில் நடுக்கூற்றில் **கழுகு ஊண்**; மகரம், கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவற்றில் இறுதியில் **பன்றி ஊண்**; துலாம், இடபம், கும்பம், மகரம், மீனம், மேடம் ஆகியவை **சல இராசிகள்** என்று கூறுவார்கள்.

***குறிப்பு:*** நீர் முதலியவற்றிற்கு அதிகாரம் அல்லது காரகாதிபத்தியம் பெற்ற இராசியைச் சல இராசி என்பர். இவை கடகம், கும்பம், மகரம், மீனம், விருச்சிகம் என்று கூறும் நூல்களும் இடபம், துலாமாகியவைகளும் சேர்த்து ஏழு இராசிகள் என்று கூறும் நூல்களும் உள்ளன. இவற்றில் கடகம், மீனம் இவை முழு சலராசி என்றும், கும்பம், மகரம் இவை முக்கால் சலஇராசி என்றும், துலாம் அரைசல இராசி என்றும் இடபம், விருச்சிகம் கால் சல இராசி என்றும் கூறுவருமுளர் என்று சோதிடப் பேரகராதி கூறுகிறது.

**கிரகங்களின் கால்களும் சலக் கிரகங்களும்**

*ஏற்றிய புந்தி பொன்னோர் இருபாதக் கிரகம் என்பார்*
*சாற்றிய கதிரோன் செவ்வாய் சதுர்ப்பாத கிரகம் என்பார்*
*வேற்றுமைச் சனியன் தானே வெகுபாதம் என்னல் வேண்டும்*
*மாற்றரும் வெள்ளி திங்கள் வருஞ்சலக் கிரக மாமே. (36)*

*(இ-ள்.)* புதன், பொன் ஆகியவை **இரண்டு கால்களை உடைய கோள்கள்**; சூரியன், செவ்வாய் ஆகியவை **நான்கு கால்களை உடைய கோள்கள்**. சனி **பலகால்களை உடைய கோளாகும்**; சுக்கிரன், வெள்ளி ஆகியவை இரண்டும் சலக்கோள்களாகும்.

**தாது மூலக் கிரகங்கள்**

*சனிசெவ்வாய் இராகு கேதும் தாதுவின் கிரக மாகும்*
*முனிவிலாக் கதிரோன் வெள்ளி மூலத்தின் கிரக மாகும்*
*பனிமதி யுடன்வி யாழம் பண்புறு கணக்கன் தானும்*
*குனிசிலை முதலாய்! சீவ கோள்களென் றுரைத்த வாறே. (37)*

*(இ-ள்.)* சனி, செவ்வாய், இராகு, கேது ஆகியவை **தாதுக்கோள்கள்**; சூரியன், சுக்கிரன் ஆகியவை **மூலக் கோள்கள்**; குரு, புதன் ஆகியவை **சீவக்கோள்கள்** என்று கற்றறிந்தோர் கூறியுள்ளார்கள் என்பதை வளைந்த வில்லைப் போன்ற நெற்றியையுடைய பெண்ணே! அறிவாயாக.

**உதயங்களும் கர்ப்ப, துவார வான்மீயங்களும்**

*விதமுறு மிதுனம் துலாங்கன்னி சிங்கம்*
*விருச்சிகம் கும்பமிவ் வாறும்*
*உதயந்தான் சிரசு முன்னதாய் உதிக்கும்*
*உயர்சிலை விடைமறி கடகம்*
*வதைசெயும் பிருட்டம் முன்னுற உதிக்கும்*
*மகரமீன் இவ்விரு வகையாம்*
*மதிசரந் துவாரம் கர்ப்பமே உபய*
*மானவான் மீயமற் றென்பார். (38)*

*(இ-ள்.)* மிதுனம், துலாம், கன்னி, சிம்மம், விருச்சிகம், கும்பம் இவை ஆறின் உதயத்தின் பொழுது சிரசு முதலில் உதிக்கும். தனுசு, இடபம், மேடம், கடகம் இவை நான்கின் உதயத்தின் பொழுது பிருட்டம் முதலில் உதிக்கும். மகரம் மீனம் ஆகியவை இரண்டின் உதயத்தின் பொழுது சிரசும் பிருட்டமும் ஆகிய இரண்டிலும் உதிக்கும். சர இராசிகள் **துவாரம்**; ஸ்திர இராசிகள் **வான்மீயம்**, உபய இராசிகள் கர்ப்பம்.

***குறிப்பு:*** மேடம்,கடகம், துலாம், மகரம் ஆகியவை **துவார இராசிகள்**. இடபம், சிம்மம், விருச்சிகம்,கும்பம் ஆகியவை **வான்மீய இராசிகள்**; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவை **கர்ப்ப இராசிகள்**.

**இராசிகளின் திசைநோக்கு**

ஆடுகீழ்ப் பாலே நோக்கிடும் சிங்கம்
அருஞ்சிலைதான் தென்கீழ் நோக்கும்
கூடிரும் இடபம்தென் திசைநோக் கும்கூர்
கன்னிமக ரந்தென் மேற்கு
நாடுற நல்ல மிதுனமேல் நோக்கு
நற்கும்பம் துலாம்வட மேற்காம்
ஊடுற நோக்கு ஞெண்டுமீன் மேற்காம்
உகந்துகீழ் வடதிசை நோக்கும். *(39)*

(இ-ள்.) மேடம் இராசி கிழக்குத் திசையை நோக்கும்; சிம்மம், தனுசு ஆகிய இராசிகள் தென்கிழக்குத் திசையை நோக்கிடும்; இடப இராசி தென்திசையை நோக்கும்; கன்னி, மகரம் ஆகிய இராசிகள் தென்மேற்குத் திசையை நோக்கும்; மிதுன இராசி மேற்குத் திசையை நோக்கும். கும்பம், துலாம் ஆகிய இராசிகள் வடமேற்குத் திசையை நோக்கும்; கடகம், மீனம், விருச்சிகம் ஆகிய இராசிகள் வடதிசையை நோக்கும்.

## இராசிகளின் வகைகள்

ஓதிய மிதுனம் கன்னிகோல் கும்பம்
உரைத்திடு மானிட இராசி
காதுறு சிங்கம் சிலைமறி இடபம்
கருதிய மிருகரா சியதாம்
சீதமா மீன மகரமிவ் விரண்டும்
சீர்கொடு பறக்குமி ராசி
ஏதில்கர்க் கடகம் விருட்சிகம் பலகால்
இராசியென் றுரைத்திட லாமால். (40)

(இ-ள்.) மிதுனம், கன்னி, துலாம், கும்பம் ஆகிய இராசிகள் **மானிட இராசிகள்**; சிம்மம், தனுசு, மேடம், இடபம் ஆகிய இராசிகள் **மிருக இராசிகள்**; மீனம், மகரம் ஆகிய இராசிகள் **பறக்கும் இராசிகள்**; கடகம், விருச்சிகம் ஆகிய இராசிகள் **பலகால் இராசிகள்** என்று சொல்லுவார்கள்.

## இராசி வலிதும் கிரகங்களின் கால வலிதும்

உதயத்தின் மானுட ஓரையே வலிதாம்
ஒருபது நான்குகால் ஓரை
பதமிகும் ஓரை ஏழினில் விஜயம்
பறத்தநீர்க் கீழ்விஜ யமதாம்
மதமிகும் மனித இராசியே பகலில்
வலிதென்பர் இரவிநாற் காலும்
சதமிகும் பறவை யொடுபல காலும்
சந்தியில் வலிதென்பர் தானே! (41)

(இ-ள்.) மனித இராசியே, இராசிகளில் வலிமை யுடையதாகும். மேடம், இடபம், சிங்கம், தனுசு ஆகிய நான்கு கால்களை உடைய இராசிகளை பத்தாமிடத்தில் வலிமையுடையவை. பல கால்களையுடைய கடகம், விருச்சிகம் ஆகிய இராசிகள் ஏழாமிடத்தில் வலிமை உடையவை; பறக்கும் இராசிகளான மகரம், மீனம் ஆகியவை நான்காம் இடத்தில் வலிமை உடையவை. மனித இராசி பகலில் வலியையுடையது; அதைப் போலவே, நாற்கால் இராசிகளும் பகலில் வலிமையுடையவை. பறக்கும் இராசிகளும் பல கால்களை உடைய இராசிகளும் மாலைப் பொழுதில் வலிமையுடையவை என்று கூறுவார்கள்.

இராசி அதிகார பலன் முற்றும்.

## இரவிமதி பாக இராசிகளில் நின்ற கிரக வலிமை

*சிங்கமே முதலாய் ஆறிரா சியுமே*
*செழும்பகற் கதிரவன் கூறாம்*
*தங்கிய நிசியிற் குடம்முதல் ஆறும்*
*சந்திரன் கூறெனச் சாற்றும்*
*இங்கிவர் கூறு தனிசுப ருடனே*
*இவர்களே இனிதுடன் இருக்கில்*
*அங்கவர் பலத்தை உடையரென் றுரைத்தார்*
*அன்னமென் நடையுடை அணங்கே ! (42)*

(இ-ள்.) அன்னத்தை ஒத்த மென்மையான நடை யுடைய பெண்ணே! சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய ஆறு இராசிகளும் சூரியனின் கூறாகும். கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கடகம் ஆகிய ஆறு இராசிகளும் சந்திரனின் கூறாகும். கோள்களுடன் தனி சுபக்கோள்கள் கூடி இருந்தால் அக்கோள்கள் பலமுடையவர்.

## இரவி, மதி, செவ்வாய் கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம், சமத்துவம்

சூரியனுக் குறவுசெவ்வாய் மதிசெம்பொன் ஆட்சி
தூயசிங்க மேடமுச்சம் துலாநீச மாகும்
காரிவெள்ளி பாம்புபகை புதன்சமனாம் மதிக்குக்
கதிர்புந்தி நட்பாகும் கர்க்கடகம் ஆட்சி

*நேரிடபம் உச்சந்தேள் நீசமராப் பகையாம்*
*நிகர்மற்றோர் சேய்க்குநட்பு மதிபொன்னோன் ஆட்சி*
*கூரிடமே டம்தேலாம் மகரமுச்சம் கடகம்*
*கொடுநீசம் பகைபுதன்மற் றோர்சமனாய்க் கூறே.(43)*

(இ-ள்.) சூரியனுக்கு நட்பு செவ்வாய், சந்திரன், குரு ஆகிய கோள்கள். ஆட்சி வீடு-சிம்ம இராசி; உச்சவீடு-மேடஇராசி; நீசவீடு-துலாம் இராசியாகும். சனி, சுக்கிரன், இராகு, கேது பாம்புகள் பகையாகும். புதன் சமமாகும். சந்திரனுக்குச் சூரியன், புதன் ஆகிய கோள்கள் நட்பாகும். ஆட்சி வீடு கடக இராசி; உச்சவீடு-இடப இராசி; நீசவீடு-விருச்சிக இராசி; இராகு கேது பாம்புகள் பகையாகும். செவ்வாய்க்கு நட்பு சந்திரன், குரு ஆகிய கோள்கள். ஆட்சி வீடுகள்-மேட இராசியும், விருச்சிக இராசியும் உச்சவீடு-மகர இராசி; நீசவீடு-கடகமாகும். புதன் பகையாகும். மற்றவர்கள் சமமாகும்.

**புதன், குரு கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம். சமம்**

*புதனுக்கு நட்புவெள்ளி கதிராட்சி கன்னி*
*புகழ்மிதுனம் ஆடும்உச்சம் கன்னிநீசம் மீனம்*
*மதிபகைமற் றோர்சமனாம் பொன்னவனுக் குறவு*
*மதிபானு சேயாட்சி தனுசுமீ னாகும்*
*அதிகஉச்சங் கர்க்கடகம் மாமகர நீசம்*
*அரியபுதன் வெள்ளிபகை யாகும்மற்றோர் சமனாம்*
*புதியநறுஞ் செழுங்கமலப் பொருட்டிலர சிருக்கும்*
*புளகிதப்பூண் முலையுடைய பொற்கொடிமின்*
*னிடையே.(44)*

(இ-ள்.) புதிதாக மலர்ந்திருக்கக் கூடிய செழுமையான தாமரைமலரின் பீடத்தில் வீற்றிருக்கும் கண்டோரைப் புளகாங்கிதம் அடையச் செய்யும் ஆபரணங்களை அணிந்த தனங்களையுடைய மின்னலையொத்த பொன்போன்ற இடையையுடைய பெண்ணே ! புதனுக்கு நட்பு சுக்கிரன், சூரியன் ஆகிய கோள்கள். ஆட்சி வீடுகள்-கன்னி இராசியும்

மிதுன இராசியும் ; உச்சவீடு-கன்னி இராசி; நீசவீடு-மீன இராசி; சந்திரன் பகை. செவ்வாய், குரு, சனி, இராகு, கேது ஆகியவை சமமாகும். குருவிற்கு நட்பு சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகிய கோள்கள். ஆட்சி வீடுகள்-தனுசு இராசியும் மீன இராசியும். உச்சவீடு-கர்க்கடக இராசி. நீசவீடு-மகர இராசி. புதன், சுக்கிரன் ஆகியவை பகை. சனி, இராகு, கேது ஆகியவை சமமாகும்.

**சுக்கிரன், சனி கிரகங்களின் நட்பு, ஆட்சி உச்சம், பகை, நீசம், சமம்**

சுக்கிரனுக் குறவுபுந்தி சனியாட்சி விடைகோல்
சொன்மீனம் உச்சமாம் கன்னியே நீசம்
மிக்ககதிர்ப் பகைமற்றோர் சமனாகும் சனிக்கு
வெள்ளிபுந்தி நட்பாகும் ஆட்சிகுடம் மகரம்
தக்கதுலாம் உச்சமாம் மேடந்தான் நீசம்
சந்திரன்சூ ரியன்செவ்வாய்ப் பகைமற்றோர் சமனாம்
திக்கனைத்தும் புகழ்படைத்த கணிதநூற் புலவர்
தெரிந்துரைத்த படியிதனைத் தெரிந்தருட்செந்
திருவே. *(45)*

*(இ-ள்.)* சிவந்த திருமகளையொத்த பெண்ணே! திசைகள் அனைத்தும் போற்றும்படியாக புகழுடன் விளங்கக்கூடிய சோதிட நூல்களைக் கற்று ஆராய்ந்துணர்ந்து உரைக்கும் புலவர்கள் தெரிந்து உரைத்தபடி தெரிந்தருள் வாயாக. சுக்கிரனுக்கு நட்பு புதன், சனி ஆகிய கோள்கள். ஆட்சி வீடுகள்-இடப இராசியுந் துலாம் இராசியும். உச்சவீடு-மீன இராசி நீசவீடு கன்னி இராசி. சூரியன் பகை. செவ்வாய், குரு ஆகியவை சமனாகும். சனிக்குச் சூரியன், புதன் ஆகியவை நட்புடைய கோள்கள். ஆட்சி வீடுகள்-மகர இராசியும், கும்ப இராசியும். உச்ச வீடு-துலாம் இராசி சந்திரன், சூரியன், செவ்வாய் ஆகியவை பகை. குரு சமனாகும்.

### இராகுவுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்

கரிபாம்புக் குவெள்ளி குருசனிநட் பாகும்
கதிரவன்சந் திரன்செவ்வாய் பகைமற்றோர் சமனாம்
உரியகனித் தண்டுசிலை ஆட்சிவீ டாகும்
உயர்மீனங் கோல்மகரம் மீனநட்புவீடாம்
விரிவனைய கும்பமே மூலத்ரி கோணம்
விருட்சிகந்தான் உச்சமாம் விடைநீச மாகும்
அரியசிங்கம் கர்க்கடகம் மேடமொண்ணார் வீடாம்
ஐயரிகண் களபமுலை அமுதமொழி திருவே ! (46)

(இ-ள்.) மானின் கண்களை ஒத்த கண்களையும் சந்தனம் பூசப்பட்ட தனங்களையும் உடைய அழகுமிகுந்த இளமை யான மயிலின் சாயலை உடைய பெண்ணே! இராகுவுக்கு நட்பு சுக்கிரன், குரு, சனி ஆகிய கோள்கள். சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகியோர் பகை. புதன் சமன். ஆட்சி வீடுகள் மிதுன இராசியும் தனுசு இராசியும். மீன இராசி, துலா இராசி, மகர இராசி ஆகியவை நட்பு வீடுகள். மூலத்திரிகோண வீடு கும்ப இராசி. உச்சவீடு விருட்சிக இராசி. நீசவீடு இடப இராசி. சிம்ம இராசி, கற்கடக இராசி, மேட இராசி ஆகியவை பகை வீடுகள்.

### கேதுவுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்

செய்யகே துக்குறவு சனிசெவ்வாய் வெள்ளி
தீயபகை இரவிமதியென் பர்மற்றோர் சமனாம்
துய்யதொரு மீனாட்சி குடமகரம் இடபம்
துலைபெண்நட் பாம்மிதுன முச்சம்தனு நீசம்
வெய்யவிருட் சிகமூலத் திரிகோண மாகும்
வீறுசிங்கம் கர்க்கடகம் பகைமேடம் சமனாம்
பையரவின் மணிமுடியை அரசியையைத் தேரைப்
பழித்திளைஞ ராசையைப்போற் பரந்தஅல்குல்
திருவே ! (47)

(இ-ள்.) படமெடுத்து ஆடுகின்ற நாகப்பாம்பின் நாகரத்தினம் பொதிந்த படத்தையும் அரசிலையையும் தேரையும் பழிப்பது போன்ற, இளைஞர்களின் ஆசையைப் போன்று பரந்த அல்குலையுடைய பெண்ணே ! கேதுவுக்கு நட்பு சனி, செவ்வாய், சுக்கிரன் ஆகிய கோள்கள். சூரியன், சந்திரன் ஆகியோர் பகை. புதன், குரு ஆகியோர் சமம். ஆட்சி வீடு மீனம் இராசி. கும்ப இராசி, மகர இராசி, இடப இராசி, துலாம் இராசி, கன்னி இராசி ஆகியவை நட்பு வீடுகள். உச்ச வீடு மிதுன இராசி. நீச வீடு-தனுசு இராசி. மூலத்திரிகோண வீடு-விருச்சிக இராசி. சிம்ம இராசி, கடக இராசி ஆகியவை பகை. மேட இராசி சமமாகும்.

### குளிகனுக்கு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம்

கோடுறு குளிக னுக்குக் கொண்டபெண் தனுத்தான் ஆட்சி
நீடுகோள் கும்ப மோடு நீள்கயல் மிதுனம் நட்பு
வாடிய மகரம் உச்ச மாம்பகை இடபம் சிங்கம்
மேடம்தேள் கடகம் நீசம் விளம்பலாம் குளிக னுக்கே★.(48)

(இ-ள்.) குளிகனுக்கு ஆட்சி வீடுகள் கன்னி இராசியும் தனுசு இராசியும். நட்பு வீடுகள் துலாம் இராசி, கும்ப இராசி, மீன இராசி, மிதுன இராசி ஆகிய இராசிகள். உச்சவீடு மகரம். பகைவீடுகள் இடப இராசி, சிம்ம இராசி ஆகிய இராசிகள். நீசவீடுகள் மேட இராசி, விருச்சிக இராசி, கடக இராசி ஆகிய இராசிகள் என்று சொல்லவேண்டும்.

**குறிப்பு:** அச்சுநூலில் இருபத்தெட்டாவது பாடல் சுவடியில் இப்பாடல் இல்லை.

### குளிகன் சாரம்

வரும்இரவிக் கையைந்து கலைஇருப தென்பார்
மதிக்கிருபத் திரண்டுடனே கலைநான்க தாகும்
பொருசேய்க்குப் பாகைபத்து கலைநாற்பத் தொன்பான்
புதனுக்குப் பாகைபன்னேழ் கலை இருபத் தேழாம்

குருஆறு பாகையுடன் கலையொன்றே யாகும்
கொடும்புகர்க்குப் பாகையைந்து கலையைம்பத் தைந்தாம்
கருதுசனிக் கொருபாகை கலைமுப்பத் தொன்பான்
கடுங்குளிகன் உதிக்கின்ற இராசியிற்காண் பதுவே. (49)

(இ-ள்.) சூரியனுக்குப் பாகை 25, கலை 20, சந்திரனுக்குப் பாகை 22, கலை 4, செவ்வாய்க்குப் பாகை 10, கலை 49; புதனுக்குப் பாகை 17 கலை 27; குருவுக்குப் பாகை 6, கலை ஒன்று; சுக்கிரனுக்குப் பாகை 5, கலை 50; சனிக்குப் பாகை ஒன்று, கலை 39, குளிகன் உதிக்கின்ற இராசியில் இதனைக் காணலாம்.

**ஓரைகள்**

முறைமையாம் ஓரை இராசி
முதற்பாகம் இரவி கூறு
நிறையும்பிற் பாகம் தானே
நீண்மதிக் கூறே யாகும்
மறைவிலுக் குமரா சிக்குள்
வருமுற்பான் மதியின் கூறாம்
அறையும்பிற் பால ருக்கன்
கூறதாம் ஓரை ஈதே. (50)

(இ-ள்.) இலக்கனத்தின் பாதி ஓரை எனப்படும் ஒற்றை இராசிகளான மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவற்றில் முதலில் உள்ளது சூரிய ஓரையாகும். இரண்டாவதாக உள்ளது சந்திர ஓரையாகும். இரட்டை இராசிகளான, இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றில் முதலில் உள்ளது சந்திர ஹோரையாகும். இரண்டாக உள்ளது சூரிய ஓரையாகும்.

**ஓராதிபர்கள்**

திரமுறை ஓரைக் கதிபதி உரைக்கிற்
சேய்புகர் புதன்மதி கதிர்மாப்
பிரசுரன் செவ்வாய் குருசனி நீலன்
பேசிய வியாழமீங் கிவர்கள்

உரமிகு மேடம் முதற்சன்னி வரைக்கும்
ஓரைநாயகர்துலா முதலாய்
பரவிய மீனம் வரைக்கும்இவ் வண்ணம்
பார்ப்பது சூத்திர முறையே. *(51)*

*(இ-ள்.)* ஓரைக்கதிபதி என்போர் இராசியாதிபதிகள். மேடத்திற்குச் செவ்வாய், இடபத்திற்குச் சுக்கிரன், மிதுனத்திற்குப் புதன், கடகத்திற்கு சந்திரன், சிம்மத்திற்குச் சூரியன், கன்னிக்குப் புதன், துலாத்திற்குச் சுக்கிரன், விருச்சிகத்திற்குச் செவ்வாய், தனுசுக்குக் குரு, மகரத்திற்குச் சனி, கும்பத்திற்குச் சனி, மீனத்திற்குக் குரு இராசியதிபர்கள்.

**தின வோரையும் அதன் பலனும்**

எந்நாளும் தினவோரை வருமுறைமை கூறின்
இரவிபுகர் புதனிந்து சனிகுருசெவ் வாய்க்கு
முன்னாக வரும்ஓரை அந்தந்த வாரம்
முதலோரை யாங்கடிகை இரண்டரையாய் நடக்கும்
பொன்னாரும் இரவிக்குத் துன்புபுகர்க் கின்பாம்
புதனுக்கு மகப்பேறு மதிக்கும்மன மகிழ்ச்சி
சொன்னாட்டுஞ் சனியனுக்குச் சிறைபுதன்மந் திரிக்கும்
தூயநிலைப் பெறல்சேய்க்குத் துயர்ப்பகைசெய்
திடுமே. *(52)*

*(இ-ள்.)* சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன், சனி, குரு, செவ்வாய் ஆகிய ஏழுநாட்களுக்கும் முதல் ஓரையாக அதனதன் ஓரைகளே நடக்கும். முதலோரை இரண்டரை கடிகையாக நடக்கும் (ஒருமணி நேரம்). சூரியவோரை-துன்பம்; சுக்கிரவோரை-இன்பம்; புதன் வோரை-மகப்பேறு; சந்திரவோரை-மனமகிழ்ச்சி; சனிவோரை-சிறை; புதன், குரு வோரைகள்-தூயநிலை பெறல்; செவ்வாய் வோரை-துயரம், பகை.

*ஆடுமுதற் கடகவரை நான்குராசிக்கும்*
*ஆறிரண்டு திரேகாணம் மேடமுத லாகும்*
*நாடுசிங்கம் முதலாக நான்குராசிக்கும்*
*நான்மூன்று திரேகாணந் தனுசுமுதல் நடக்கும்*
*தேடுதனு முதல்மீனம் வரைநான்கோ ரைக்கும்*
*திரேகாணம் பன்னிரண்டும் சிங்கம்முதற் செல்லும்*
*நீடுசய முனியுரைத்த சூத்திரத்தின் படியே*
*நிரைநிரையாய்ப் பகுத்தறிந்து நிகழ்த்தலிதன்*
*நெறியே. (53)*

*(இ-ள்.)* மேடம், இடபம், மிதுனம், கன்னி ஆகிய நான்கு இராசிகளுக்கும் பன்னிரண்டு திரேகாணங்கள் இவை மேடம் முதல் கணக்கிடப்படவேண்டும். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் ஆகிய நான்கு இராசிகளுக்கும் பன்னிரண்டு திரேகாணங்கள். இவை தனுசு முதல் கணக்கிடப் படவேண்டும். தனுசு, மகரம், மீனம், கும்பம் ஆகிய நான்கு இராசிகளுக்கும் பன்னிரண்டு திரேகணங்கள். இவை சிம்மம் முதல் கணக்கிடப்பட வேண்டும். சயமுனிவர் கூறிய சூத்திரத்தின்படி, வரிசை வரிசையால் பகுத்துணர்ந்ததன்படி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**மேஷத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்**

*இடறு புவியில் வருதிரே காணத்*
*தியற்கையைத் தெளிவுற வுரைக்கிற்*
*கடனிகர் மேட முதற்றிரே காணம்*
*கறுப்புமெய் இரத்தக்கண் வெள்ளைப்*
*புடவையை உடுத்துக் கொண்டுதான் பாசம்*
*பிடித்துக்கொண் டேற்றிய கையான்*
*திடலுறு கோபி யாவனிங் கிதனை*
*யுத்திரே காணமென் றறைவார். (54)*

*(இ-ள்.)* மேடத்தின் முதல் திரேகாணத்தின் தோற்றம். கறுத்த உடலுடன் இரத்தம் போன்று சிவந்த கண்களோடு

வெள்ளைப் புடைவையை அணிந்துகொண்டு கயிறு ஒன்றினைப் பிடித்துக்கொண்டிருக்கும் கையை உடையவன். கோபம் உடையவன் என்று இவனைக் கூறுவார்கள். இது உத்திரேகாணம் எனப்படும்.

### மேஷத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

*அறையும் மேடத் திரண்டாம்திரே காணம்*
*அருட்கும்பா கிருதிபெண் ணங்கம்*
*நிறைரத்த வத்ர முருத்திக்கொண் டிருக்கும்*
*நீள்பரி முகமொரு பாதம்*
*குறைபடா தாக முடைமையில் ஆசை*
*கூறிய தோர்திரே காணம்*
*பிறைநுதற் தங்கச்சுணங்குபூத் தொளிரும்*
*பேரிள வனமுலைத் திருவே.* *(55)*

*(இ-ள்.)* பிறை போன்ற நெற்றியையும் தங்க நிறத்தில் தேமல் பூத்து விளங்கும் இளமையான அழகிய தனங்களை யுடைய திருமகளையொத்த அழகுடைய பெண்ணே! மேடத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். அருள் நிறைந்த பெரிய பெண் உடலில் சிவப்புநிற ஆடையை உடுத்திக்கொண்டிருக்கும். நீண்ட குதிரை முகமாகவும் ஒரு காலை உடையதாக, தாகத்தில் ஆசையொடு விளங்கும்.

### மேஷத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்

*திருமறி தனின்மூன் றாந்திரே காணம்*
*செப்பிய புருடனா கிருதி*
*தருசெம்பொன் மேனிச் சிவப்புறு புடவைச்*
*சகலவல் லமைகுரூ ரமுமாய்க்*
*கருமமாம் கிரிகைச் செய்கையில் வாஞ்சை*
*கனவிர தங்களைச் சிதைப்பன்*
*அருள்வலக் கையிற் றடிபிடித் தோங்கி*
*யார்ப்புறு மிதுபத்தி யாயே.* *(56)*

(இ-ள்.) மேடத்தின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். பொன்னிறம் கொண்ட ஆண் உடலில் சிவப்புப் புடவை அணிந்திருப்பான். சகல வல்லமைகளையும் குரூரத் தன்மையுடன் விளங்குவான். கரும கிரிகைகளில் விருப்பம் கொண்டு, விரதங்களைக் களைப்பான். வலது கையில் தடி ஒன்றைப் பிடித்து ஆரவாரம் செய்பவனாக இருப்பான்.

## இடபத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்

ஆயுமே இடப முதற்றிரே காண
அருட்கும்பா கிருதிபெண் ணாகும்
தீயினில் வெந்த புடவையை உடுத்தித்
திரட்பசித் தாகமுமு டைத்தாயே
ஏயுமா பரண வாஞ்சையு மாகி
இருந்திடு நெற்றிக்கு மேலே
பேயுறுத் திடலே சுருண்டரோ மமுமாம்
பிறைவடம் இலங்குபூண் முலையே! (57)

(இ-ள்.) இடபத்தின் முதல் திரேகாணத்தின் தோற்றம். பெண் உடலில் தீயினில் வெந்த புடவையை உடுத்திக் கொண்டு இருப்பாள். நிறைந்த பசியுடனும் தாகத்துடனும் விளங்குவாள். ஆபரணங்களில் விருப்பம் இருக்கும். நெற்றிக்குமேல் சுருண்டமயிர் விளங்கும். பிறைவடிவிலான ஆரம் புனைந்த தனங்களை உடையவளாக இருப்பாள்.

## இடபத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

பூணிட பத்திரண் டாம்திரே காணம்
பொலிவுறு இடபஆ கிருதி
ஆணுரு ஆட்டு முகம்சதுர்ப் பாதம்
ஆமென வலக்கைதூக் கினதாம்
கோணுறு கலப்பை வண்டிநன் னிலமும்
கூர்தன தானியம் பசுவும்
நீணிகர் வித்தை தன்னிலே ஆசை
நெடும்பசி யூறுநாற் பாதம். (58)

*(இ-ள்.)* இடபத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். பொலிவு பெற்ற எருதின் உடல். ஆணின் உருவம்; ஆட்டின் முகம். நான்கு கால்கள். வலக்கை தூக்கியபடி அமைந்திருக்கும். கலப்பை வண்டி, நல்ல தனம், தானியம், பசு, வித்தைகளில் விருப்பம், பசியுடனான இதற்கு சதுர்ப்பதத் திரேகாணம் என்று பெயர்.

**இடபத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்**

*பாதுறும் இடபம் மூன்றாம்திரே காணம்*
*பகர்மத யானைஆ கிருதி*
*காதுறும் கோரத் தந்தமாம் இழப்புக்*
*காற்செந்நாய் மீதுள ரோமம்*
*ஏதுறு புருடன் வியாகுலச் சிந்தை*
*இதுசதுர்ப் பதத்திரே காணம்*
*கோதறு பாகும் அமுதமும் தேனும்*
*குலவிய கனிஇதழ்க் குயிலே !* *(59)*

*(இ-ள்.)* குற்றமற்ற சர்க்கரைப் பாகையும் இனிய அமுதத்தையும் தேனையும் உடைய கொவ்வைக்கனி போன்று சிவந்த இதழ்களையுடைய இனிய மொழியை பேசக்கூடிய பெண்ணே! இடபத்தின் மூன்றாம் திரே காணத்தின் தோற்றம். மதயானையைப் போன்ற உடல். காதுவரை இழுத்து நடக்கும் கால். செந்நாயின் மீதுள்ள உரோமம். ஆண் உருவம். மனக்குழப்பம் உடையவன். இதற்குச் சதுர்ப்பதத்திரேகாணம் என்றும் பெயர்.

**மிதுனத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்**

*குயின்மொழி! மிதுன முதற்றிரே காணம்*
*குவிமுலை தெரிவையர் ரூபம்*
*உயருமா பரண வாஞ்சையி னாலே*
*ஊசியின் முனையினிற் றபசு*

நயமிலா மலடிப் தூக்கிய செங்கை
நயப்புள திரிதிரே காணம்
பயலுறும் இளைஞர் பாவனைப் போலே
படரிள வனமுலைத் திருவே ! (60)

(இ-ள்.) குயிலைப் போன்று இனிய மொழி பேசக் கூடிய பெண்ணே ! மிதுனத்தின் முதல் திரேகாணத்தின் தோற்றம். குவிந்த தனங்களையுடைய பெண்ணின் வடிவம். ஆபரணங்களை அணிந்திருப்பாள். ஊசியின் முனையில் தபம் செய்வாள். குழந்தையற்றவள். தூக்கிய சிவந்த கைகளை உடையவள்; இது திரிதிரேகாணமாகும்.

**மிதுனத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்**

திருமிது னத்தின் இரண்டாந்திரே காணம்
செப்பிய புருடன்மா சூரன்
கெருடனன் முகமாம் இவன்வன வாசம்
கிளரொளிக் கவசமுஞ் தரித்து
பொருவிலும் அம்பும் தொடுத்தஆ யுதமாய்ப்
பொற்புட ளேவிளை யாடப்
பெருமையே யாகி மாமுத்தி யாயும்
பேசிய பட்சித்திரே காணம். (61)

(இ-ள்.) மிதுனத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம்.பெரிய சூரனைப் போன்று ஆண் தோற்றம். கெருட முகத்தோடு ஒளிவிளங்கும் கவசம் அணிந்து, வில்லும் அம்பும் தொடுத்த ஆயுதமாக விளையாடும் பெருமையைக் கொண்டவன். வனவாசம் இருந்து முத்தியை ஆராயும் இந்தத் திரேகாணத்திற்கு பட்சித்திரேகாணம் என்று பெயர்.

**மிதுனத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்**

காணிய யாழ்மூன் றாந்திரே காணம்
கருதிய வருணன்சொ ரூபம்
பூணிடும் சம்பத் திரத்தினா பரணம்
பூண்டுதான் கவசமும் கட்டித்

தூணியும் தரித்து வில்லும் பிடித்துத்
துலங்குசத் தாயுத னாகி
வாணகைப் புலமை நாட்டியம் கீதம்
வலவனாம் அன்னமென் நடையாய்![1] (62)

(இ-ள்.) வெண்மையான பற்களைக் கொண்டு புன்னகை புரிந்து நாட்டியத்தோடு இசையிலும் வல்லமைப் பெற்று விளங்கும் அன்னம் போன்ற நடையையுடைய பெண்ணே! மிதுனத்தின் மூன்றாம் செல்வத்துடன் இரத்தினா பரணம் பூண்டு, கவசம் அணிந்து, அம்பறாத் தூணியை முதுகில் வார்கொண்டு இழுத்துக்கட்டி, கையில் வில்லைப் பிடித்து ஆயுதபாணி.

## கடகத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்

அன்னதோர் கடக முதற்றிரே காணம்
யானையா கிருதியாம் விட்டில்
இன்னடைப் பன்றி முகம்பரி காது
மேற்றிய புருடனாம் வனத்தில்
உன்னிய மலையில் சஞ்சரித் திடுதல்
உயர்மூலம் பலாசுகந் தமுமே
பன்னியே பொசித்தல் இதுசதுர்ப் பாதம்
பகர்ந்திரே காணமாய்ப் பகர்வார். (63)

(இ-ள்.) கடகத்தின் முதற்றிரேகாணத்தின் தோற்றம். யானைபோன்று பெரிய உடல். பன்றியின் முகம், குதிரையின் காதுடைய ஆண். காட்டில் மலையில் அலைதல். வேர்கள், பலா முதலான நறுமணமுடையவற்றை உண்ணுதல். இந்தத் திரேகாணத்தைச் சதுர்ப்பாதத் திரேகாணம் என்பர்.

## கடகத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

பகருநண் டிரண்டா மாந்திரே காணம்
பைந்தொடி சித்ரபங் கயத்தான்
மகிழ்விலாங் கொருவர் வசிக்கப்பா லரசின்
மரத்தின்கீ ழுறல்வன வாசம்

மிகுசுக போகம் உடையவள் கடினி
மெலிவுடன் அழுதுகொண் டிருக்கும்
அகிலமேல் இதுதான் திரிதிரே காணம்
ஆமென்பர் கணிதநூல் வல்லோர். (64)

(இ-ள்.) கடகத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். பசுமையான வளையங்களை அணிந்த அழகான தாமரைப்பூவில் வீற்றிருப்ப, அரசமரத்தின் கீழ் வனவாசமாக மகிழ்ச்சியுடன் இருப்பவள். சுகபோகம் உடையவள். இரக்கமற்றவள். அழுதுகொண்டிருப்பாள் என்று சோதிடக் கலையில் வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

**கடகத்தின் மூன்றாந் திரேகாணத் தோற்றம்**

அவமிணன் டினின்மூன் றாம்திரே காணம்
ஆடவர் வடிவுபொன் ஆரம்
துவளவே தரித்தே இருப்பினிற் பாம்பைச்
சுற்றியே பல்லக்கில் ஏறி
உவமிலாத் திரிக்குப் பணிதிகள் பண்ண
ஓடத்தில் ஏறிஅக் கரைக்கும்
தவமுறப் பொற்பூ பாவனை இதுவே
சதுர்ப்பதத் திரேகாணந் தானே. (65)

(இ-ள்.) கடகத்தின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். ஆண்களின் உருவம். பொன் ஆரத்தைத் தரித்து, இடுப்பில் பாம்பினைச் சுற்றிக்கொண்டு உவமையில்லா அழகுடைய பெண்ணிற்குப் பணிவிடைகள் செய்ய ஓடத்தில் ஏறி அக்கரைக்குச் செல்வது போன்ற பாவனையுடன் இருப்பான். இதற்கு சதுர்பதத் திரேகாணம் என்று பெயர்.

**சிங்கத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்**

தானசிங் கத்தின் முதற்றிரே காணம்
சாற்றிடில் ஆனமுள் ளின்கீழ்
கூனிய கிழற்று நயினா கிருதி
குரங்குபோ லுரன்சிங்க வாலாம்

ஈனமாம் அழுக்குப் புடவையை உடுத்தி
ஈன்றதாய்த் தந்தைஇ லாதே
தானழு திருக்கும் இதுசதுர்ப் பாதம்
சாற்றிய திரிதிரே காணம். (66)

(இ-ள்.) சிம்மத்தின் முதல் திரிதிரேகாணத்தின் தோற்றம். முள்ளிற்குக் கீழ் கிழட்டு நரியின் உடலமைப்பு குரங்குபோல் உடலும், சிங்கம்போல் வாலும் அமைந்திருக்கும். அழுக்குப் புடவையை உடுத்திக்கொண்டு ஈன்றெடுத்தத் தாயும் தந்தையும் இல்லாமல் அழுது கொண்டிருக்கும். இது சதுர்ப்பாதத் திரேகாண மாகும்.

## சிங்கத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

திரசிங் கத்தில் இரண்டாந்திரே காணம்
செப்புவன் குதிரைஆ கிருதி
விரித்துற வளைந்த நாசியான் சிரசில்
வெண்மையாய் மாலையைத் தரித்துக்
கருத்தகம் பளமும் கிருட்டிநா சனமும்
காயமே தரித்துவில் லம்பும்
உரத்தகை ஏந்திச் சிங்கநோக் குளதாம்
உயருத்தி காயதென் றுரையே. (67)

(இ-ள்.) சிம்மத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். குதிரையைப் போன்ற உடலமைப்பு. விரித்து வளைந்த மூக்கினை உடையவன். தலையில் வெண்மையான மாலையைச் சூடிக்கொண்டு கருத்த கம்பளத்தையும் கிருட்டிநாசனத்தையும் உடலில் தரித்துக்கொண்டு வில்லையும் அம்பையும் கைகளில் ஏந்தி சிங்கத்தின் பார்வை விளங்கக் கூடியதாக இருக்கும்.

## சிங்கத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்

*உரைத்திடு சிங்கம் மூன்றாம்திரே காணம்*
*ஓதிய கரடியின் முகமாம்*
*குரங்கதின் சேட்டைக் குடிலமாங் கேசம்*
*கோபியான் ஒருகையிற் றடியும்*
*திரத்திடக் கையின் மாங்கிசம் தன்னைத்*
*தின்னவே வைத்துக்கொண் டிருக்கும்*
*இரத்திது வுத்திதாயுத் திரேகாண மதாகும்*
*என்றனர் கணிதநூல் புலவரே. (68)*

*(இ-ள்.)* சிம்மத்தின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். கரடியின் முகமும் குரங்கின் சேஷ்டையும் கொண்டிருக்கும். சுருண்டமுடி கோபமின்றி ஒரு கையில் ஒரு தடியும், மற்றொரு கையில் மாமிசத்தைத் தின்னவே வைத்துக்கொண்டிருக்கும். இது **உத்திதாயுத் திரேகாணம்** என்று சோதிடநூல் கற்று வல்ல புலவர்கள் கூறியுள்ளார்கள்.

## கன்னியின் முதற்றிரேகாணத் தோற்றம்

*புலமையாம் கன்னி முதற்றிரே காணம்*
*பூங்கொடி பூவலங் காரம்*
*இலங்கிய குடத்தைத் தோளில்வைத் திருக்கும்*
*யாழ்கலை களுக்குமுக் காடு*
*நலனுறு புடவைத் தனிலிச்சை யுற்றார்*
*நன்மனைக் கேக வாஞ்சை*
*குலவிடும் இவையே திரேகா காணம்*
*கொழுங்கடற் பிறந்தகன் னிகையே. (69)*

*(இ-ள்.)* கன்னியின் முதல் திரேகாணத்தின் தோற்றம். பூவலங்காரம் செய்யப்பட்ட பூங்கொடி போன்ற பெண், குடத்தைத் தோளில் வைத்திருக்கும்; யாழ், கலைகளில் விருப்பம். புடவையினால் முக்காடு போட்டுக் கொண்டிருக்கும்; விருப்பமுற்றவர்களின் வீடுகளுக்குச் செல்ல விருப்பம் என்பதைக் கொழுங்கடலில் பிறந்த கன்னிகையே அறிவாயாக.

### கன்னியின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

கன்னியில் இரண்டாம் திரேகாணங் கறுப்பு
மெய்யுடம் பெலாமு ரோமம்
மின்னிய கறுப்பு சேலையை உடுத்தி
வில்லம்பு கையினிற் பிடித்து
முன்னிலை ஏட்டை எழுதுவோ னுடைய
முன்கையைப் பிடித்துக்கொண் டிருக்கும்
தன்னிலே தேடி செலவிடும் புருடன்
தான்புரு டத்திரே காணம். (70)

(இ-ள்.) கன்னியின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். கறுப்பு நிறத்தோடு உடல்முழுவதும் உரோமத்தோடு கறுப்புச் சேலையைக் கட்டிக்கொண்டு வில், அம்பு போன்றவற்றைக் கையில் பிடித்துக்கொண்டு, தனக்கு முன்னால் ஏட்டை எழுதுபவனுடைய முன்கையைப் பிடித்துக்கொண்டு இருக்கும். தானே தேடி செலவிடும் ஆண். இது புருடத்திரேகாணம் ஆகும்.

### கன்னியின் மூன்றாந்திரேகாணத் தோற்றம்

அத்தமாம் கன்னி மூன்றாந்திரே காணம்
அரிவையாம் எழுதின சிவப்பு
வத்திரந் தரித்துச் சிவந்தசீ லையைத்தான்
வாங்கிமுக் காடிட்டுக் கொண்டு
சித்திரக் குடம்போன் முடித்திடு கயிற்றைச்
செங்கையிற் பிடித்துக்கொண் டோத
தனித்தவாலையத்துக் கேகிறச் சிந்தை
நிகரிது பாசத்திரே காணம். (71)

(இ-ள்.)கன்னியின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். சிவப்பு நிறம் உடைய பெண், ஆடையை அணிந்து, அதன்மேல் சிவப்பு சீலையை வாங்கி முக்காடிட்டுக் கொண்டு, அழகான குடம்போன்று முடிந்த கயிற்றைச் சிவந்த கையில் பிடித்துக்கொண்டு கோயிலுக்குச் செல்லும் எண்ணத்துடன் விளங்குவது. இது பாசத்திரேகாண மாகும்.

**துலாத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்**

*பாசமாந் துலாத்தின் முற்றிரே காணம்*
*பண்புறு புருடனாம் செட்டிப்*
*பேசிய கெறுவித் தராசுகை பிடித்துப்*
*பவித்தாரைப் போல்வியா பாரத்*
*தாசறு கிரயம் அல்லதுவிக் கிரய*
*மாகவே திரிவனீங் கிதுதான்*
*மாசறு புருட னாந்திரே காணம்*
*வண்டணி பூங்குழல் அணங்கே !* *(72)*

*(இ-ள்.) துலாத்தின் முதல் திரேகாணத்தின் தோற்றம். வணிகன் ஒருவன் கர்வத்துடன் தராசினைக் கையில் பிடித்து, நல்லவனைப் போல வியாபாரம் விலை பேசுதல் அல்லது விலை பேசித்திரிதல் இது* **புருடத் திரேகாணம்** *என்பதை வண்டுகள் மொய்த்திருக்கக் கூடிய பூக்களைக் கூந்தலில் சூடியுள்ள பெண்ணே ! அறிவாயாக.*

**துலாத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்**

*அணங்குவது கோல்ரெண் டாந்திர காணம்*
*மானென்பர் கழுகெனும் முகமாம்*
*பணிந்திடு கையில் கலசத்தைப் பிடித்துப்*
*பறப்பதற் காயுத்த மாகி*
*மணம்புரி திரியைம் புத்திரர் தன்னை*
*வாதைகள் செய்திட சிந்தை*
*இணங்கிய பட்சி யாம்திரே காணம்*
*என்றனர் கலைவல்லோர் தாமே.* *(73)*

*(இ-ள்.) துலாத்தின் இரண்டாம் திரேகாணத்துத் தோற்றம். மான் உடலோடு கழுகு முகமாக இருக்கும். கையில் கலசத்தைப் பிடித்துக்கொண்டு பறப்பதற்குத் தயாரான நிலையில், மணம்புரிந்த பெண்களையும் ஐந்து புதல்வரையும் துன்பம் செய்திட எண்ணும்* **பட்சித் திரேகாணம்** *என்று சோதிடக்கலையில் வல்ல சோதிடர்கள் கூறியுள்ளார்கள்.*

## துலாத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்

தாமுறு கோல்மூன் றாந்திரே காணம்
சாற்றிய கின்னர புருடர்
காமரு மணியால் சித்திர வில்லுக்
காஞ்சிரத் தூண்ரெத் தினத்தாற்
தேமுறு கடகம் பிடிக்கந்த வனத்திற்
சூழ்ந்திடும் மிருகங்கள் எல்லாம்
ஏமுறத் துரத்தித் தொடர்ந்திடு மார்க்கம்
இஃதுத்தி தாயுவென் பதுவே. (74)

(இ-ள்.) துலாத்தின் மூன்றாம் திரேகாணத்துத் தோற்றம். கின்னரப் புருடன். மணிகள் பதிக்கப்பட்ட சித்திர வில்லுடன் காஞ்சிரத்தூண் கொண்டு செய்யப்பட்ட கடகத்தை அணிந்து அம்பினைக் கையில் கொண்டு தன்னைச் சூழ்ந்திடும் விலங்குகளையெல்லாம் துரத்தித் தொடர்வது. இது உத்திதாயு திரேகாணம் எனப்படும்.

## விருச்சிகத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்

என்பதோர் தேளின் முதற்றிரே காணம்
ஏந்திழை ரூபத்தை உடையான்
இன்புறு மணிகள் வத்திர பங்கம்
இருகாலிற் பாம்பினால் விலங்கும்
வன்புனற் றீவில் இருந்தித்தக் கரையில்
வந்துதான் இருக்கின்ற மார்க்கம்
துன்யமா நிகள மாந்திரே காணம்
சூதினை வருத்துபூண் முலையே ! (75)

(இ-ள்.) விருச்சிகத்தின் முதற்றிரேகாணத் தோற்றம். பெண்ணின் உடலமைப்பினை உடையவள். விலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணத்தை அணிந்திருப்பவள். இரண்டுகாலில் பாம்பினால் விலங்கு அணிந்திருப்பவள். நீருக்கு இடையே விளங்கக்கூடிய தீவில் இருந்துகொண்டு இந்தக் கரையில் வந்து இருப்பது போன்ற தோற்றம் என்பதை

சூதாட்டக் காய்களைத் தோல்வியடையச் செய்யும் அணிகள் புனைந்த தனங்களை உடையவளே! அறிவாயாக.

### விருச்சிகம் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

வருத்தும்தே ளினிலிரண் டாந்திர காணம்
வருமாமை போற்கும்பா கிருதிப்
திருத்தமாம் வீட்டிற் போகபோக் கியத்திற்
றினநல்ல பொசிப்பினில் இச்சை
பருத்தமெய் யெல்லாம் பரம்பையே மிகவும்
பழுதை போற் சுற்றியே தானே
வருத்தமாய்த் திரிவன் சர்ப்பதிரே காணம்
வனிதையாம் இவையென்பர் கண்டாய். *(76)*

(இ-ள்.) விருச்சிகத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். ஆமையைப் போன்ற உடலமைப்பு. வீட்டில் அனைத்துவித போகங்களிலும் நல்ல உணவை உண்பதிலும் விருப்பம். உடல் முழுவதிலும் பழுதினைப் போல பாம்பினைச் சுற்றிக்கொண்டு வருத்தத்தோடு திரிவான். இது **சர்ப்பத்திரேகாண**மாகும் என்று சோதிடக்கலையில் வல்ல பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.

### விருச்சிகத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்

கண்டதே ளினில்மூன் றாந்திரே காணம்
கருதிய சிங்கஆ கிருதி
எண்டிசை மலையில் இருக்கின்ற பேரை
இச்சிப்பன் மற்றபேர் தன்னை
விண்டிடத் துரத்தி விடுவனங் குள்ள
மிருகங்கள் தனைப்பயஞ் செய்வன்
திண்டிறற் புருடன் இதுசதுர்ப் பாதச்
சிங்கதிரே காணமும் ஆகும். *(77)*

(இ-ள்.) தேளின் மூன்றாந் திரேகாணத்தின் தோற்றம். சிங்கத்தைப் போன்ற உடலமைப்புடன், எட்டுத்திசை

களிலும் உள்ள மலைகளிலும் உள்ளவர்களை விரும்புவான். மற்றவர்களைத் துரத்திவிட்டு அங்குள்ள விலங்குகளை பயமுறுத்தும் ஆண். இதற்குச் சதுர்ப்பாத திரேகாணம் என்றும் சிங்கத் திரேகாணம் என்றும் பெயர்.

### தனுசின் முதற்றிரேகாணத் தோற்றம்

ஆகிய தனுவின் முதற்றிரே காணம்
ஆடவர் முகம்பரி உடலம்
வாகுளஇடபம் போலுமா கிருதி
வருஞ்சிலை அம்பும்கை கொண்டு
வேகமாம் சோபி தவசிபாற் பொசிப்பு
விளங்குமா சிரமத்தில் இருப்போன்
தேகத்தைக் காப்பான் இங்கிது புருடத்
திரேகாணம் என்றனர் தெளிந்தோர். (78)

(இ-ள்.) தனுசுவின் முதற்றிரேகாணத் தோற்றம். ஆணைப்போன்ற முகத்தோடு குதிரையின் உடலுடன் நல்ல உடல்வாகைப் பெற்ற எருதைப் போன்ற உடலமைப்பினைக் கொண்டு, வில்லினையும் அம்பினையும் கையில் ஏந்தியுள்ள கோபம் கொண்டவன். தவசியிடம் உணவு பெற்று ஆசிரமத்தில் இருப்பான். உடலைக் காப்பாற்றுவான். இதற்குப் புருடத் திரேகாணம் என்று பெயர்.

### தனுசின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்

தெளிவுறு தனுசிரண் டாந்திர காணம்
சண்பகப் பூத்தங்க வண்ணம்
எழில்பெறு ரூபம் மென்னடை உடையாள்
இருப்பது மத்தியா சனமாம்
ஒளிபெறு மணிகள் தேடுற வாஞ்சை
ஓதிய திரிதிரே காணம்
அளியினம் தொடரும் பூங்குழற் றிருவே !
அறைந்தனர் கணிதவல் லவரே. (79)

(இ-ள்.) வண்டுகள் மொய்த்துத் தொடரும் தேன் மிகுந்த மலர்களைக் கூந்தலில் சூடியுள்ள திருமகளை யொத்த அழகுடைய பெண்ணே! தனுசின் இரண்டாம் திரேகாணத் தோற்றம். சண்பகமலரினையொத்த அழகு பெற்ற உடல் நிறத்தை உடையவள்; மென்மையான நடையைக்கொண்டவள்; மத்தியாசனமாய் இருப்பாள்; ஒளிபெறுகின்ற விலையுயர்ந்த மணிகளைத் தேடுவதில் விருப்பம் உடையவள். இதற்குத் திரிதிரேகாணம் என்று பெயர்.

### தனுசின் மூன்றாந் திரேகாணத் தோற்றம்

*வல்லதோர் தனுர்மூன் றாந்திரே காணம்*
*புருடமா ரூபம்சண் பகப்பூ*
*புல்லியன் அங்கக் கவசம்மேல் உடையன்*
*பொலன்நிறம் கோபியே யாகும்*
*சொல்லிய சிங்கா சனத்தினில் இருக்கை*
*சுழற்றியே தடிபிடித் திருக்கை*
*நல்லதோர் புருட னாந்திரே காண*
*நகைநிலா மதிமுக மின்னே!* (80)

(இ-ள்.) தனுசின் மூன்றாம் திரேகாணத் தோற்றம். ஆணின் உடலமைப்பு. சண்பகப்பூவை உடல் முழுதும் கவசம்போல் போர்த்த பொன்னிறம் உடையவன். கோபத்தை உடையவன். சிங்காசனத்தில் அமர்ந்து தடியை இருகைகளிலும் பிடித்துச் சுழற்றியபடி இருப்பவன். இதற்குப் புருடத்திரேகாணம் என்று பெயர் என்பதை நகைக்கின்ற நிலவினை ஒத்த பொலிவான முகத்தையுடைய பெண்ணே அறிவாயாக.

### மகரத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்

*மின்னிய மகர முதற்றிரே காணம்*
*வீறுள புருடமார் ரூபம்*
*மன்னிய மேனி ஓங்குமே ரோமம்*
*மலிவுறு ஞமலிமுன் கோபி*

*முன்னுறு கோரத் தந்தமாங் கயிறு*
*முடிந்தது கையினிற் கொண்டு*
*தன்னிலே அலறி அழுதுகொண் டிருக்கும்*
*தரும்பாச மாத்திரே காணம்.* (81)

(இ-ள்.) மகரம் முதற்றிரேகாணத்தின் தோற்றம். ஆண் உருவம். உடல்முழுவதும் ரோமம் இருக்கும். நாயை ஒத்த கோபம் உடையவன். கோர தந்தங்களைக் கொண்டவன். கையினில் கயிறு ஒன்றினை முடிச்சிட்டுக்கொண்டு அலறி அழுது கொண்டிருப்பான். இதற்குப் **பாசத்திரேகாணம்** என்ற பெயரும் உண்டு.

**மகரத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்**

*திரமக ரத்தி ரண்டாந்திரே காணம்*
*திரிரூபம் யவ்வனம் செந்தா*
*மரையிதழ்ப் போலே நீண்டகண் ணுறும்பால்*
*வகிர்முலைக் கச்சிளம் கொங்கை*
*சரணிய நடன நாட்டிய வித்தை*
*சகலவல் லமைவண்ணச் சேலை*
*அரையினில் உடுக்கும் பிறர்க்குப சாரம்*
*மறைந்திடு திரிதிரே காணம்.* (82)

(இ-ள்.) மகரம் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். பெண் உருவம் செந்தாமரை இதழ்போன்ற கண்களும், கச்சினால் கட்டப்பட்ட பாலூறும் தனங்கள். நடன நாட்டிய வித்தையுடன் சகல வல்லமையுடையவளாக இடையினில் வண்ண சேலை அணிந்து, மற்றவர்களுக்கு உதவி செய்பவள். இதற்குத் **திரிதிரேகாணம்** என்று பெயர்.

**மகரத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்**

*திரிமிகுமகர மூன்றாம்திரே காணம்*
*செய்யகின் னரனைப் போலாம்*
*பொறிகொள் கம்பளியை உடுத்தியே கவசம்*
*பூண்டுவில் லம்புகை கொண்டு*

செறிவுறு தூணியுங் கட்டியே மணியாற்
சிறப்பலங் காரப்பொற் குடத்தை
அறிவொடு தோளில் வைத்திடும் புருட
னாந்திரே காணமென் றிசைப்பார். (83)

(இ-ள்.) மகரத்தின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். கின்னரனைப் போன்ற உடல். புள்ளிகளை உடைய கம்பளியை அணிந்து, கவசம் பூண்டு, வில், அம்பு முதலானவற்றைக் கையில் கொண்டு, அம்பறாத் தூணியையும் முதுகில் கட்டி, விலையுயரந்த மணிகள் பதிக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட குடத்தைத் தோளில் வைத்திருக்கும். இதற்குப் புரு திரேகாணம் என்று பெயர்.

### கும்பத்தின் முதற்றிரேகாணத் தோற்றம்

இசைவுறு கும்ப முதற்றிரே காணம்
இறகு கழுகினுட முகமாம்
அசைவொடு கலக்க மதனில்சா ராயம்
தனிலே மூழ்கிமாங் கிசத்தைப்
பசியொடு பொசித்தற் றாமரைப் பூவிற்
பண்புறு கன்னிகா ரூபம்
நிசமுறு கலையை யுடுத்தியே இருக்கும்
நிகர்பட்சி யாந்திரே காணம். (84)

(இ-ள்.) கும்பத்தின் முதற்றிரேகாணத்தின் தோற்றம். இறகுகள் உடைய கழுகின் முகமாகும். மனத்தை கலக்கும் சாராயத்தைக் குடித்து, மாமிசத்தைப் பசியொடு உண்ணும். தாமரைப் பூவில் கன்னியில் வடிவில் ஆடையை உடுத்தியே இருக்கும். இது பட்சித்திரேகாணமாம்.

குறிப்பு: மாங்கிசம் - மாமிசம்

### கும்பத்தின் இரண்டாம் திரேகாண பலன்

ஆய்ந்திடு சாலி ரண்டடாந்திரே காணம்
அழுக்குள புடவையை உடுத்தி
வாய்ந்தஆ பரணம் பூண்டுவந் திருந்த
வண்டியின் மீதுபாண் டங்கள்
ஏந்திடும் சாமக் கிரிகையும் புல்லும்
ஏற்றிக்கொண் டக்கரைக் கேபோய்க்

சாய்ந்திடும் இரும்பு கொடுவந்து வனத்திற்
கனிந்துறுந் திரிதிரே காணம். (85)

(இ-ள்.) கும்பத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். அழுக்குள்ள புடவையை உடுத்திக்கொண்டு, ஆபரணங்களை அணிந்துகொண்டு, வண்டியின்மீது பாண்டங்கயையும், சாமக்கிரிகைக்குரிய புல்லையும் ஏற்றிக்கொண்டு அக்கரைக்குச் சென்று, வனத்திற்கு இரும்பைக் கொண்டுவரும். இது திரிதிரேகாணம்.

### கும்பத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்

காணவே குடமூன் றாந்திரே காணம்
காதிலே அதிகமாம் ரோமம்
மாணுறு பச்சை நிறங்கரி யாகும்
அங்கத்தின் நிலைபிசினப் பட்டைப்
பூணுறத் தரித்தே இடுப்புப்பானையைத்தான்
பொற்புறக் கையிற்பிடித் திருக்கும்
வீணுறத் திருபுரு டத்திரே காணம்
விதித்தவர் கமலமின் கொடியே ! (86)

(இ-ள்.) கும்பத்தின் மூன்றாம் திரேகாணத்தின் தோற்றம். காதிலே உரோமம் அதிகமாகக்கொண்ட கரிய நிறமுடைய ஆண்; பிசினப்பட்டையை அணிகலனாக அணிந்து கொண்டு, இரும்பு பானையைக் கையில் பிடித்திருக்கும். இது புருடத்திரேகாணம்.

### மீனத்தின் முதற்றிரே காணத் தோற்றம்

கொடியேறு மீனமுதற்றிரே கானம்
குலவிய மாலையும் சங்கும்
வடமுறு மணியும் மட்குடம் தன்னில்
வைத்திற் கையிட்டுக் கொண்டே
படியலங் கார மாகவோ டத்திற்
பண்புன் ஏறிஅக் கரைபோய்த்
திடமுறு மலையாழ் குடங்கைக்கொண் டேகச்
சொல்லுதன் மனுதிரே காணம். (87)

(இ-ள்.) மீனத்தின் முதற்றிரேகாணத்தின் தோற்றம். மாலை, சங்கு, மணிமாலை ஆகியவற்றை மட்குடத்திலிட்டு,

அதனைக் கையில் வைத்துக்கொண்டு அலங்காரமாக ஓடத்தில் ஏறி அக்கரைக்குச் சென்று மலையாழை கையில் கொண்டு வரும். இது **மனுத்திரேகாணம்** என்றவாறு.

**மீனத்தின் இரண்டாம் திரேகாணத் தோற்றம்**

*மனுவின் மீனிரண் டதாந்திரே காணம்*
*மனுவுடன் செண்பகமலர் வண்ணம்*
*வினவிய குடைடால் கட்டியே தெப்ப*
*மீதினிற் பரிசனத் துடனே*
*இனமுடன் ஏறிக் கொண்டுதான் பயணம்*
*என்னவே அக்கரைக் கேக*
*நினைவுகொண் டெழுதல் மநுத்திரே காணம்*
*நெட்டிலை வேற்கண்மின் னரசே!* (88)

(இ-ள்.) நெட்டிலையைப் போன்றும் வேலினைப் போன்றும் கண்களையுடைய மின்னரசே! மீனத்தின் இரண்டாம் திரேகாணத்தின் தோற்றம். செண்பக மலரின் வண்ணத்தையுடைய மனிதன், குடை, டால் கட்டிய தெப்பத்தில் உறவினருடன் ஏறிக்கொண்டு அக்கரைக்குச் சென்று வர எண்ணம் கொண்டு எழுதல். இது **மனுத்திரேகாணம்.**

**மீனத்தின் மூன்றாம் திரேகாணத் தோற்றம்**

*அரசெனும் மீனம் மூன்றாந்திரே காணம்*
*அழகிய புருடனாம் இடுப்பிற்*
*கரவுறு பாம்பைச் சுற்றியே கொண்டு*
*காட்டினில் இருந்துதான் புற்றிற்*
*பரவுகை இட்டுக் கொண்டுசத் துருவாற்*
*பற்பல சோரர்தீக் காற்றால்*
*எரியுமாம் அபாயம் வருமென முறையிட்*
*டிடுஞ்சர மாந்திரே காணம்.* (89)

(இ-ள்.) மீனத்தின் மூன்றாம் திரேகாணம் தோற்றம். அழகிய ஆணின் தோற்றம். பாம்பை இடுப்பில் சுற்றிக் கொண்டு காட்டினில் இருந்து புற்றில் கையை விட்டுக் கொண்டு பகைவரால், கள்வரால், தீயினால், காற்றால், அபாயம் வருமென்று முறையிட்டிடும். இது **சரமாம் திரேகாணம்.**

**திரேகாண பலன் முற்றிற்று.**

## நவாங்கிசம் அறியும்படி

ஆய்ந்தநவாங் கிசந்தன்னை அறியும்வகை கூறில்
அச்சுவினி பரணிகார்த் திகைமூன்று நாளுக்
கேயகாற் பன்னிரண்டு மேடமுதல் மீனம்
ஈறாகக் காலொன்றுக் கோர்ராசி யாகும்
தூயவிரு பத்தேழு நட்சத்திரம் தன்னைத்
தொகுப்பாக மும்மூன்றாய்ப் பிரித்தடை விற்பார்க்கில்
வேயனைய தோள்மாதே ! சொன்னநவாங் கிசந்தான்
விளங்கிடுமென் றேயுரைத்தார் மேற்கணித
நூலோன். *(90)*

*(இ-ள்.)* அசுவனி, பரணி, கார்த்திகை ஆகிய மூன்று நாட்களுக்கும் கால்கள் பன்னிரண்டாகும். மேட இராசி முதல் மீன இராசி வரை காலொன்றுக்கு ஓர் இராசியாக இருபத்தேழு நட்சத்திரங்களின் கால்களையும் பிரித்து அமைத்துப் பார்ப்பது **நவாங்கிசமாகும்** என்று சோதிடக்கலையை ஆராய்ந்து அறிந்த வல்லவர்கள் உரைத்துள்ளார்கள் என்பதை மூங்கிலையொத்த தோள்களையுடைய மாதே! அறிவாயாக.

**குறிப்பு:** இலக்கனத்தை ஒன்பது பங்காகப் பிரிப்பது நவாம்சமாகும். மேஷ இலக்கனத்தை ஒன்பதாகப் பிரிக்கும் பொழுது, மேஷத்திலிருந்து தனுசுவரை நவாம்சங்கள் அமைகின்றன. இடப இலக்கனத்தை ஒன்பதாகப் பிரிக்கும் பொழுது மகரம் முதல் கன்னி வரை நவாம்சங்கள் அமைகின்றன. மிதுன இலக்கனத்தை ஒன்பதாகப் பிரிக்கும்பொழுது துலாம் முதல் மிதுனம் முடிய நவாம்சங்கள் அமைகின்றன.

## துவாதாங்கிசம் அறியும்படி

உன்னிய துவாத சாங்கிசம் கூறில்
ஒருராசி முப்பது பாகை
தன்னிலோர் அங்கம் இரண்டரைப் பாகைத்
தானென்றிவ் வடைவினிற் கொண்டு

பன்னியே பார்க்கில் இராசியே முதலாய்
பன்னிரண் டங்கிசம் மேவ
துன்னியக் கிரகம் இருந்தஅங் கிசமே
துவாதசாங் கிசமெனச் சொல்வார். (91)

(இ-ள்.) ஒரு இராசிக்கு முப்பது பாகைகளாகும். ஒரு இராசியைப் பன்னிரண்டாகப் பகுப்பது துவாதசாம்சம். முப்பது பாகையை பன்னிரண்டு பங்குகளாகப் பிரிக்க ஒரு பங்கு இரண்டரை பாகைகளாகும். இராசி முதலாக பன்னிரண்டு அங்கிசங்களில் கணக்கிட்டு, அக்கிரகம் இருந்த அங்கிசத்தை துவாதாங்கிசம் என்பர்.

**திரிமிசாங்கிசம் அறியும்படி**

முந்திய திரிமி சாங்கிசக் கூறின்
முப்பது பாகையி லேதான்
தந்தசேய் ஐந்து சசியைந்து பொன்னோன்
தானெட்டு புந்தியோன் ஏழாம்
நந்துறு வெள்ளி தனக்கைந்தாம் ஓசை
இராசிக்கு முதன்மையாய் நடக்கும்
வந்தவுக் குமத்துக் கேபுகர் மால்பொன்
மந்தன்சேய் என்பவர் முறையே. (92)

(இ-ள்.) ஒரு இராசிக்கு முப்பது பாகைகளாகும். அந்த முப்பது பாகைகளில் முதல் 5 பாகைகளில் செவ்வாயும் இரண்டாவது 5 பாகைகளில் சனியும், மூன்றாவதாக 8 பாகைகளில் குருவும், நான்காவதாக ஏழு பாகைகளில் புதனும், ஐந்தாவதாக 5 பாகைகளில் சுக்கிரனும் இருந்து அதிபர்களாகின்றனர். மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், துனுசு, கும்பம் ஆகிய ஆறு இராசிகளும் ஓசை இராசிகள் அல்லது ஆண் இராசிகள் அல்லது ஒற்றை இராசிகள். இவற்றிற்கு மேற்கூறிய வகையில் வரிசையாக அதிபதிகள் அமைவர். இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறுப் இரட்டை இராசிகள் அல்லது பெண் இராசிகள் அல்லது

உக்கும இராசிகள் என்று சொல்லப்படுவனவாகும். இவற்றில் முதல் ஐந்து பாகைகளுக்குச் சுக்கிரனும், இரண்டாவதாக உள்ள ஏழு பாகைகளுக்குப் புதனும், மூன்றாவதாக உள்ள எட்டுப் பாகைகளுக்குக் குருவும், நான்காவதாக உள்ள ஐந்து பாகைகளுக்குச் சனியும், ஐந்தாவதாக உள்ள ஐந்து பாகைகளுக்குச் செவ்வாயும் அதிபதிகள் ஆகின்றனர்.

### சப்தாங்கிசம் அறியும்படி

*தருசப்தாங் கிசத்தைப் பகரில்ஓர் இராசி*
*தனையெழு கூறதாய்க் கொண்டே*
*அருமையாம் ஓசை இராசிக்கே அந்த*
*இராசிதொட் டடைவிலோர் ஏழு*
*வருமுறை ஆறு முக்கும இராசி*
*வகுத்திடில் அந்தரா சிக்கே*
*இருமையாம் ஏழாம் இராசிதொட் டடைவில்*
*எண்ணல்சப் தாங்கிசம் என்பர்.* **(93)**

*(இ-ள்.)* ஒரு இராசியை ஏழாகப் பிரிப்பது **சப்தாங்கிசம்** எனப்படும். ஒரு இராசிக்கு உள்ள முப்பது பாகைகளை ஏழாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். ஓசை இராசிகள் அல்லது ஆண் இராசிகள் அல்லது ஒற்றை இராசிகள் என்று சொல்லப்படும் மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஆறு இராசிகளுக்கும் இலக்கனம் தொடங்கி ஏழாவது இராசிவரை கணக்கில் கொள்ள வேண்டும். உக்கும இராசிகள் அல்லது பெண் இராசிகள் அல்லது இரட்டை இராசிகள் என்று சொல்லப்படும் இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறு இராசிகளுக்கும் எட்டாம் இராசி முதல் எண்ணி வரும்பொழுது எந்தக் கிரகம் வருகின்றதோ அதையே குறிப்பிட்ட சப்தாங்கிசத்தின் அதிபதியாகக் கொள்ளவேண்டும்.

## தசாங்கிசம் அறியும்படி

பகர்தசாங் கிசந்தான் பாகைமுப் பதையும்
பத்தங்க மாகவே பிரித்து
விகலுமோ சைக்கே அவ்விரா சியைத்தொட்
டெண்ணுத லுக்குமந் தனக்கே
நிகழிரா சிக்கே ஒன்பதாம் ஓரை
நிலைமுதல் அடுத்தெண்ணிக் கண்டே
புகல்பத்தங் கிசமும் அறிந்திடல் வேண்டும்
புகழ்தசாங் கிசமென்பர் புலவோர். (94)

(இ-ள்.) ஒரு இராசியைப் பத்தாகப் பிரிப்பது தசாங்கிசமாகும். ஒவ்வொரு அங்கத்திற்கும் 3 பாகைகள் வருகின்றன. ஓசை இராசிகள் அல்லது ஆண் இராசிகள் அல்லது ஒற்றை இராசிகள் என்று சொல்லப்படும் மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய ஆறு இராசிகளுக்கும் அந்த இராசியில் இருந்தும், உக்கும இராசிகள் அல்லது பெண் இராசிகள் அல்லது இரட்டை இராசிகள் என்று சொல்லப் படும் இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஆறு இராசிகளுக்கும் ஒன்பதாம் இராசியில் இருந்தும் எண்ணி தசாம்சத்தின் அதிபதியைக் கண்டு கொள்ள வேண்டும்.

## சோடசாங்கிசம் அறியும்படி

சோடசாங் கிசத்தின் வகைதனைக் கூறிற்
றொடுத்திடும் பாகைமுப் பதையும்
வீடியல் பதனா றங்கிச மாக்கி
மேடம்தொட் டடைவின்மீன் வரையிற்
தேடிய ஈரா றுடனயன் மாயன்
சிவன்கதி ரோன்பதி னாறு
மூடியோ சைக்கே மேடம்தொட் டெண்ண
உக்குமக் கதிர்முதல் இடமே. (95)

(இ-ள்.) ஒரு இராசியைப் பதினாறாகப் பகுப்பது **சோடசாங்கிச**மாகும். ஒரு இராசியில் உள்ள முப்பது பாகைகளையும் பதினாறாகப் பகுத்துப் பார்க்க ஒரு பாகை 52½ கலை வரும். ஆண் இராசி அல்லது ஓசைஜ இராசி அல்லது ஒற்றை இராசிகளான மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவற்றிற்கு பிரம்மா, விஷ்ணு, சிவன், சூரியன் என்ற வரிசையில் நான்கு முறையாக 16 பகுப்பிற்கும் வரும். பெண் இராசி அல்லது உக்கும இராசி அல்லது இரட்டை இராசிகளான இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றிற்கு சூரியன், சிவன், விஷ்ணு, பிரம்மா என்ற வரிசையில் நான்கு முறையாக 16 பகுப்பிற்கும் வரும் என்றவாறு.

**சஷ்டியங்கிசம் அறியும்படி**

கலன்கொள்சஷ் டியங்கிசாங் கிசத்தின்வகை உரைக்கும்
காலிராசி யையறுப தங்கிசமாய்ப் பகுத்து
பலன்பெறுகோ ராங்கிசமும் இராட்சசாங் கிசமும்
பெறுதேவ தாங்கிசமும் குபேரனாங் கிசமும்
இலங்கிரட் சோ கனாம்சங்கின் னாங்கிசமும் பிரஷ்டாங்
கிசங்குலக்கி னாங்கிசமும் கரளகோளாங் கிசமும்
புலம்புறுமக் கினியாங்ச முமாயாங்சம் பிரேத
புரியாங்ச மத்துடனே அபாம்பதியங் கிசமே. (96)

(இ-ள்.) இராசியை அறுபது பிரிவாகப் பிரிப்பது **சஷ்டியாங்கிச**மாகும். ஒரு இராசிக்குடைய முப்பது பாகையை அறுபதால் வகுக்க ½ பாகை அல்லது 30 கலையாகும். இந்த சஷ்டியங்கிசங்களின் பெயர்கள். 1)கோராங்கிசம், 2) இராட்சசாங்கிசம், 3) தேவதாங்கிசம், 4)குபேராங்கிசம், 5) கிரட்சோகனாங்கிசம், 6) கின்னராங்கிசம், 7) பிரஷ்டாங்கிசம், 8. குலக்கினாங்கிசம், 9) கரகோளாங்கிசம், 10) அக்கினி யாங்கிசம், 11) மாயாங்கிசம், 12) பிரேதபுரியாங் கிசம், 13) அபாம்பதி அங்கிசம்.

### இதுவுமது

தேவகணே சாங்காலாங் சம்ராகி யாங்சம்
செய்யவமு தாங்கிசமும் சந்திராங் கிசமும்
மேஷமிருத் தாங்கிசமும் கோமளாங் கிசமும்
மிகுந்தபத்மாங் கிசமுடனே லட்சுமியங்கிசமும்
பாவுறுவா கீசுரமுந் திகம்பாராங் கிசமும்
பகருமிங்கி ராங்கிசமும் கலிநாச பாசம்
காவுறுபூ மீசுரமும் கமலாக ராங்சம்
காகுளிக னாங்கிசமும் அவமிருத்தாங்
கிசமும். (97)

(இ-ள்.) 14) தேவகணேசாங்கிசம், 15) காலாங்கிசம், 16)அகியாங்கிசம், 17) அமுதாங்கிசம், 18) சந்திராங்கிசம், 20)கோமளாங்கிசம், 21) பத்மநாபாங்கிசம், 22) லட்சுமியாங் கிசம், 23) வாகீசுராங்கிசம், 24) திகம்பராங்கிசம், 25) மிங்கி ராங்கிசம், 26) கலி நாசாங்கிசம், 27) மீசுரவராங்கிசம், 28)கமலாகராங்கிசம், 29) குளிகனாங்கிசம், 30) அவமிருத் தாங்கிசம்.

### இதுவுமது

ஆனகாலாங் கிசமுந்த வாக்கினியங் கிசமும்
அகோராங் சமும்கண்டாங் கிசமுஞ்சுத் தாங்சம்
ஞானமுறும் அமிர்தபரி பூரணசந் ராங்சம்
நண்ணும்விட ப்ரீதிகுல நாசமெனும் அங்சம்
மானமுறு முக்கியமாம் கிசஞ்சே தாங்சம்
வருமுதற்பாத காத்துடனே காலரூ பாங்சம்
மேனலமாஞ் சவுமியவங் கிசமுடனே கொடிதாம்
மிருத்துநவாங் கிசத்துடனே சீதளவங் கிசமே. (98)

(இ-ள்.) 31) காலாங்கிசம், 32) தவாக்கினி அங்கிசம், 33)அகோராங்கிசம், 34) கண்டாங்கிசம், 35) சுத்தாங்கிசம், 36)அமிர்தாங்கிசம், 37) பரிபூர்ணசந்திராங்கிசம், 38) விஷ பிரிதிக்தாம்சம், 39) குலநாச மாங்கிசம், 40) முக்கிய மாங்கிசம், 41) சேதாங்கிசம், 42) காலரூபாங்கிசம், 43) பர்தகாம்சம்,

44)காலாரூபாங்கிசம், 45) சௌமியயாங்கிசம், 46) மிருத்தாங்கிசம், 47) சீதளாங்கிசம்.

### இதுவுமது

தந்தவிந்த அங்கிசத்தே டிந்துமுகாங் கிசமும்
தருபூரணாங் கிசமுங்கா லாகனியங் கிசமும்
முந்தியதண் டாங்கிசமும் நிருமாலாங் கிசமும்
முதிர்சுபாங் கிசத்துடனே அசுபாங்ச மிக்காய்
வந்தஅது சீதளாங்கி சஞ்சுதாங் கிசமும்
வருபயோத தியங்சம்பி ராணாயாங் கிசமும்
இந்துரே காங்சமென் றறுபதுவர் மோசைக்
கியல்வலமு முக்குமத்துக் கிடமுமாம் இயல்பே. (99)

(இ-ள்.) 48) விந்தவாங்கிசம்,49) இந்து முகாங்கிசம், 50)பூரணாங்கிசம், 51) காலாக்னியங்கிசம், 52) தண்டாங்கிசம், 53) நிர்மலாங்கிசம், 54) சுபாங்கிசம், 55) அசுபாங்கிசம், 56) அதிசீதளாங்கிசம், 57) சுதாங்கிசம், 58) பயோததியாங்கிசம், 59)பிராணாயாங்கிசம், 60)ரேகாங்கிசம். ஓசை இராசிகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள வரிசையிலும் உக்கும இராசிகளுக்கு இறங்கு வரிசையிலும் காணப்படும்.

சாருநவக் கிரகங்கள் தசவர்க்கம் எல்லாம்
தனிதனியே எடுத்தெழுதி அவரவர்க்குப் பொருந்தச்
சேருமதில் இரண்டாகிற் றான்பாரி சாதம்
திகழ்மூன்றுத் தமமாகு நான்குகோ புரமே
பாருணைந்து தனக்குச்சிங் காசனமா றுக்குப்
பார்க்கவதம் ஏழுக்குத் தெய்வலோகம் எட்டு
கீரிலவை சேடிகைமொன் பதயிராவ தாங்சம்
கிரமமாம் பத்துக்குத் தேவேந்திராங் கிசமே. (100)

(இ-ள்.) நவக்கிரகங்களுக்குரிய பத்து வர்க்கங்களையும் தனித்தனியாக எடுத்தெழுதி, அவற்றில் இரண்டில் பொருந்தி வரில் **பாரிசாதாங்கிசம்** என்பர். மூன்றில் பொருந்த அமைந்தால், அதனை **உத்தமாங்கிசம்** என்பர். நான்கில் பொருந்த அமைந்தால், அதனை **கோபுராங்கிசம்** என்பர். ஐந்தில் பொருந்த அமைந்தால், அதனை சிங்காசனாங்கிசம் என்பர். ஆறில் பொருந்த

அமைந்தால், அதனை பார்க்கவதாங்கிசம் என்பர். ஏழில் பொருந்த அமைந்தால், அதனை தேவலோகாங்கிசம் என்பர். எட்டில் பொருந்த அமைந்தால் அதனை வைசேடிகாங்கிசம் என்பர். ஒன்பதில் பொருந்த அமைந்தால், அதனை ஐராவதாங்கிசம் என்பர். பத்தில் பொருந்த அமைந்தால், தேவேந்திராங்கிசம் என்பர்.

**இதுவுமது**

ஏகாங்சந் துர்பலமே யாம்பாரி சாதம்
இனியவெகு சுகமுத்த மாங்கிசமே யாகில்
வாகனங்கோ புரவங்சம் பசுதனமும் விருந்து
மன்னுசிங்கா சனஞ்செல்வம் பார்வதாங் கிசமாம்
பாகமே வித்தைசெல்வம் கீர்த்தியுமே விருத்திப்
பகர்தேவ லோகம்வை ஊர்சேடிகமூர்தி சேனை
யோகாதி காரமயி ராபதமா திக்கம்
உயரிந்த்ராங் கிசஞ்சர்வ பூமனென வுரையே. (101)

(இ-ள்.) ஏகாங்கிசம், தீயபலனாகும். பாரிசாத சாங்கிசம் இனிய சுகத்தைக் கொடுக்கும். உத்தமாங்கிசம் வாகனத்தைத் தரும். கோபுராங்கிசம் பசு, தனம், விருந்து போன்றவற்றைக் கொடுக்கும். சிங்காங்கிசம் செல்வத்தைத் தரும். பார்வதாங்கிசம் வித்தையையும் செல்வத்தையும் புகழையும் விருத்தியையும் அளிக்கும். வைசேடி சாங்கிசம் வாகனங் களையும் படைகளையும், யோகத்தையும் அதிகாரத்தையும் கொடுக்கும். ஐராவதங்கிசம் ஆதிக்கத்தையும், தேவேந்திராங் கிசம் அனைத்தையும் ஆள்பவனாக விளங்கும் ஆற்றலைக் கொடுக்கும்.

**தெய்வ சமயம் அறியும்படி**

தருதேவ லோகசம யந்தனவே கூறிற்
தானசந்தி இருக்கல்சிவ வோமம்பூ சனையும்
பொருந்திடுமர்ச் சனைவேத பாராயண முகமதிப்
போசனந்தான் பொசித்தல் தாம்கந்த புட்பம்
அருஞ்சயனம் சொர்ப்பனமும் கவனயுத்தச் செயமும்
அபசெயமின் போக சுகம் பொசிப்பிர சாங்கம்
குருபுத்திரர் நோக்கம்பிர சாதம்கா ரோகம்
கூறன்மடை தனந்தானம் உபசாரம் இசையே. (102)

(இ-ள்.) தானசத்தி இருக்கல், சிவஹோமம், பூசனை, அர்ச்சனை, வேதபாராயணம், அதிகபோசனம் உண்ணல், மனம் மிகுந்த மலர்கள், சயனம், கனவு, கவனம், போரில் வெற்றி, தோல்வி, பெண் போகம், சுகம், புசிப்பு, அரசர், குரு, புத்திரர், நோக்கம், பிரசாதம், காரோகம், தனம், தானம், உபசாரம் இவை தேவலோக சமயம் எனப்படும்.

**கேந்திராதிய பெயர்கள்**

உரைக்கு மொன்று நான்கேழு பத்துகேந்திரமாம்
ஒன்றைந்தோ டொன்பதுவும் திரிகோண மாகும்
நிரைக்கும்ஆ றெட்டுபனி ரண்டும்துர் தானம்
நீடிரண்டு பதினொன்று தனலாபம் பாக்கியம்
வரைக்குமொரு மூன்றாறு பத்துபதி னொன்றை
மன்னுய செயத்தான மாமெனவே புகல்வார்
தரைக்குமொன்றோ டிரண்டுநான் கைந்தேழெட் டொன்பான்
சாற்றியதோர் பனிரண்டும் பீடையது வாமே. *(103)*

(இ-ள்.) இலக்கனம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றைக் **கேந்திரம்** என்பர். இலக்கனம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றைத் திரிகோணம் என்பர். ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றை **துர்ஸ்தானம்** என்பர். இரண்டாமிடத்தை **தனஸ்தானம்** என்றும், பதினோராமிடத்தை **இலாபஸ்தானம்** என்றும், **பாக்கிய ஸ்தானம்** என்றும் கூறுவர். மூன்றாமிடம், ஆறாமிடம், பத்தாமிடம், பதினோராமிடம் ஆகியவற்றை **உபசய ஸ்தானம்** என்பர். இலக்கனம், இரண்டாமிடம், நான்காமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம் பீடையுடையன என்பார்கள்.

குறிப்பு: இலக்கனம், இரண்டாமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம் பீடையுடையன என்பது ஆய்விற்குறியது.

## தற்கால மித்திரம் அறிதல்

அவரவர்க்கு மூலத்திரி கோணரா சிக்கே
ஆகுமீ ராறிரண்டு நான்கைந்தோ டெட்டு
நவிலொன்பான் உச்சமனை அதிகவுற வென்பர்
நயந்திடுமீ ராறிரண்டு ஒருபத்து நான்குந்
தவமான பன்னொன்றில் மூன்றில்நின்ற கோட்கள்
தற்கால மித்திரமாம் பகல்வருஞ்சா தகர்க்கே
யுவமானக் கதிர்வெள்ளி பிதுர்மாதுர்ச் சனிய
னோண்பிதுரு சோதரமாட் துர் சோதிரிக்கும்
பலமே. *(104)*

*(இ-ள்.)* அந்தந்த கிரகங்களின் மூலத்திரிகோண இராசிகளுக்கு பன்னிரண்டு, இரண்டு, நான்கு, ஐந்து, எட்டு, ஒன்பது ஆகியவற்றின் உச்சவீடு அதிக நட்பாகும். பன்னிரண்டு, இரண்டு, பத்து, நான்கு, பதினொன்று, மூன்று ஆகியவற்றில் நின்ற கோள்கள் தற்கால மித்திரர்கள். பகலில் பிறந்த சாதகர்க்குச் சூரியன், சுக்கிரன் பலம்பெற தந்தைக்கும் தாய்க்கும், சனி பலம்பெற தந்தையின் உடன் பிறந்தோர்க்கும் தாயின் உடன்பிறந்தோர்க்கும் நல்லபலன்.

## தோஷம் தீர்த்தல்

பொறியரவின் தோடமதைப் புதன்தீர்ப்பன் பாம்பு
புதன்தோடந் தனைச்சனியன் தீர்ப்பனிவர் மூவர்
பறிபடுவதோ டந்தனையங் காரகனே தீர்ப்பன்
பாரிலிவர் நால்வர்களின் தோடம்வெள்ளி தீர்ப்பன்
செரியுமிவ ரைவர்கள் தோடமதைப் பொன்னோன்
தீர்ப்பனிவர் அறுவர்களின் தோடமதை மதிதான்
அறிவினோடு தீர்ப்பரிவர் எழுவர்களின் தோடம்
அருக்கனே தீர்ப்பனென அருளினர்விண்
ணவரே!. *(105)*

*(இ-ள்.)* இராகு கேதுக்களால் வரும் தோடத்தை புதன் தீர்ப்பான். இராகு, கேதுக்களாலும், புதனாலும் வரும்

தோஷத்தைச் சனி தீர்ப்பான். இராகு,கேது, புதன், சனி இவர்களால் ஏற்படக்கூடிய தோடத்தை செவ்வாய் தீர்ப்பான். இராகு கேதுக்கள், புதன், சனி, செவ்வாய் இவர்களால் ஏற்படக்கூடிய தோடத்தைச் சுக்கிரன் தீர்ப்பான். இராகு கேதுக்கள், புதன், சனி, செவ்வாய், சுக்கிரன் இவர்களால் ஏற்படக்கூடிய குரு தீர்ப்பான். இராகு கேதுக்கள், புதன், சனி, செவ்வாய், சுக்கிரன் இவர்களால் ஏற்படக்கூடிய தோடத்தைச் சந்திரன் தீர்ப்பான். இராகு கேதுக்கள், புதன், சனி, செவ்வாய், சுக்கிரன், சந்திரன் இவர்களால் ஏற்படக்கூடிய தோடத்தைச் சூரியன் தீர்ப்பான் என்று தேவர்கள் அருளியுள்ளார்கள்.

## கிரியா கமனம் அறியும்படி

செயலான கிரகங்க டன்கிரியா கமனம்
செப்பினர்கள் ஒருஇராசி முப்பதுபா கையுந்தான்
நயமான பாகைஒன்றுக் கோரவத்தை யாக
நவிலுங்கால் நிர்ச்சலபோ சனம்அன்ன தானம்
பயமேவு சுயம்பாகம் விருந்துடனே பொசித்தல்
பரர்வீட்டில் அன்னசிந்த சுகமாகப் பொசித்தல்
அயலார்கள் கொண்டாட வாகனசஞ் சாரம்
அநேகவா கனம்தீர்த்த யாத்திரையும் என்பார். *(106)*

(இ-ள்.) கிரகங்களின் கிரியா கமனம்; ஒவ்வொரு இராசிக்கும் 30 பாகைகள் உள்ளன. ஒவ்வொரு பாகைக்கும் ஒவ்வொரு அவத்தைகளாகக் கூறப்பட்டுள்ளன. நீர்ச்சலி போசனம், அன்னதானம், சுயம்பாகம், விருந்து, பொசித்தல், பிறர்வீட்டில் அன்னம் சுகமாகப் புசித்தல், வாகன சஞ்சாரம், அநேக வாகனம், தீர்த்த யாத்திரை.

## இதுவுமது

மன்னுந்தா னப்பிரட்ட மங்களயாத் திரையும்
வாகான மண்டலாதிக் கங்குலா திக்கம்
சொன்னகிரா மாதிக்கம் குடும்பாதி பத்தியம்
தூயபுரா திக்கமுடன் தேசாதி காரம்

மன்னர்களத் திரமோக தீர்க்கமா யுள்களும்
மருவுகளத் திரமோக நிர்ச்சலநித் திரையும்
பன்னியதோர் சயனப்பிர தாபத்தி னுடனே
பரதார கமனமுடன் உயர்துக்கம் எனவே. (107)

(இ-ள்.) மேலும் தானப் பிரட்டம், மங்கள யாத்திரை, மண்டலாதி, கங்குலாதிக்கம், கிராமாதிக்கம், குடும்பாதி பத்தியம், புராதிக்கம், தேசாதிகாரம், மன்னர் களத்திரமோகம், தீர்க்காயுள், களத்திரமோகம், நிர்ச்சல நித்திரை, சயன பிராப்தி, பரதார கமனம், உயர்தூக்கம் போன்றவை.

குறிப்பு: புராதிக்கம் என்பதன் பொருள் விளங்கவில்லை.

**இதுவுமது**

அண்டிய புவியிற் கமனவற் சிதமும்
ஆபத்துக் காலமுமி ராச
தண்டனைக் கருவி விஷாக்கினி பயமும்
தேகமோ ரோககா லந்தான்
கொண்டமுப் பதையும் ஓசைரா சிக்கே
கூறிய வலமதாய்ச் சுற்றும்
எண்டிசை அறிய வுக்குமந் தனக்கே
இடமதாய்ச் சுற்றிடும் என்பர். (108)

(இ-ள்.) மேலும் கமன வர்ச்சிதம், ஆபத்துக்காலம், இராசதண்டனை, கருவி, விஷம், அக்கினி பயம், ரோக காலம் ஆகியன ஓசை இராசிகள் எனப்படும் ஒற்றை இராசிகளுக்கு இது வலமதாகச் சுற்றும். உக்கும இராசிகள் எனப்படும் இரட்டை இராசிகளுக்கு இடமாகச் சுற்றும் என்று கூறுவார்கள்.

**மூலத்திரிகோணம் அறியும்படி**

அருக்கனுக்குச் சிங்கத்தில் இருபதே பாகை
அம்புலிக்கோர் இடபத்திற் பாகைமூன் றின்மேற்
பெருக்குமிரு பத்தேழு சேய்க்குமே டத்திற்
பேசுமொரு பனிரண்டாம் புதற்குகன்னி தன்னிற்

செருக்குப்பதி னைந்தின்மேற் பத்துகுரு வுக்கே
சிலைவிலொடு பத்துவெள்ளிக் கேதுலாந் தன்னில்
நெருக்குமொரு பதினைந்து சனியனுக்குக் குடத்தில்
நகரிலிரு பதுபாகை மூலத்திரி கோணம். (109)

(இ-ள்.) சூரியனுக்குச் சிம்ம இராசியில் இருபது பாகை, மூலத்திரிகோணம். சந்திரனுக்கு இடப இராசியில் மூன்று பாகை இருபத்தேழு பாகைக்குள் மூலத்திரிகோணம். செவ்வாய்க்கு மேட இராசியில் பன்னிரண்டாம் பாகையில் மூலத்திரிகோணம். புதனுக்குக் கன்னி இராசியில் பதினைந்து பாகைக்குமேல் பத்து பாகைக்குள் மூலத்திரிகோணம். குருவுக்கு தனுசு இராசியில் பத்து பாகையில் மூலத்திரி கோணம். சுக்கிரனுக்குத் துலாம் இராசியில் பதினைந்து பாகையில் மூலத்திரிகோணம். சனிக்குக் கும்ப இராசியில் இருபது பாகையில் மூலத்திரிகோணம்.

**நவக்கிரகப் பார்வை**

இரவிமதி புதன்வெள்ளி பாம்புகள் ஏழு
ஏழுமே பார்வைசெவ்வாய்க் கெட்டுநான் கேழு
விரவியதோர் பார்வைஎன்பார் வியாழத்துக் கேதான்
மிகவைத்தே ழொன்பதுவும் பார்வைதா னாகும்
பரவியதோர் சனியனுக்கு மூன்றேழு பத்து
பார்வை யென்பார் உபயத்திற் படிந்திடுங் கோட்கெல்லாம்
நிரவியதோர் நட்பாகி னாலுபயந் தனையும்
நிரந்தரமாய் நோக்கிடுமே நெட்டிலைவேற் கண்ணாய்!. (110)

(இ-ள்.) சூரியன், சந்திரன், புதன், வெள்ளி, இராகு, கேது ஏழாமிடங்களைப் பார்க்கும்; செவ்வாய் நான்கு, ஏழு, எட்டாமிடங்களைப் பார்க்கும்; குரு ஐந்து, ஏழு, ஒன்பதாமிடங்களைப் பார்க்கும்; சனி மூன்று, ஏழு, பத்து ஆகிய இடங்களைப் பார்க்கும். உபய இராசியில் படிந்திடும் கோள்கள் அனைத்தும் உபயத்தினை நிரந்தரமாக நோக்கும் என்பதை, நீண்ட இலையையும், கூரிய வேலையையும் ஒத்த கண்களையுடைய பெண்ணே! அறிவாயாக.

### கிரக நோக்கின் அளவு

ஏற்றரிய பதினொன்று மூன்றரைக்கால் நோக்காம்
இரண்டாறெட் டீராறு நோக்கில்லை என்பர்
தோற்றுமதி பொன்னவனும் எதிராக நோக்கும்
சூரியனும் செவ்வாயும் கடைக்கண்ணால் நோக்கும்
சாற்றியமால் வெள்ளிதலைக் கவிழ்ந்து நோக்கும்
சனிபாம்பு ஒருகண்ணால் தான்பார்க்கும் என்பர்
போற்றிரவி புகர்செவ்வாய் இராகுசனி திங்கள்
புதன்பொன்னோன் கிழக்குமுதல் வரிசையாய்
பார்க்கும்★. (111)

(இ-ள்.) பதினொன்று, மூன்றாமிடம் அரைக்கால் நோக்கு; இரண்டு, எட்டு, பன்னிரண்டு நோக்கு இல்லை. சந்திரன், குரு எதிர்நோக்கு, சூரியன், செவ்வாய் கடைக்கண் நோக்கு. புதன், சுக்கிரன் தலைக்கவிழ்ந்த நோக்கு. சனி, பாம்பு ஒருகண் நோக்கு. சூரியன்-கிழக்கு; சுக்கிரன்-தென்கிழக்கு; செவ்வாய்-தெற்கு; இராகு-தென்மேற்கு; சனி-மேற்கு; சந்திரன்-வடமேற்கு; புதன்-வடக்கு; குரு-வடகிழக்கு ஆகிய திசைகளைப் பார்க்கும்.

### கிரக நோக்கின் வலிமை

இரவிபுதன் மதிவெள்ளி முழுநோக்கில் வலியர்
இயல்செவ்வாய் முக்கால்நோக் கினில்வலியன் காரி
அரைக்கால்நோக் கினில்வலியன் இராகுவுடன் குருவும்
அரைக்கால்நோக் கினில்வலியன் ஆடுசேவிற் சிங்கம்
திரிவிலங்கு நோக்குமான்கோல் சால்பெண் மிதுனம்
திகழிருக்கால் ஓரையெதிர்ப் பார்க்கும்தேள் கடகம்
விரிபலகாற் றலவோரை தலைக்குனிந்து பார்க்கும்
மீன்பார்வை இராசியே அண்ணாந்து பார்க்கும்.★(112)

(இ-ள்.) சூரியன், புதன், சந்திரன், சுக்கிரன் ஆகியவை 7ஆவது வீட்டை முழுப்பார்வையாகப் பார்ப்பது

வலுவுள்ளது. செவ்வாய் 4, 8 இடங்களை முக்கால் பார்வை யாகப் பார்ப்பது வலுவுள்ளது. சனி, 3, 10 ஆகிய இடங்களை அரைக்கால் பார்வையாகப் பார்ப்பது வலுவுள்ளது. இராகுவும் குருவும் அரைக்கால் நோக்கினில் பார்வையாகப் பார்ப்பது வலிவுள்ளது. மேடம், விடை, தனுசு, சிம்மம் ஆகியவை நான்கு கால்கள் விலங்கு நோக்கு. துலாம், கும்பம், கன்னி, மிதுனம் இருகால்கள் எதிர்நோக்கு. விருச்சிகம், கடகம் பலகால்கள் உடையவை. தலைகுனிந்த பார்வை. மீனஇராசி மேல்நோக்கு.

## இராசி நோக்கு

மேடம்எதிர் விருட்சிகமும் இடபம்எதிர் கோலும்
வீறுசிங்கம் எதிர்மகரம் கடகம்எதிர் குடமும்
நாடறியும் எதிர்பார்வை யாதல்பக்கம் பார்வை
நல்லிடபக் கடகம்ஒன்றுக் கொன்றுபார்ப் பதுபோல்
ஏடவிழுஞ் சிங்கக்கோல் மகரவிருட் சிகமும்
இனியகும்ப மேடம்தான் இசைந்துபக்கம் பார்க்கும்
தேடருமிக் கோட்களிடப் பார்வைவலப் பார்வை
தெரிந்துரைத்த **சயமுனிசூத் திரத்திரி பி** தாமே. *(113)*

(இ-ள்.) மேட இராசி எதிர்பார்வையாக விருச்சிக இராசியையும், இடபஇராசி எதிர்பார்வையாக துலாம் இராசியையும், சிம்ம இராசி எதிர்பார்வையாக மகர இராசியையும், கடக இராசி எதிர்பார்வையாக கும்ப இராசியையும் பார்க்கும். இடப இராசி கடக இராசியையும், சிம்ம இராசி துலாம் இராசியையும், மகர இராசி விருச்சிக இராசியையும், கும்ப இராசி மேட இராசியையும் பக்கமாகப் பார்க்கும். கோள்களில் வலப்பார்வை இடப்பார்வை போன்றவற்றைச் சயமுனி சூத்திரம் கூறியுள்ளது.

## கிரக நோக்க இயல்பு

என்றுமுதற் கிரகங்கள் தன்பார்வை கூறில்
ஏழுக்கே ழாம்பக்கப் பார்வையுமுண் டென்பார்
வென்றிதருங் கோட்களுக்கெல் லாம்பக்கப் பார்வை
வீறாகும் ஒருகண்ணாற் தான்பார்ப்ப தாகும்
துன்றியெதிர் பார்ப்பதுவும் எழுக்கோ ரேழும்
சொல்லுமுழுப் பார்வைபத்து நாலாங்காற் பார்வை
ஒன்றியதோர் ஐந்தெட்டும் அரைபார்வை யாகும்
ஒன்பதுமுக் காற்பார்வை ஒண்கயற்கண் மாதே! (114)

(இ-ள்.) கோள்கள் ஏழும் ஏழாம் பார்வையாகப் பார்க்கும். எல்லா கோள்களுக்கும் பக்கப்பார்வை பார்க்கும். இது பக்கப்பார்வை என்று சொல்லப்படுது ஒருகண்ணால் பார்ப்பதாகும். ஏழு கோள் களுக்கும் ஏழாம்பார்வை முழு பார்வையாகும். பத்தாம் பார்வையும், நாலாம் பார்வையும், காற்பார்வையாகும். ஐந்தாம் பார்வையும் எட்டாம் பார்வையும் அரை பார்வையாகும். ஒன்பதாம் பார்வை முக்கால் பார்வையாகும்.

### இதுவுமது

கதிரவன் செவ்வாய் பார்வை
களிப்புறு நேர திருட்டி
பதியுறு புந்தி வெள்ளி
பக்கபா ரிசமாய் நோக்கம்
மதிகுரு இருவர் தாமும்
வருஞ்சம திருட்டி என்பர்
அதிகமாம் சனியும் பாம்பு
அதோமுகத் திருட்டி யாமே. (115)

(இ-ள்.) சூரியன், செவ்வாய் ஆகிய இரண்டு கோள் களும் நேர்ப்பார்வை உடையவை. புதன், சுக்கிரன் ஆகிய இரண்டு கோள்களும் ஒருபக்கமாகச் சாய்ந்த பார்வையை உடையன. சந்திரன், குரு ஆகிய இரு கோள்களும் சமபார்வை உடையவை. சனி, பாம்பு கீழ்நோக்குப் பார்வை உடையவை

## சாதகன் குணம் அறியும்படி

இரவியுடன் மதியுமன் னவன்செவ்வாய் தரணியிற்
சேனாதி பதிபுந்தி இராசகுமா ரனுமாம்
திரமுடைய குருவெள்ளி மந்திரியாம் சனியன்
சேவுகனென் பாரிரவி சரீரமதி மனது
விரவுசெவ்வாய் தத்துவமாம் புதன்வார்த்தை என்பர்
மென் குருவே ஞானசுகம் வெள்ளிதோன் மத்தன்
பசவரிய சனிதுக்கம் எனஅறிந்து பலன்தான்
பகுத்தறிந்து சொல்லுவது பான்மையுள்ளோர்
கடனே. (116)

(இ-ள்.) சூரியனும்-சந்திரனும் மன்னர்; செவ்வாய், சனி-சேனாதிபதி; புதன்-இராசகுமாரன்; குரு, சுக்கிரன்-மந்திரி; சனி-சேவகன் என்றவாறு.

சூரியன்-உடல்; சந்திரன்-மனம்; செவ்வாய்-தத்துவம்; புதன்-வார்த்தை; குரு-ஞானசுகம்; சுக்கிரன்-சனி-துக்கம்; எனப் பலன் அறிந்து சொல்லவேண்டும்.

## அதியுச்சம் அறியும் வகை

அதிகவுச்சந் தனையுரைக்கிற் கதிரவனுக் குத்தான்
ஆனமே டந்தனிலே பாகையொரு பத்தாம்
மதிதனக்கே இடபத்திற் தான்மூன்று பாகை
வருஞ்சேய்க்கு மகரத்தில் இருபத்தெட் டாகும்
துதிபுதற்குக் கன்னியினிற் பதினைந்து பாகை
சொற்குருவுக் கேகடகந் தன்னிலைந்து பாகை
புதியபுகர்க் கேமீனில் இருப்பத்தேழ் பாகை
புகழ்சனிக்குக் கோலிருப துபாகை என்பார். (117)

(இ-ள்.) அதிக உச்சத்தை அறிய வேண்டுமென்றால், சூரியனுக்கு மேட இராசியில் பத்துப் பாகையில் அதியுச்சம்; சந்திரனுக்கு இடப இராசியில் மூன்று பாகையில் அதியுச்சம்; செவ்வாய்க்கு மகர இராசியில் இருபத்தெட்டாம் பாகையில் அதியுச்சம்; புதனுக்குக் கன்னி இராசியில் பதினைந்து

பாகையில் அதியுச்சம்; குருவிற்குக் கடக இராசியில் ஐந்து பாகையில் அதியுச்சம்; சனிக்குத் துலா இராசியில் இருபது பாகையில அதியுச்சம்.

**அஸ்தமனம் அறியும்படி**

சொல்லியகு சாதிபஞ்ச கிரகங்கள் தானே
சூரியனை யடுக்குமுன் பினின்றகா லமுடன்
புல்லியசேய் பதினேழு புந்திபதி மூன்று
பொருந்துகுரு பதினொன்று வெள்ளிஒன்ப தாகும்
நல்லியல்பாம் காரிக்குப் பதினைந்து பாகை
நயந்திற்கு நின்றக்கால் அத்தமா மாகும்
மெல்லியசெம் பஞ்சினையும் வனசமல ரினையும்
மிகுத்திடுவே ராச்சரிய மெல்லடிஅஞ் சுகமே! (118)

(இ-ள்.) மெல்லிய செம்பஞ்சினையும் தாமரை மலரினையும் தோற்கச் செய்யும் வியக்கத்தக்க வகையில் மென்மையான அழகிய அடிகளைக் கொண்ட இனிய மொழியைப் பேசும் கிளியை ஒத்த பெண்ணே! குசாதிகள் என்று சொல்லப்படும் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களில் சூரியனின் பாகை பதினேழுக்குள் செவ்வாய் நின்றாலும், சூரியனின் பாகை பதிமூன்றுக்குள் புதன் இருந்தாலும், சூரியனின் பாகை பதினொன்றுக்குள் குரு இருந்தாலும், சூரியனின் பாகை ஒன்பதற்குள் சுக்கிரன் இருந்தாலும், சூரியனின் பாகை பதினைந்திற்குள் சனி இருந்தாலும் அஸ்தமனமாகும்.

**கிரக பலக்குறைவு**

தருகதிரோ னுடன்சனியன் கூடினாற் சனியன்
தானிளைப்பன் சனியுடன்செவ் வாய்வந்து கூடின்
மருவுசெவ்வாய் இளைப்பனிந்த சேயுடனே பொன்னோன்
வந்துறையில் குருஇளைப்பன் குருவைமதி கூடில்
அருணமதி இளைப்பன்மதி யுடன்வெள்ளி கூடில்
அசுரமந் திரிஇளைப்பன் வெள்ளிபுந்தி கூடிற்
கருதுபுதன் இளைப்பனிந்த புதனைமதி கூடில்
கலைமதியோன் இளைப்பனெனக் கட்டுரைக்க
லாமே. (119)

*(இ-ள்.)* சூரியனுடன் சனி கூடிநின்றால், சனி பலம் குறைந்தவன். சனியுடன் செவ்வாய் கூடி நின்றால், செவ்வாய் பலம் குறைந்தவன். செவ்வாயுடன் குரு கூடி நின்றால், குரு பலம் குறைந்தவனாவான். சந்திரனுடன் சுக்கிரன் கூடி நின்றால், சுக்கிரன் பலம் குறைந்தவனாவான். சுக்கிரனும் புதன் கூடி நின்றால், புதன் பலம் குறைந்தவனாவான். புதனுடன் சந்திரன் கூடி நின்றால், சந்திரன் பலம் குறைந்தவனாவான்.

**கிரக யுத்தம்**

கொங்கலர்கு சாதிபஞ்சக் கிரமம்ஒரு காலிற்
கூடினாற் கிரகயுத்தம் எதிர்நடக்கும் கிரகம்
துங்கமிகு வெற்றியாம் வக்கிரக் கிரகம்
தோல்வையாம் இவைஇரவி மதியுங்கூ டாதே
சிங்கம்முதல் ஆறுஇராசி யிலிருந்தக் கிரகம்
சிறந்துவரும் கிரகத்தைத் திரமாகச் செயிக்கும்
இங்கிதமாம் கும்பம்முதல் ஆறுஇராசி தன்னில்
இருந்தகிர கம்தன்னை வருங்கிரகம் வெல்லும். *(120)*

*(இ-ள்.)* குசாதிகளாகிய செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன். சனி ஆகியவை ஒரு காலில் கூடி இருப்பின் **கிரக யுத்தம்** எனப்படும். எதிர்நடக்கும் கிரகம் வெற்றிபெறும். வக்கிரக்கிரகம் தோல்வி அடைந்ததாகும். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய ஆறு இராசிகளும் சூரியன், சந்திரன் கூடியிருந்தாலேயன்றி இருந்த கிரகங்கள் வரும் கிரகத்தை வெல்லும். கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கடகம் ஆகிய ஆறு இராசிகளில் இருந்த கிரகத்தை வரும் கிரகங்கள் வெல்லும்.

குறிப்பு: தோல்வை - தோல்வி.

### கிரக நிலை, கால்

*இனியவெள்ளி தெற்கதனிற் உற்றகோள் வடக்கில்*
*எய்தினால் தோல்வியில்லை என்னவே பகர்வார்*
*புனிதருக்கு வெள்ளியுச்சம் கிரகமதி புதனும்*
*போற்றுமிடை நிலைக்கிரகம் சனிரவிசேய் பாம்பும்*
*கனிவில்பூ மிக்கிரகம் சனிசெவ்வாய் இரவி*
*கருதுநாற் காற்கிரகம் புந்திபுகர் பொன்னோன்*
*வனிதைஇரு காற்கிரகம் சனிபலகாற் றவிழ*
*வருஞ்சிறகுக் கொடுபறக்க வண்மைஇவை*
*யாமே.(121)*

*(இ-ள்.)* வெள்ளி தெற்கில் இருக்க அவ்விடத்திற்கு உரியகோள் வடக்கில் இருந்தால் தோல்வியில்லை. சுபக் கோள்களுக்குச் சுக்கிரன் நல்ல பலனைத் தரும். சந்திரனும் புதனும் **இடைநிலைக்கிரகங்கள்**, சனி, சூரியன், செவ்வாய், பாம்பு ஆகியவை **பூமிக்கிரகங்கள்** என்னும் **பூமி நிலைக் கிரகங்கள்**. சனி, செவ்வாய், சூரியன் ஆகியவை **நாற்கால் கோள்கள்**. புதன், சுக்கிரன், குரு ஆகியவை **இருகாற் கிரகங்கள்**; சனி பலகால்களையுடைய கோளாகும்.

### அதியுச்சம், அதிநீசம் அறியும்படி

*உச்சத்திற் நின்ற கோளுக் கோரேழாம் இராசி நீசம்*
*அச்சமாம் வர்க்கம் தன்னில் அதிசவுச் சத்தைப் போலாம்*
*மிச்சமாம் அதிக நீசம் மேவிடும் என்றார் மேலோர்*
*பச்சிளம் குரும்பை என்னப் பணைத்தெழு தனத்தி*
*னாளே.(122)*

*(இ-ள்.)* பசுமையான இளம் குரும்பைப் போன்ற வடிவுடன், பெரிய திமிர்த்தெழுந்த தனங்களை உடைய பெண்ணே! எந்தக்கோளுக்கும் உச்சத்தில் நின்ற இராசிக்கு ஏழாம் இராசி நீசமாகும். உச்சக்கோள் சுபவர்க்கம் பெற்று இருந்தால் அதிவுச்சமாகும். நீசக்கோள் பாவவர்க்கம் பெற்று இருந்தால் அதிநீசமாகும்.

குறிப்பு: கிரகங்கள் முறையே சூரியன் 10 பாகை, சந்திரன் 3 பாகை, செவ்வாய் 28 பாகை, புதன் 15 பாகை, குரு 3 பாகை, சுக்கிரன் 27 பாகை, சனி 20 பாகை உச்சவீடுகளில் இருந்தால் அதிக உச்சம். நீச வீடுகளில் மேற்கண்ட பாகைகளில் இருப்பின் அதிக நீசம்.

## தூமாதி பஞ்சக் கிரகங்களின் ஸ்புடம்

*பருதிபுடத் துடனான்கு ராசியும்பன் மூன்று*
*பாகைதனை உடன்கூட்டத் தூமனுடப் புடமாம்*
*வருதூமன் புடம்தன்னைப் பனிரண்டிற் களைந்தே*
*வந்ததுபா தன்புடமாம் பாதன்புடத் துடனே*
*பொருமாறி இராசியுடன் கூடல்பரி வேடப்*
*புடமதனை மண்டலத்திற் களையவிந்திர தனுவாம்*
*தருமிந்திர தனுப்புடத்திற் பதினேழு பாகை*
*தான்கூட்ட வுபகேது தன்புடம தாமே. (123)*

(இ-ள்.) சூரியனுடைய புடத்துடன் நான்கு இராசியும் பதிமூன்று பாகையையும் கூட்ட தூமனுடைய புடமாகும். தூமனுடைய புடத்தில் பன்னிரண்டைக் கழிக்க வருவது பாதனின் புடமாகும். பாதனின் புடத்துடனே பெருக்கி, இராசியுடன் கூட்டுவது பரிவேடமாகும். பரிவேட புடத்தை மண்டலத்தில் கழிக்க இந்திர தனுவாகும். இந்திரதனு புடத்தில் 17 பாகையைக் கூட்ட உபகேது புடம்.

## பாசகாதிபர்களின் உச்சம்

*ஓதரும் பாச கர்க்கே உச்சந்தான் மேட மாகும்*
*வேதகன் தனக்கே உச்சம் வீறுசேர் இடப மாகும்*
*போதகன் தனக்கே உச்சம் பொற்புறு கன்னி யாகம்*
*மாதுளங் கனியைப் போலும் வளம்பெறு தனத்தி*
*ளாளே. (124)*

(இ-ள்.) மாதுளங்கனியைப் போன்ற வளப்பமான தனங்களை கொண்ட பெண்ணே ! சொல்லுவதற்கு அரிய பாசகர்க்கு மேடஇராசி உச்சமாகும். வேதகர்க்கு இடபம் இராசி உச்சமாகும். போதர்க்குக் கன்னி இராசி உச்சமாகும்.

### பரிவேடம் முதலியவற்றின் உச்சம்

பரிவேடம் தனக்குச்சம் மிதுனமே யாகும்
பகர்கலைக்கியா னுக்குச்சம் சிங்கமென லாகும்
உரியவிந்திர தனுசுக்குச் சந்தனுசே யாகும்
உற்பாதந் தனக்குச்சம் கும்பமென லாமால்
அரியசோ மனுக்குச் சம் கன்னிகுசன் தனக்கே
அழகான மீனமென்பார் பருதிக்கு மேடம்
தெளிவுறுதூ மனுக்குச்சம் மகரந்தா னாகும்
செய்யகே துவுக்குச்சம் மிதுனமென லாமே. (125)

(இ-ள்.) பரிவேடத்திற்கு உச்சவீடு மிதுனஇராசியாகும். கலைக்கியானனுக்கு உச்சிவீடு சிம்ம இராசியாகும். இந்திர தனுசுவிற்கு உச்சவீடு தனுசு இராசியாகும். உற்பாதத்திற்கு உச்சவீடு கும்ப இராசியாகும். சந்திரனுக்கு உச்சவீடு கன்னி இராசியாகும். செவ்வாய்க்கு உச்சவீடு மீன இராசியாகும். சூரியனுக்கு உச்சவீடு மேட இராசியாகும். தூமனுக்கு உச்சவீடு மகர இராசியாகும். கேதுவுக்கு உச்சவீடு மிதுன இராசி.

### குளிகாதிபர் நிலை

எற்பாய குளிகனுத யந்தனுக்கு முன்னே
இருபத்தி ரண்டரைப்பா கையிற்காலன் நிற்பர்
அற்புதமாம் மாந்தியின்பின் னேயிருபத் திரண்டொான்
டரைப்பாகை தன்னிலே எமகண்டன் உறைவன்
பிற்பாயும் எமகண்டன் பின்னிருபத் தெட்டாம்
பேதமிலா அரையிலர்த்தப் பிரகாரன் இருப்பன்
பொற்பாய சோதிடமாம் வடமொழிநூற் புலவர்
புகன்றுரைத்த திவ்வண்ணம் பூவினிளங் குயிலே! (126)

(இ-ள்.) குளிகனுக்கு இருபத்து இரண்டரை பாகையில் காலன் நிற்பான்; குளிகனுக்கு இருபத்து ஒன்றரைப் பாகையில் இயமகண்டன் நிற்பான்; இயமகண்டனுக்கு இருபத் தெட்டரை பாகையில் அர்த்தப் பிரகாரன் இருப்பான்

என்பதை பூவைப் போன்று மென்மையான இளமை பொருந்தி இனிய குரலினையுடைய பெண்ணே ! சிறப்புடைய சோதிடத்திலிருந்து வடமொழிப் புலவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

**பாசகாதியர்களின் கதி**

கதிரவன்தன் கதிபோலப் பருதிபாசகனும்
கதிரினுச்சத் துடனின்றே இடமாகச் செல்வன்
மதிகதிபோல் வேதகனும் மதியினுச்சத் துடனே
வந்துநின்றே இடம்செல்வன் வக்கிரன்தன் கதிபோல்
சதிருடைய தூமன்சேய் உச்சத்தி னுடனே
சார்ந்தவனும் இடம்திரிவன் சாமன்போ தகனும்
புதியபுந்திக் குள்ளபடி நடப்பருபா தகன்தான்
போற்றும்வெள் ளிக்கற்ற படியிடமாகச்
செல்வன். (127)

(இ-ள்.) சூரியனின் இயக்கத்தைப் போல சூரியனின் பாசகனும் சூரியனின் உச்சத்துடன் இடமாகச் செல்வான். சந்திரனின் இயக்கத்தைப் போல வேதகன் சந்திரனின் உச்சத்துடன் இடமாகச் செல்வான். செவ்வாயின் இயக்கத்தைப் போல செவ்வாயுடன் தூமன் இடமாகச் செல்வான். புதனின் இயக்கத்தைப் போல புதனின் உச்சத்துடன் போதகன் சாமன் காரகன் இடமாகச் செல்வான். உற்பாதகன் வெள்ளியின் இயக்கத்தைப் போல இடமாகச் செல்வான்.

சாயாக் கிரகங்களின் சாரம் முற்றிற்று.

## சயன இராகுவின் அடைவும் அதனது பலனும்

*சயனராகு பின்கதியைத் தானெடுத்துக் கூறிற்*
*தரும்உதயம் முதலாக அந்தியமாம் வரைக்கும்*
*நியமமாய் இரண்டரைநா ழிகையொருரா சியிலே*
*நிற்கும்வகை உதயத்தின் மகரத்தில் உதிப்பன்*
*செயமகரங் கண்கும்பம் வாய்மீன முகமாம்*
*திரண்மேடம் வயிறிடபம் யோனிதண்டு வாலாம்*
*இயல்மிதுன வரையாறி இராசியும்இவ் வண்ணம்*
*இருப்பனிராக் காலமுந்தான் இவ்வகையேன்*
*றுரையே.(128)*

*(இ-ள்.)* சயன இராகுவின் கதியானது இலக்கனம் முதல் 2½ நாழிகை ஒரு இராசியாகப் பன்னிரண்டு இராசிகளில் நிற்பான். பகலில் மகரத்தில் உதிப்பான். மகரம்-கண்; கும்பம்-வாய்; மீனம்-முகம், மேடம்-வயிறு; இடபம்-யோனி, மிதுனம்-வால். இரவில் மகரம் முதல் மிதுனம் வரை ஆறு இராசிகளிலும் இருப்பான்.

### சயன இராகுவின் பலன்

*பன்னிய ஏழாம் இடத்தினுக் கிறையும்*
*பாசகன் யோனிரா குவுமே*
*தன்னிலே வந்து கூடிடுங் காலம்*
*சாதகர்க் கரிட்டமே யாகும்*
*முன்னுமா ரகத்தோன் றிசையவன் புத்தி*
*உட்புசிப் பவனிட மாக*
*மன்னவன் வாரம் அவனது நாளில்*
*அரிட்டம்வந் தெய்திடும் என்பர். (129)*

*(இ-ள்.)* ஏழாம் இடத்திற்கு அதிபதியும் பாசகன் யோனி இராகுவும் கூடுகின்ற காலத்தில் சாதகனுக்கு மரணம் ஏற்படும். மாரகத்தோன் திசையில் அவனுடைய புத்தியில் அவனுடைய அந்தரத்தில் அவன் இடத்தில் அவனது வாரத்தில் அவனுடைய நட்சத்திரத்தில் மரணம் நேரும் என்று கூறுவர்.

## ஓரா இலக்கனம்

திண்டிறற் கதிரோன் உதயமே முதலாய்ச்
சென்மலக் கனமெட்டும் எண்ணிக்
கண்டநா ழிகையை இரண்டரை அதனிற்
கழித்ததே ஓரைலக் கனமாம்
எண்டிசை உதய மோசையே யாகி
இலக்கனம் முதலாய் எண்ணல்
அண்டிய உதயம் உக்கும மாகி
அப்பிர தட்சண மாமே. (130)

(இ-ள்.) சூரியோதயம் முதலாக சென்ம இலக்கனம் வரை எண்ணி, வந்த நாழிகையை 2½ யால் வகுத்து வருவது ஓரை இலக்கனமாகும். உதய இலக்கனம் ஓசை அல்லது ஒற்றை இராசி முதலாக இடப்பக்கமாக ஒவ்வொன்றாக எண்ணவேண்டும். உதய இலக்கனம் உக்கும இராசியாகிய இரட்டை இராசியாக இருப்பின் இராசி முதலாக வலப் பக்கமாக ஒவ்வொன்றாக எண்ண வேண்டும்.

குறிப்பு: ஓரா - ஹோரா

## கடிகா இலக்கனம்

உன்னிய கடிகா இலக்கனம் உரைக்கில்
உதயாதி நாழிகை தன்னை
மன்னிய உதய ஓசைய தாகில்
வந்தலக் கனம்முதல் எண்ணல்
சொன்னலக் கனமே உக்கும மாகிற்
தொடர்ச்சியாய்ச் சவ்விய மாகப்
பன்னியே பார்த்தல் சயமுனி உரைத்த
பழுதிலா சூத்திர முறையே. (131)

(இ-ள்.) சூரியோதயம் முதலாக தம்தம் சென்ற நாழிகையை, இலக்கனம் ஒற்றை இராசியாக இருப்பின் இடப்பக்கமாக ஒவ்வொன்றாக எண்ணுதல், இலக்கனம் உக்கும இராசியாக இருப்பின், வலப்பக்கமாக ஒவ்வொன் றாக எண்ணுதல் கடிகா இலக்கனமாகும் என்பது சயமுனி கூறிய குற்றமற்ற சூத்திரத்தின் படி குறியுள்ளதாகும்.

## ஓராதிய இலக்கன பலன்

உரைத்தலக் கனத்தோன் ஓரைலக் கனத்தை
உயர்பெறு கடிகைலக் கனத்தை
நிரைத்தொரு கோளே பார்க்கின்மன் னவனார்
நிகரிரு இராசியைப் பார்க்கிற்
றுரைத்தள கர்த்த னோரிரா சியினைத்
துடர்சுபர் திருட்டியாய்ப் பார்க்கிற்
றரைக்குள்வாழ் வுடைய கிரகஸ்தன் எனவே
சாற்றினர் அரிவையர்க கரசே ! (132)

(இ-ள்.) ஓரா லக்கனத்தையும் கடிகை இலக்கனத்தையும், சென்ம இலக்கனாதிபதியும் சுபக்கோள் பார்க்கில், இச்சாதகன் மன்னனாவான். இவற்றில் இரண்டு இராசிகளைச் சுபக்கோள் பார்க்கில் இச்சாதகன் படைத்தளபதியாக விளங்குவான். இவற்றில் ஒரு இராசியைச் சுபக்கோள் பார்க்கில் இச்சாதகன் ஒரு நல்ல குடும்பத்தலைவனாக இருப்பான் என்று பெண்களுக்கெல்லாம் அரசியாக விளங்கும் பெண்ணே! அறிவாயாக.

## ஆரூட இலக்கனம்

சிறந்த வாரூட இலக்கனம் தன்னைச்
செப்பிடின் உதயநா யகனே
பிறந்தலக் கனந்தொட் டெத்தனை இராசி
பெற்றிருந் தகன்துகை தன்னை
மறந்திடா தெண்ணி உதயத்தோன் நின்ற
வழிமுறை யாயெண்ணிக் கண்டே
கறங்குமா ரூட இலக்கனம் என்றே
கட்டுரை செய்தனர் காணே. (133)

(இ-ள்.) சென்ம இலக்கனம் முதல் இலக்கனாதிபதி. இருந்த இராசி வரை உள்ள எவ்வளவோ, அவ்வளவு இலக்கனாதிபதியை இருக்கும் இராசிவரை எண்ணி கண்டு கூறுவது ஆரூட இலக்கனம் என்று சோதிடக்கலையில் வல்லவர்கள் கூறியுள்ளார்கள். காண்பாயாக !

## ஆரூட இலக்கன பலன்

*நயக்குமா ரூட இலக்கனந் தனக்கே*
*நாலுடன் இரண்டுபன் னொன்றிற்*
*செயப்பட இருந்தோர் இவர்களுக் கொன்பான்*
*சென்றிருந் தோர்களும் சுபராம்*
*வியப்படு நான்குக் கொன்றுவாக் கினுக்கே*
*வியத்தினில் லாபத்துக் கேதான்*
*இயற்கையாய் மூன்றில் இருந்துளோர் இவர்கட்*
*கெதிரிடும் பகைவரென் றுரையே. (134)*

*(இ-ள்.) ஆரூட இலக்கனத்திற்கு நான்காமிடம், இரண்டாமிடம், பதினோராம் இடம இவர்களுடன் இருந்த கிரகங்கள் இவர்களுக்கு ஒன்பதாம் இடத்தில் நின்ற கிரகங்கள் சுபர்கள். நான்காமிடம், இலக்கனம், இரண்டாமிடம், பன்னிரண்டாமிடம், பதினோராமிடம் ஆகிய இவ்விடங் களுக்கு மூன்றாமிடத்தில் இருப்பவர்கள் இவர்களுக்குப் பகைவர்கள் என்றவாறு.*

குறிப்பு: நான்காமிடம் சுபம், பகை என்று கூறப்பட்டுள்ளது. இது ஆய்விற்குரியது.

## இதுவுமது

*ஆரூட லக்கனத்துக் கேலாபம் தன்னை*
*அடர்ந்தொரு கோள்பார்க்கில் செலவில்லை செல்வன்*
*பாரூடம் ஆரூட இலக்கனத்துக் கேதான்*
*பத்திரெண்டும் பதினொன்று நாலினுக்கே அதிபர்*
*பேரூடு மாரூட இலக்கனத்தைப் பார்க்கிற்*
*பிரபலவான் ஆரூடம் தன்னில்உத யத்திற்*
*போரூடும் யாவரிருந் தாலனர்த்தம் பலமாம்*
*புகழ்ச்சுபரும் பாபருமே பொருந்திடிற்*
*றுர்ப்பலமே. (135)*

(இ-ள்.) ஆரூட இலக்கனத்திற்கு பதினோராம் இடத்தைச் சுபக்கோள் பார்க்கில், இச்சாதகன்செல்வனாக விளங்குவான். பன்னிரண்டாம் இடம், பதினோராம் இடம், நான்காமிடம் ஆகிய இடங்களுக்கு அதிபதிகள் ஆரூட இலக்கனத்தை நோக்கினால் இச்சாதகன், பிரபலமானவனாக இருப்பான். ஆரூட இலக்கனத்தில், இலக்கனத்தில் சுபக்கோள் அல்லது பாவக்கோள் எது நிற்பினும் துர்ப்பலமேயாகும்.

### நட்சத்திர இலக்கனம் அறியும்படி

*சீரான நட்சத்திர இலக்கனத்தை உரைக்கிற்*
*சென்மநட் சத்திரத்தில் சென்றநா ழிகையை*
*நேராக ஐந்தைந்து நாழிகையாய்த் தள்ளி*
*நிலையறிந்த தொகைதன்னை அந்தநாள் தனக்கே*
*ஏராரும் திசைநாதன் கேதுவே யாகி*
*இலக்கனந்தொட் டபசவ்வியம் எண்ணியே காண்பார்*
*ஊராறும் இரவிமுதல் எழுவரிரா குக்கு*
*உதயமுதற் பார்ப்பதென உரைத்தனர்சூத் திரமே.(136)*

(இ-ள்.) சென்ம நட்சத்திரத்தில் சென்ற நாழிகையை ஐந்தைந்து நாழிகையாகத் தள்ளி அறிந்த தொகையை, திசைநாதன் கேதுவாக இருப்பின் சென்ம இலக்கனம் தொட்டு, இடமாக எண்ணிக் காண்பார்கள். சூரியன் முதல் ஏழு கோள்கள் முதல் அல்லது இராகு இருப்பின் சென்ம இலக்கனம் முதல் பார்ப்பார்கள்.

### நட்சத்திர இலக்கன பலன்

*ஏற்றநாள் திசைநாதன் உச்சநீ சத்தில்*
*இருந்திடினும் பாக்கியவான் குருவெள்ளி யுடனே*
*தோற்றமறக் கூடிடினும் வெகுசெல்வ னாவன்*
*சொல்லரிய நட்சத்திரத்தி இலக்கனத்தி லேதான்*
*மாற்றரிய பூரணச்சந் திரனிருக்கு மேனும்*
*மருவுமுச்சர் இருந்தாலும் நீசர்இருந் தாலும்*
*நாற்றிசையும் புகழாக ராசயோ கமுமே*
*நண்ணுமென வேயுரைத்தார் நளினமலர்த் திருவே. ★(137)*

*(இ-ள்.) தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளை யொத்த அழகுடைய பெண்ணே! நட்சத்திர இலக்கனத்தில் திசைநாதன் உச்சம் அல்லது நீசத்தில் இருப்பினும் இச்சாதகன் பாக்கியவானாக விளங்குவான். குரு, வெள்ளியுடன் சேர்ந் திருந்தாலும் இச்சாதகன், மிகுந்த செல்வனாவான். நட்சத்திர இலக்கனத்தில் பௌர்ணமி சந்திரன் இருந்தாலும் உச்சக் கோள்கள் இருந்தாலும் நீசக்கோள்கள் இருந்தாலும், இச்சாதகன் நான்கு திசைகளும் போற்றத்தக்க இராச யோகத்தை உடையவனாக இருப்பான் என்று சோதிட வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.*

**காரக இலக்கனம்**

*காரகலக் கனமுரைக்கில் உதயநா ழிகையைக்*
*கருதுமைந்து நாழிகையிற் கழித்தெழுந்த பின்னர்*
*வாரமுடன் கிரகபுடம் அதிலதிக பாகை*
*வந்தகோள் இருக்கின்ற இராசிமுதற் பார்ப்பார்*
*பாரதனில் அங்கிசலக் கனம்உரைக்குங் காலை*
*பண்பிற்கா ரகனிருந்த துவாதசாங் கிசமே*
*கூறவரும் அங்கிசலக் கனமாகக் கொள்வர்*
*கோகனப் பொருட்டிலுறை குதலைஇளங்*
*குயிலே! ★(138)*

*(இ-ள்.) தாமரை மலரின் பீடத்தில் உறைந்திருக்கின்ற திருமகளையொத்த அழகையும் குழந்தையைப் போன்று இனிய குயில்மொழியையும் கொண்ட பெண்ணே! உதய நாழிகையை ஐந்து நாழிகையில் கழித்த பின்னர் கிரகபுடம் எழுதி, அதில் அதிக பாகையில் வந்த கோள் இருக்கின்ற இராசியே* **காரக இலக்கனமாகும்.** *பன்னிரு அங்கிசங்களில் காரகன் இருந்த இலக்கனமே* **அங்கிச இலக்கனமாகும்.**

## ஆதரிச இலக்கனம்

ஆதரிச இலக்கனந்தான் உதயஇரா சிக்கே
அடுக்குமே ழாமிடமே யாகுமெனப் புகல்வர்
ஓதரிய வாயுறுலக் கன ந்தன்ன உரைக்கில்
உதயநா ழிகையைந்திற் கழித்துவந்த தொகையைச்
சீதமதி இருந்தநவாங் கிசமுதலாய் எண்ணித்
தெரிந்துசரந் திரமுபய இலக்கனமட் டுக்கும்
ஆதவன்சந் திரன்சனிய னோரைநா யகனுக்
கவரவர்கள் பலமுறவும் பகையுமறிந் துரையே. *(139)*

*(இ-ள்.)* உதய இராசிக்கு ஏழாமிடம் ஆதரிச இலக்கனம் எனப்படும். வாயுறு இலக்கனம் என்பது உதய நாழிகையை ஐந்தில் வகுத்து வந்த தொகையை நவாங்கிசம் முதலாக எண்ணி சரம், திரம், உபய இலக்கனம் வரை, சூரியன், சந்திரன், சனி, இராசியாதிபதி ஆகியோரின் பலம், பகை, நட்பு ஆகியவற்றை அறிந்து உரைக்கவேண்டும்.

## ஆயுள் இலக்கனம்

சரத்துடனே சரம்தீர்க்கம் திரந்தான்மத் திபமாம்
சாற்றுஞ்சரம் உபயமெனிற் றானற்ப மாகும்
திரத்துடனே திரமற்பம் திரஞ்சரமத் திபமாம்
திரத்திலுப யந்தீர்க்கம் செழுங்கயற்கண் மயிலே !
வரத்திலுப யத்துடனே உபயமற்ப மாகும்
வரும்உபயம் சரமெனின்மத் திபமாகும் என்பர்
உரத்துபயத் துடன்திரமே தீர்க்கவய தாகும்
ஓராசா ரந்தனிலே உரைத்ததிவை யாமே. *(140)*

*(இ-ள்.)* சரத்துடன் சரம் சேரின் ஆயுள் தீர்க்கமாகும். சரத்துடன் திரம் சேர மத்திமமாகும். சரத்துடன் உபயம் என்றால் ஆயுள் அற்பமாகும். திரத்துடன் திரம் சேர அற்பாயுளாகும். திரமும் சரமும் சேர மத்திமமாகும். திரத்தில் உபயம் சேர தீர்க்காயுள் என்றவாறு. உபயத்துடன் உபயம் சேர வயது அற்பமாகும். உபயத்துடன் சரம் சேரின் ஆயுள் மத்திமமாகும். உபயத்துடன் திரம் சேர தீர்க்காயுளாகும்.

## இதுவுமது

தேடுசன்ம இலக்கனமும் ஓரையின்இலக் கனமும்
தெரிந்தபின்னர் அட்டமத்தோ முதயஇரா சிக்கு
நீடுமதி இலக்கனமும் அட்டமாதி பன்தான்
நின்றஇலக் கனத்துடனே நிகராகக் கண்டே
நாடுமிந்த மூவகையும் உத்தமமாய் ஊறுமேல்
நண்ணிலற்ப வயதாமேன் மூன்றுமற்பம் என்னில்
வாடுறுமத் திபவயதாய் வகுக்குமிந்த மூன்றும்
மத்திபமே யாகிற்தீர்க் காயுளென்பர் மயிலே! (141)

(இ-ள்.) மயிலே சென்ம இலக்கனமும் ஓரையின் இலக்கனமும் தெரிந்த பின்னர், எட்டாமிடத்திற்கு அதிபன், உதய இராசி அதிபன் இவற்றிற்கு உறவு, சந்திர இலக்கனத்திற்கும், அட்டமாதிபனுக்கும் உள்ள உறவு, சென்ம இலக்கனம் ஆகியவற்றைக் கொண்டு மூவகையும் உத்தமமாய் இருப்பின் அற்பாயுள் என்பர். மூன்றும் அற்பமாய் இருக்கில் மத்திம வயது என்பர். மூன்றும் மத்திமமாக இருந்தால் தீர்க்காயுள்.

## இதுவுமது

கடிகைலக் கினத்தி லேதான்
கடுஞ்சனி இருக்கப் பார்க்கின்
மடிவது திண்ணம் என்பார்
வருஞ்சுபர் நின்றா ரேனும்
படியுறு சுபர்பார்த் தாலும்
பகருவர் அரிட்டம் என்றே
துடிபெறு வயதீ ராறிற்
தோன்றிடும் அரிட்டம் தானே. (142)

(இ-ள்.) கடிகை இலக்கனத்தில் சனி இருந்தாலும் கடிகை இலக்கனத்தைப் பார்த்தாலும் இச்சாதகன் இறப்பது உறுதி என்பர். கடிகை இலக்கனத்தில் சுபக்கோள் நின்றாலும் கடிகை இலக்கனத்தைச் சுபக்கோள் பார்த்தாலும் இச்சாதகன் தன்னுடைய ஆறாவது வயதில் மரணம் அடைவான்.

**நட்சத்திர மண்டலங்கள்**

*மகசிரம்பூ ராடம்இரே வதிசதய மூலம்*
*மன்னும்உத்தி ரட்டாதி யாதிரையும்* **வருணன்**
*நிகர்பதியாம் அதனுடமுடன் ரோகணியும் கேட்டை*
*நீடோணம் அபிசித்துப் புனர்த்தமுத் திராடம்*
*பகருமாகேந் திரநாட்டி லாமத்தம் அவிட்டம்*
*பரிநாளுத் திரம்சோதி சித்திரைஆ யிலியம்*
*புகல்காற்றி னிடபூசம்பூ ரட்டாதிவி சாகம்*
*பூரங்கார்த் திகைப்பரணி மகேந்தீமண் டலமே. (143)*

*(இ-ள்.)* மிருக சீரிடம், பூராடம், இரேவதி, சதயம், மூலம், உத்திரட்டாதி ஆதிரை ஆகியவை **வருண மண்டலம்.** அனுடம், ரோகணி, கேட்டை, திருவோணம், அபிசித்து, புனர்பூசம், உத்திராடம் **மாகேந்திர மண்டலம்.** அஸ்தம், அவிட்டம், அசுபதி, உத்திரம், சுவாதி, சித்திரை, ஆயிலியம் ஆகியவை **காற்றுமண்டலம்.** பூரட்டாதி, விசாகம், பூரம், கார்த்திகை, பரணி, மகம் ஆகியவை **தீமண்டலம்.**

**விஷக்கடிகை**

*அச்சுவினி சதயமிரு பத்தொன்றாம் பரணி*
*ஆயிலியம் பூரம்உரைப் பவைமுப்ப தாகும்*
*மெச்சியகார்த் திகைஐம்பான் மகமிருப தாகும்*
*மென்பூசம் நாற்பத்தொன் றாதிரையோர் நான்காம்*
*நச்சுமுரோ கணிபுனர்த்தம் உத்திரமும்சித் திரையும்*
*நன்மூலம் அவிட்டமுத் திராடம்பதி னாலாம்*
*உச்சிதமாம் கேட்டையுத்தி ரட்டாதி அனுடம்*
*ஒருபதினெட் டாகுமென வரைந்தனர்விண்*
*ணவரே.(144)*

*(இ-ள்.)* உதயம் முதல் அசுவதி, சதயம் பதினொரு நாழிகைக்குப் பின்பு பரணி, ஆயிலியம், பூரம் முப்பதுக்குப் பின்பு கார்த்திகை ஐம்பது நாழிகை பின்பு, மகம் இருபதிற்குப் பின்பு, பூசம் நாற்பத்து ஒரு நாழிகைக்குப் பின்பு, திருவாதிரை

நான்கு நாழிகைக்குப் பின்பு, உரோகணி, புனர்பூசம், உத்திரம், சித்திரை, மூலம், அவிட்டம் பதினான்கு நாழிகைக்குப் பின்பு, கேட்டை, உத்திரட்டாதி, அனுஷம் பதினெட்டு நாழிகைக்குப் பின்பு.

### இதுவுமது

சோதியிரே வதிஇருபத் திரண்டாகும் திருவோணம்
சொல்லும் மூன்றாம்
ஏமதில் பூரட்டாதி விசாகம்பூ ராடம்
பத்தொன் பதேயாம்
ஓதியதோர் அத்தத்துக் காறென்பார் தினங்களத்தில்
இனிஉதயம் தொட்டே
தீதிலாநட் சத்திரந் தன்னில் விடகடிகை
தெரிவ தாமே. (145)

(இ-ள்.) சுவாதி, இரேவதி இருபத்தி இரண்டு நாழிகைக்குப் பின்பு, திருவோணம் மூன்று நாழிகைக்குப் பின்பு, பூரட்டாதி, விசாகம், பூராடம் இருபத்து ஒன்பது நாழிகைக்குப் பின்பு, அஸ்தத்திற்கு ஆறு நாழிகைக்குப் பின்பு நான்கு நாழிகைகள் விடகடிகை.

### புஷ்கர யோகம்

ஏற்றியபுட் கரயோகம் அடுயிருபத் தொன்றில்
இடபமொரு பதினாலின் மிதுனம்பதி னெட்டில்
தேற்றியகர்க் கடகமெட்டிற் சிங்கமுப்பத் தொன்றில்
செய்யகன்னி ஒன்பதுகோல் இருபதுவும் நான்கிற்
சாற்றரிய விருச்சிகம்பன் னொன்றாகும் தனுசு
தன்னிலிரு பத்துமூன்றாம் மகரம் பன்னான்
மாற்றரிய கும்பம்பத் தொன்பதாம் மீனம்
வரும்ஒன்ப தாம்பாகை வகுத்தமுறை தானே. (146)

(இ-ள்.) மேட இராசி இருபத்தொன்றாம் பாகை; இடப இராசி பதினான்காம் பாகை; மிதுன இராசி பதினெட்டாம்

பாகை; கடக இராசி எட்டாம் பாகை; சிம்ம இராசி முப்பத்தொன்றாம் பாகை; கன்னி இராசி ஒன்பதாம் பாகை; துலா இராசி இருபத்து நான்காம் பாகை; விருச்சிக இராசி பதினோராம் பாகை; தனுசு இராசி இருபத்து மூன்றாம் பாகை; மகர இராசி பதினான்காம் பாகை; கும்ப இராசி பத்தொன் பதாம் பாகை; மீன இராசி ஒன்பதாம் பாகை புஷ்கர யோகம்.

**மிருத்து பாகம்**

இகன்மிருத்து பாகமே மேடமோ ராறில்
இடபத்தைந் துத்தண்டே இருபத்தி ரண்டிற்
புகல்கடகம் இருபத்தி ரண்டுசிங்கம் தன்னிற்
போற்றியமூ வேழுகன்னி தன்னிலொன்றே யாகும்
நிகர்துலா நாலாந்தேள் இருபத்து மூன்றில்
நொடியசிலை பதினாறின் மகரமிரு பதிலே
அகலியசா லிருபதிலே மீனந்தான் பத்தில்
ஆகுமிருத்து வம்பாகை அறிந்துசெல்வ தாமே. (147)

(இ-ள்.) மேட இராசியில் ஆறாம் பாகை; இடப இராசி பதினைந்தாம் பாகை; மிதுன இராசி இருபத்திரண்டாம் பாகை; கடக இராசி இருபத்திரண்டாம் பாகை; சிம்ம இராசி இருபத்தோராம் பாகை; கன்னி இராசி முதல் பாகை; துலா இராசி நான்காம் பாகை; விருச்சிக இராசி இருபத்து மூன்றாம் பாகை; தனுசு இராசு பதினாறாம் பாகை; மகர இராசி இருபதாம் பாகை; கும்ப இராசி இருபதாம் பாகை; மீன இராசி பத்தாம் பாகை மிருத்து பாகம்.

**வார, முக்குணவேளை**

ஞாயிறு புந்தி காரி நவிலும்தா மதமே யாகும்
மேயுறு மதிவி யாழும் இயலூறு சாத்மீ கந்தான்
நேயமாம் செவ்வாய் வெள்ளி நகரிரா சதமே என்பார்
காயுறு மூன்றே முக்காற் கடிகையிம் முறையின் காணே. (148)

(இ-ள்.) சூரியன், புதன், சனி ஆகிய மூன்று கிழமை களில் தாமத வேளை முதலில் வரும். சந்திரன், குரு ஆகிய

இரண்டு கிழமைகளில் சாத்வீக வேளை முதலில் வரும் . செவ்வாய், சுக்கிரன் ஆகிய இரண்டு கிழமைகளில் இராசத வேளை முதலில் வரும். இதன் காலம் மூன்றே முக்கால் நாழிகையாகும்.

## இராகு காலம்

அருக்கன்சேய் பொன்னோன் புதன்புகர் சனியன்
அம்புலி இராகுவாம் என்றே
உறித்துள காலம் உரைத்திடில் அந்நாள்
உதயவா ராதிபன் முதலாம்
விருத்தியாம் கடிகை ஒருமூன்றே முக்கால்
வீதமாம் அடைவிலே உரைப்பர்
பொருந்திய பகலும் இரவும்இப் படியே
புசிப்பதி இராகுகா லம்மே. *(149)*

*(இ-ள்.)* ஞாயிறு, செவ்வாய், குரு, புதன், வெள்ளி, சனி, சந்திரன் ஆகிய கிழமைகளில் உதயத்தில் அந்தந்தக் கிழமைகளில் வரிசைக் கிரமமாக 26 ¼, 22 ½, 18 ¾, 15, 11 ¼, 7 ½, 3 ¾, ஆகிய இந்த நாழிகைக்கு மேல் 3 ¾ நாழிகை கொண்ட நேரமாகும்.

## கிரகங்களின் அதிகாரம்

வருடத்துக் கதிபன் காரி மாதத்துக் கதிபன் பொன்னோன்
திருவுற்ற அயனத் துக்கே தினகரன் அதிப னாகும்
தருமதிக் கதிபன் புந்தி தான்பட்சத் ததிபன் வெள்ளி
அருடினத் ததிபன் செவ்வாய் அம்புலி முகூர்த்தத்
தென்னே. *(150)*

*(இ-ள்.)* ஆண்டிற்கு அதிபதி காரி; மாதத்திற்கு அதிபதி குரு; உத்தராயணம், தட்சணாயணம் என்று சொல்லக்கூடிய அயனங்களுக்கு அதிபதி சூரியன்; நிலவுக்கு அதிபதி புதன், பட்சத்திற்கு அதிபன் சுக்கிரன்; தினத்திற்கு அதிபதி செவ்வாய்; முகூர்த்தத்திற்கு அதிபதி சந்திரன்.

## அங்க நட்சத்திரம் அறியும்படி

*சிரசுநெற்றி விற்புருவம் கண்மூக்குக் காது*
*செய்யகன்னம் உதடுடனே உண்ணாக்கு மூலம்*
*விரவியமே வாய்கழுத்து புயமிதயம் இருகை*
*மிருவிருவி லாவயிறு நாபிசக னந்தான்*
*சுரதமுறு நிதம்பலிங்கம் குய்யமுடன் மயமாம்*
*தொடைமுழங்காற் குதிரைமுலைப் புறங்காலுள்*
*ளங்கால்*
*பரவுமிரு பத்தேழும் அச்சுவினி முதலாய்ப்*
*பார்த்தங்கத் தனிலறிதல் பான்மையுள்ளோர்*
*இயல்பே.(151)*

(இ-ள்.) தலை, நெற்றி, புருவம், கண், மூக்கு, காது, கன்னம், உதடு, உள்நாக்கு, மூலம்,மேவாய்,கழுத்து, புயம், இருக்கை, இருவிலா, வயிறு, நாபி, சகனம், நிதம்பம், லிங்கம்,குய்யம்,மயம்,தொடை, முழங்கால், குதிரை முலை, புறங்கால், உள்ளங்கால் ஆகிய நட்சத்திரங்கள் இருபத்து ஏழும் அசுவதி முதலாகிய நட்சத்திரங்களுக்கு உரியவை.

குறிப்பு: சகனம், குதிரை முலை ஆகியவற்றின் பொருள் விளங்கவில்லை.

## இதுவுமது

*உச்சமாம்த லைவலக்கண் காதுமுகம் கன்னம்*
*உய்குமே வாயிடது மேவாய்க்க பாலம்*
*மெச்சுகன்னம் காதிடக்கண் ணிடச்சிரமீ ராறும்*
*விளங்குசென்ம இலக்கனம்தொட்*
*டடைவினில்பார்ப் பதுவாம்*
*அச்சமிலா வலப்புறத்திற் கழுத்துபுய மங்கை*
*ஆனவிலா மார்புகுட்சி அன்றிடப்பு றத்தில்*
*இச்சையுறு வயிறகமவ் விலாக்கைபுயம் கழுத்து*
*இவையுதய இலக்கனம்தொட் டடைவினிற்பார்ப்*
*பதுவே. (152)*

(இ-ள்.) தலை, வலதுகண், காது, முகம், கன்னம், தலை, இடதுமேவாய், கபாலம், இடதுகன்னம், காது, இடக்கண், இடது தலை இப்பன்னிரு உறுப்புகளையும் சென்ம இலக்கனத்தில் ஒவ்வொரு பாவத்திலும் ஒவ்வொன்றாக பார்க்கவேண்டும். வலது புறத்தில் கழுத்து, புயம், உள்ளங்கை, மார்பு, குட்சி இடப்புறத்தில் வயிறு, விலா, கை, புயம், கழுத்து ஆகியவற்றை இலக்கனம் முதலாகக் கொண்டு பார்க்கவேண்டும்.

குறிப்பு: குட்சி என்பதன் பொருள்விளங்கவில்லை.

**அங்க நட்சத்திரத்தின் பலன்**

வலப்பக்கத் தடிவயிற்றில் உடலுலுந்தி லிங்கம்
வளர்தொடைகோ சம்பீசம் வலக்கணைக்காற் பாதம்
சொலத்தக்க இடப்புறத்திற் பாதமுடன் கணைக்காற்
தொடைபீசம் குயமிலிங்கம் வயிறுடனுந் தியுமே
நலத்துசுய இராசிமுதல் அடைவினிற்கண் டறிந்தே
நவக்கிரகம் இருந்தக்காலப் பலன்யா தென்னில்
விலக்கரிய கதிர்நின்ற தானத்திற் பார்த்தால்
இருநாற்கால் மிருகத்தால் விபத்துவரும் மின்னே. (153)

(இ-ள்.) வலதுபக்கத் தடிவயிற்றில் உந்தி எனப்படும் தொப்பூழ், இலிங்கம், தொடை, கோசம், பீசம், வலக்கணைக் கால், பாதம், இடப்புறத்திற் பாதம், கணைக்கால், தொடை, பீசம், குயம், லிங்கம், வயிறு, உந்தி. உதயராசி முதல் இவற்றைக் கண்டறிந்து நவக்கிரகம் இருந்த காலப்பயனைக் கண்டு பலன் சொல்லவேண்டும். இந்தத் தானத்தில் சூரியன் இருந்தால் நான்குகால் மிருகத்தால் விபத்து நேரும்.

**இதுவுமது**

மதிஇருந்த தானத்திற் சலமிருகம் தன்னால்
வக்கிரனின் றிடுமிடத்திற் கிரந்திவிரணத்திற்
புதியதோர் அக்கினிபாணத்தினாற் றுன்பம்
புதனிற்கிற் செங்கல்மண் ணாற்குருநிற் கில்கிலியால்

அதிககாற் றால்வெள்ளி நிற்கில்நீர்ச் சந்தால்
அரியசனி நின்றக்காற் காற்றால்கல் லெரியாற்
கெதியுடை இராகுநிற்கில் சர்ப்பவா தையினாற்
கேதுநிற்கில் விரணத்தால் கிரந்தியினாற் றுயரே. *(154)*

*(இ-ள்.)* சந்திரன் இத்தானத்தில் நின்றால், நீர், மிருகம் இவற்றால் துன்பம் உண்டாகும். செவ்வாய் இத்தானத்தில் நின்றால், புண், காயம், தீ, ஆயுதம் ஆகியவற்றால் துன்பம் உண்டாகும். புதன் இத்தானத்தில் நின்றால், செங்கல், மண் முதலானவற்றில் துன்பம் உண்டாகும். குரு இத்தானத்தில் நின்றால், நீரில் வாழும் உயிரினத்தால் துன்பம் உண்டாகும். சனி இத்தானத்தில் நின்றால், காற்றினாலும்,கல் எறியப்படுவ தாலும் மிகுந்த துன்பம் உண்டாகும். இராகு இத்தானத்தில் நின்றால், பாம்பினால் துன்பம் உண்டாகும். கேது இத்தானத்தில் நின்றால், புண்ணாலும் காயங்களாலும் துன்பம் உண்டாகும்.

**வாரதியாச்சியம்**

பன்னியஞா யிறின்முப்பத் திரண்டாகும் திங்களினாற்
பத்தி ரண்டாம்
உன்னியசெவ் வாய்சனிக்கு முப்பத்தொன் றாம்புதனுக்
கொன்றே யாகும்
இன்னிலமேற் குருவாரம் சுக்கிரவா ரம்தனக்கும்
இருபத் தொன்றாம்
நன்னியல்பா கியவாரத் தியாச்சியத்தின் கடிகைதனை
நயந்து பாரே. *(155)*

*(இ-ள்.)* ஞாயிற்றுக்கிழமை முப்பத்தி இரண்டு நாழிகைக்கு மேலும், திங்கட்கிழமை நாற்பத்து இரண்டு நாழிகைக்கு மேலும், செவ்வாய்கிழமை முப்பத்து ஒரு நாழிகைக்கு மேலும், புதன் கிழமை முதல் நாழிகைக்கு மேலும், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இருபத் தொன்றாம் நாழிகைக்கு மேலும் மூன்றே முக்கால் நாழிகை நீக்கப்பட வேண்டும்.

குறிப்பு: இப்பாடலில் சனிக்கிழமைக்கு வாராத்தி யாச்சியம் சொல்லப்படவில்லை.

## திதி தியாச்சியம் அறியும்படி

சொற்பிர தமைக்கிரு பத்துநான் காகும்
துதிகைக்குப் பன்னிரண் டாகும்
கற்புள திரிதி கைக்கன்பத் தைந்தாம்
கருதிய சதுர்த்தியைந் தாகும்
நற்பின் பஞ்சமி சஷ்டிக்குமன் பத்து
நான்குயர் சப்தமி தனக்கே
இற்புறு முப்பத் தொன்றட்ட மிக்கோர்
இருபதாம் நவமிக்கைந் தென்பார். *(156)*

(இ-ள்.) பிரதமைக்கு இருபத்து நான்கு நாழிகைக்கு மேலும், துதிகைக்குப் பன்னிரண்டு நாழிகைக்கு மேலும், திருதிகைக்கு ஐம்பத்தைந்து நாழிகைக்கு மேலும், சதுர்த்திக்கு, ஐந்து, பஞ்சமி; சஷ்டிக்கு ஐம்பத்து நான்கு நாழிகைக்கு மேலும், அஷ்டமிக்கு இருபது நாழிகைக்கு மேலும் நவமிக்கு ஐந்து மேலும், மூன்றே முக்கால் நாழிகை தியாச்சியம்.

குறிப்பு: விஷகடிகை ஆரம்பித்த நாழிகை முதல் மூன்றே முக்கால் நாழிகைவரை தியாச்சியமாம்.

## இதுவுமது

இகதச மிக்கேழு பத்துமூன் றாகும்
இயலேகா தசிக்கொன் றென்பார்
திகழ்துவா தசிக்கொரு பத்தைந் ததுவாம்
திரியோதசிக் கிருபத்தா றாகும்
பகர்சதுர்த்தசிக் கேழென்பர் நீடு
பவரணைக் கிருபத்தொன் பானாம்
நிகரமா வாசைக் காறென்பர் இவையே
நீடிய தியாச்சியம் நிகழ்த்தே . *(157)*

(இ-ள்.) தசமிக்கு முப்பத்து மூன்று நாழிகைக்கு மேலும். ஏகாதசிக்கு ஒரு நாழிகைக்கு மேலும், துவாதசிக்கு பதினைந்து நாழிகைக்கு மேலும் சதுர்தசிக்கு ஏழு நாழிகைக்கு மேலும் பௌர்ணமிக்கு இருபத்தொரு நாழிகைக்கு மேலும், அமாவாசைக்கு ஆறு நாழிகைக்கு மேலும், மூன்றே முக்கால் நாழிகை தியாச்சியமாகும். இவையே திதிகளுக்குத் தியாச்சியம்.

**நட்சத்திர தியாச்சியம் அறியும்படி**

பகருமசு பதிக்கு ஐம்பான் பரணி
பூராடம் இருபத்து நான்காம்
மிகவுரோ கணி நாற் பான்மிருக சீரிடம்
கேட்டை விசாகம் சோதி
புகழுமீ ரேழு மகம் கார்த்திகை ரேவதி
புனர்தம் பொருந்து முப்பான்
நிகழ்மூல மிருப தென்பரச் சிவினி
ஆதிரைக் கிருபத் தொன்றே. *(158)*

(இ-ள்.) அசுவதிக்கு ஐம்பது, பரணி, பூராடம் இரண்டிற்கும் நாற்பத்து நான்கு. உரோகணிக்கு நாற்பது. மிருகசீரிடம், கேட்டை, விசாகம், சுவாதி இவற்றிற்குப் பதிநான்கு, மகம், கார்த்திகை, ரேவதி, புனர்பூசம் ஆகிவற்றிற்கு முப்பது. மூலத்திற்கு இருபது. திருவாதிரைக்கு இருபத்தொன்று.

குறிப்பு: அந்தந்த தினங்களில் அந்தந்த தினதியாச்சி துருவம் முதல் மூன்றே முக்கால் நாழிகை வரை இருக்கும்.

உருவினில் உத்தி ரட்டாதிமூ வெட்டாம்
பூசம்உத் திராடம் பூரம்
பொருள்பெரு சித்திரை இருபதா யிலியம்
எண்ணான் கும்பூரட் டாதி

இருள்பதி னாறும் சதயமுத் திரமீ
ரொன்ப தாமனுட மோணம்
வருமவிட் டம்பத் தென்பர் தினதி
யாச்சியமென் னவகுக்க லாமே. (159)

(இ-ள்.) உத்திரட்டாதிக்குப் பதினெட்டு. பூசம், உத்திராடம், பூரம், சித்திரை ஆகியவற்றிற்கு இருபது. ஆயில்யத்திற்கு முப்பத்து இரண்டு. பூரட்டாதிக்குப் பதினாறு. சதயம், உத்திரம் ஆகியவற்றிற்குப் பதினெட்டு. திருவோணம், அவிட்டம் ஆகிவற்றிற்குப் பத்து என்று சொல்வார்கள்.

**இலக்கனத் தியாச்சியம்**

மேடமோ டிடபம் கன்னிவெஞ் சிலையும்
விடமரை முற்பங்கில் உண்ணும்
நாடிய மிதுனம் சிங்கங்கோல் கும்பம்
நடுகூறில் விடங்களுக் கூணாம்
ஆடிய மகரம் கடகந்தேள் மீனம்
அந்திய விடங்களுக் கூணாம்
கோடல வன்கோல் விடைகுட மான்மீன்
கொறிசல இராசியாய்க் கூறும். (160)

(இ-ள்.) மேடம், இடபம், கன்னி, தனுசு ஆகிய இலக்கனங்களுக்கு முதலில் அரை நாழிகையும், மிதுனம், சிங்கம், துலாம், கும்பம் ஆகிய இலக்கனங்களுக்கு நடுவில் அரை நாழிகையும், கடகம், விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய இலக்கனங்களுக்கு முடிவில் அரை நாழிகையும், விலக்கப்பட்ட நாழிகையாகும். கடகம், துலாம், இடபம், கும்பம், மகரம், மீனம், விருச்சிகம் ஆகிய ஏழு இராசிகளும் சல இராசியாகும்.

## இரவி வீதி அறியும்படி

*சூரியன் வீதி தன்னைத் தொடுத்திடிற் கடகம் சிங்கம்*
*வேரியாழ் இடபம் தானே மேடவீ தியுமாம் விற்றேள்*
*சீரிய மகரம் கும்பம் செப்பிய மிதுன வீதி*
*பாரிய மேடம் மீன்கோல் பகர்கன்னி இடப வீதி.* ★ *(161)*

(இ-ள்.) சூரிய வீதிகளில், கடகம், சிங்கம், மிதுனம், இடபம் ஆகியவை மேட வீதி. தனுசு, விருச்சிகம், மகரம், கும்பம் ஆகியவை மிதுன வீதி. மேடம், மீனம், துலாம், கன்னி ஆகியவை இடபவீதி.

## கவிப்பு அறியும்படி

*கவிப்பறிந் துரைக்கிற் சிங்கம் கடகமியா ழிடபந் தன்னைப்*
*புவிக்குள்மே டங்க விக்கும் ஆகுங்கோல் மீன்பெண் மேடம்*
*தவிப்பற உதிக்கில் ஓரை தான்கவித் திடும்கு டந்தான்*
*குவித்தமற் றேழு திக்கிற் கூறுமியாழ் கவிக்கும் தானே.* ★ *(163)*

(இ-ள்.) சிம்மம், கடகம், மிதுனம், இடபம் ஆகிய இராசிகளை மேடம் கவிக்கும். துலாம், மீனம், கன்னி, மேடம் ஆகிய இராசிகள் உதித்தால் கும்பம் கவிக்கும். மற்ற ஏழும் உதிக்கில் யாழ் கவிக்கும்.

குறிப்பு: கவிப்பு என்பது ஆரூடத்திற்கு சூரியன் நிற்கும் நிலையாகும்.

## கிரகலப்தை அல்லது கிரக உதைப்பு

*பருதி இருந்த நாட்குப்பன் னிரண்டாம் நாளே இரவிலப்தை*
*தருசேய் இருந்த நாட்கெண்ணிற் தான்மூன் றாம்நாட் சேய்லப்தை*
*அருள்பொன் இருந்த நாள்தனக்கே ஆறாம் நாளே குருலப்தை*
*இருள்தீர் சனியன் உறுநாளுக் கெட்டாம் நாளே*
*சனிலப்தை.* *(163)*

(இ-ள்.) சூரியன் இருந்த நாளுக்குப் பன்னிரண்டாம் நாள் இரவிலப்தை. செவ்வாய் இருந்த நாளுக்கு மூன்றாம் நாள் சேய்லப்தை. குரு இருந்த நாளுக்க ஆறாவது நாள் குருலப்தை. சனி இருந்த நாளுக்கு எட்டவாது நாள் சனிலப்தை.

**இதுவுமது**

இந்து இருந்த நாட்கிருபத் திரண்டாம் நாளே மதிலப்தை
தந்த புகர்நின் றிடுநாட்குத் தானைந் தாநாள் வெள்ளிலப்தை
புந்தி இருந்த நாளுக்குப் புகழே ழாநாட் புதனிலப்தை
உந்து இராகு இருந்திடுநாட் கொன்பான் நாளே
இராகுலப்தை. *(164)*

(இ-ள்.) சந்திரன் இருந்த நாளுக்கு இருபத்து இரண்டாம் நாள் மதிலப்தை. சுக்கிரன் இருந்த நாளுக்கு ஐந்தாம் நாள் வெள்ளிலப்தை. புதன் இருந்த நாளுக்கு ஏழாம் நாள் புதன்லப்தை. இராகு இருந்த நாளுக்கு ஒன்பதாம் நாள் இராகுலப்தை.

**இதுவுமது**

கேது இருந்த நாட்டுப்பின் கிளரொன் பான்நாட் கேதிலப்தை
ஏது கதிர்சேய் குருசனியன் ஒருகுல வருக்க வலமென்ன
ஏது வான மதிபுந்தி இராகு கேது வெள்ளிக்கும்
கோது றாமல் இடமாகக் குறித்துப் பார்ப்பர் லத்தையிதே. *(165)*

(இ-ள்.) கேது இருந்த நாளுக்கு ஒன்பதாம் நாள் கேதுலப்தை. சூரியன், செவ்வாய், குரு, சனி ஆகியவை ஒரே வர்க்கமானவை. இவற்றை வலமென்று குறிப்பர். சந்திரன், புந்தி, இராகு, கேது, சுக்கிரன் ஆகியவை ஒரே வர்க்கமானவை. இவற்றை இடமென்று குறிப்பர்.

**இதுவுமது**

இரவி லப்தை மதியிலப்தை இனிய தனம்நா சம்பயமாம்
பரவு செவ்வாய் சனிகேது பன்னும் இராசி லப்தைதன்னில்

விரவு மரண பயமென்பார் வேந்தன் வப்தை தனக்கேடாம்
நிரவு வெள்ளி லப்தையினால் நிகழ்கா ரியங்கள்
வளமின்னே. (166)

(இ-ள்.) இரவிலப்தை, மதி இலப்தையில் செல்வம் அழியும் பயம் உண்டாகும். செவ்வாய் லப்தை, சனிலப்தை, கேது லப்தை ஆகியவற்றில் மரணபயம் உண்டாகும். சூரியனின் இலப்தையில் செல்வ அழிவு உண்டாகும். சுக்கிரனின் வெள்ளியின் இலப்தைகளில் நடக்கின்ற காரியங்கள் அனைத்தும் நலமாகும்.

**இதுவுமது**

மிக்கமதி லப்தைதனிற் இரவிலப்தை கூடில்
வியாதியா யுதபயமாம் குசலப்தை தன்னிற்
றக்கரவி லப்தைவந்து கூடிற்றன நாசம்
சார்ந்தமனை தீப்படும்நற் புந்திலப்தை தன்னில்
முக்கியமாம் கதிரிலப்தை யுறில்புத்திக் கேடாம்
முனிவில்குரு லப்தையினிற் பானுலப்தை கூடிற்
சுக்கிஷமா கியவாத ரோகமே காட்டும்
கதிர்வெள்ளி லப்தையொன்றா யுறிற்செல்வம்
கெடுமே. (167)

(இ-ள்.) சந்திரனின் இலப்தையில் சூரியனின் இலப்தை கூடி இருந்தால் நோயுடன் ஆயுதங்களால் அச்சமும் உண்டாகும். செவ்வாயின் இலப்தையுடன் சூரியனின் இலப்தை கூடி இருந்தால் செல்வம் அழியும், வீடு தீயினால் அழியும். புதன் இலப்தையில், சூரியனின் இலப்தை கூடி இருந்தால் கெடுபுத்தி உண்டாகும். குரு இலப்தையில், சூரிய இலப்தை கூடி இருந்தால் வாதரோகம் உண்டாகும். சுக்கிரனின் வெள்ளி இலப்தையில் சூரிய இலப்தை கூடி ஒன்றாக இருப்பின், செல்வம் அழியும்.

## இதுவுமது

ஈட்டிய சனியின் லப்தையிற் கதிரோன்
 னிலப்தைகூ டிடிற்பிதுர் கண்டம்
நாட்டிய பதங்கன் சேய்சனி மூவர்
 நண்ணிய லப்தையும் கூடிற்
கூட்டிய குட்ட ரோகமாம் மதியிற்
 குருவுட லப்தையொன் றாக
வாட்டிய இருமல் மிகச்சய ரோகம்
 வந்திடும் என்றனர் மறையோர். *(168)*

*(இ-ள்.)* சனியின் இலப்தையுடன் சூரியனின் இலப்தை சேர்ந்தால் தந்தைக்குக் கண்டம். சூரியன், செவ்வாய், சனி ஆகிய மூவரின் இலப்தையும் ஒன்று கூடில் குட்ட ரோகம் உண்டாகும். சந்திரனின் இலப்தையும் குருவின் இலப்தையும் ஒன்றாக, இருமல், சயரோகம் முதலான நோய்கள் வந்திடும் என்று மறையோர்கள் கூறியுள்ளார்கள்.

கிரக லத்தை முற்றிற்று.

## உபக்கிரக வேதை

தருமிரவி இருந்தநாட் கஞ்சினபி சித்துமுத்
 தாபம்உட் டினமேழிற் பூகம்பம் நடுக்கம்
பருகுமெட் டிற்சூலத் தாலிரத்தப் பிரவாகம்
 பத்தில்சனி யால்வாழ்வு நாசம்பதி னாலிற்
றிருகியதிற் காரகனாற் சுரமாகும் பின்னும்
 சினிற்றண்டாற் சத்துருவி ருத்திபதி னெட்டிற்
பெருகேதால் அவமிருத்தாம் பத்தொன்பான் உரகன்
 பொருந்தின்மகா பயமென்னப் புகன்றனர்விண்
 ணவரே. *(169)*

*(இ-ள்.)* இரவி இருந்த நாளுக்கு ஐந்தில், அபிசித்து நட்சத்திரம் இருப்பின் உட்டினமாகும். ஏழில் இருந்தால், பூகம்பம், நடுக்கம் ஆகியவை உண்டாகும். எட்டில்

இருந்தால், சூலத்தால் இரத்தப்பெருக்கு ஏற்படும். பத்தில் நின்ற சனியால் வாழ்விற்கு அழிவு ஏற்படும். பதினாலில் நின்றால், சுரம் உண்டாகும். பகைவர்கள் பெருகுவர். பதினெட்டில் நின்றால், கண்டமாகும். பத்தொன்பதில் நின்றால், பாம்பினால் பயம் உண்டாகும் என்று தேவர்கள் கூறியுள்ளனர்.

காணிரு பத்தி ரண்டிற்
கம்பத்தாற் சீத வாதை
வாணிரு பத்து மூன்றில்
வச்சிரன் கலைகள் போகும்
தோணிறு பத்து நாலிற்
சொல்லுஞ்ச நி பாதன் தன்னாற்
பாணிடர் தருமை ஐந்திற்
பரிவேடம் எனலால் வாதை. (170)

(இ-ள்.) இருபத்தி இரண்டில் கம்பத்தால் குளிர்ச்சியால் துன்பம் உண்டாகும். இருபத்து மூன்றில் வச்சிரனால் கலைகள் போகும். இருபத்து நான்கில் சநிபாதன் இருந்தாலும் இருபத்தைந்தில் பரிவேடம் இருந்தாலும் துன்பம் உண்டாகும்.

### திரேகாண இலக்கனம், பாவ இலக்கனம் இவற்றை அறியும்படி

உரியதிரே காணவிலக் கனந்தன்னை உரைக்கில்
ஒருஇராசி மூன்றுதிரே காணமென வைத்தே
தெரியுறையும் சாத்திரத்தோ டுபயமொன்றைந் தொன்பால்
திருந்தொன்பான் ஒன்றைந்தோ உத்தொன்ப தொன்றும்
அரியதிரே காணலக் கனமாவ தாகும்
அருட்பாவ இலக்கனமே உதயநா ழிகையை
புரியுமைந்திற் கழித்ததனை மேடமுதல் எண்ணி
பொற்பான பாவவிலக் கனமாகப் புகல்வார். (171)

(இ-ள்.) ஒரு இராசியை மூன்று திரேகாணமென வைத்து, சரம், திரம், உபயம் ஆகியவை ஒன்று, ஐந்து, ஒன்பதாக அமையும். இது **திரேகாண இலக்கனமாகும்**. உதய நாழிகையில் ஐந்தில் கழித்து மேடமுதல் எண்ணி வருவதை **பாவ இலக்கனமாகச்** சொல்லுவார்கள்.

## துவாதாங்கிச பலன்

### மேட துவாதாங்கிச பலன்

*சந்திரந் மேடத் துவாதசாங் கிசத்தைச்*
*சார்ந்திடப் பிறந்தவன் தானே*
*வந்தவி மிசைகள் செய்குவன் சோரன்*
*மதியிலான் பைத்திய தேகம்*
*பந்தமாங் காமி வெண்குட்ட ரோகி*
*பன்னிரண் டிருபத்தைந் தம்பான்*
*சொந்தமாம் அறுபத் தைந்தினி அரிட்டம்*
*சுபமுறிற் தொண்ணூறான் டிருப்பன்.* ★*(172)*

(இ-ள்.) மேடத் துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், பிறரை இம்சைகள் செய்வான்; திருடனாக இருப்பான்; அறிவற்றவன்; பைத்தியம்; காமத்தை உடையவன்; வெண்குட்டத்தை உடையவன்; பன்னிரண்டு வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் வரும்.சந்திரன் சுபவர்க்கம் பெற்று இருந்தால் தொண்ணூறு ஆண்டுகள் வரை இவன் உயிர்வாழ்வான்.

### இடப துவாதாங்கிச பலன்

*மன்னிய இடபத் துவாதாங் கிசத்தின்*
*மதியுறப் பிறந்தவன் போகி*
*உன்னிய முகம்வாய் வயிறுமே பெரிதாம்*
*உயர்பலன் துர்ச்சனன் விசாரன்*
*மென்னடை உடையன் சஞ்சலப் புத்தி*
*வெகுதிரி உடையவன் வயது*
*மின்னல்பத் திருபத்தி ரண்டுடன் முப்பத்*
*திரண்டேழு பத்துமூன் றரிட்டம்.* *(173)*

*(இ-ள்.)* இடபத் துவாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், சுகபோகத்தை அனுபவிப்பான்; முகம், வாய், வயிறு ஆகியவை பெரிதாக இருக்கும். உயர்ந்த பலன்களை உடையவன்; தீயவன்; கவலையையும் மென்மையான நடையையும் உடையவன்; மனதில் குழப்பம் உடையவன்; அதிகமான பெண்களுடன் உறவு கொண்டிருப்பன். இவனுடைய பத்தாம் வயதில், இருபத்து இரண்டாம் வயதில், முப்பத்து இரண்டாம் வயதில், எழுபத்து மூன்றாம் வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் வரும்.

### மிதுன துவாதாங்கிச பலன்

அம்புலி மிதுனதுவாதசாங் கிசத்தில்
அமைந்துறப் பிறந்தவன் அழகன்
நம்புசாத் திரிகன் போகிவா சவனும்
நவிற்றுரா சையன்திரி வசந்தன்
இம்பரில் வயதெண் ணிரண்டிரு பத்து
நான்கிலும் இடம்பிடா வதிகச்
சொம்மின்முப் பத்து நான்குநாற் பத்திலும்
சொல்லாறு பத்துமூன் றரிட்டம். ★ *(174)*

*(இ-ள்.)* மிதுன துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், அழகனாக இருப்பான்; சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவன்; சுக போகங்களை அனுபவிப்பவன். பெண்களிடம் மனதை பறிகொடுப்பவன். பதினாறு வயதிலும், இருபத்து நான்காம் வயதிலும், முப்பத்து நான்கு வயதிலும், நாற்பது வயதிலும், அறுபத்து மூன்று வயதிலும் இவனுக்கு மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் வரும்.

### கடக துவாதசாங்கிச பலன்

திங்கணற் கடகத் துவாதசாங் கிசத்திற்
சேர்ந்திடப் பிறந்தவன் தனவான்
பங்கமாம் குடிலப் பார்வையன் கேளான்
பந்துவிட் பிரியன்சொற் கேளான்

இங்கில விரண்டெட் டீரொன்பான் இருபத்
திரண்டெழு பத்திரண் டொன்பான்
துங்கமாம் வயதில் அரிட்டமுண் டிதற்கே
சுபவர்க்கம் உற்றிடிற் சுபமே. ★ (175)

*(இ-ள்.)* கடக துவாதசாங்கிசத்தில் சந்திரந் இருக்கப் பிறந்த சாதகன், செல்வனாக இருப்பான்; பார்வை குறைபாடு உடையவன்; உறவினர்களிடம் மிகவும் அன்புகொண்டு வாழ்பவன்; பிறர் சொல்லைக் கேட்காதவன்; இரண்டாவது வயதிலும், எட்டாவது வயதிலும், ஒன்பதாவது வயதிலும், இருபத்து இரண்டு வயதிலும், எழுபத்திரண்டு வயதிலும், தொண்ணூறு வயதிலும், மரணத்திற்கு ஒப்பான கண்டங்கள் வரும். சந்திரன் சுபவர்க்கமுற்று இருக்க நன்மையடைவான்.

**சிம்ம துவாதசாங்கிச பலன்**

நிலவுதான் சிங்கத் துவாதசாங் கிசத்தில்
நின்றிடப் பிறந்தவன் மன்னன்
கிலமிலே காந்தத் தலந்தனில் வாசன்
கிரகித்த வயிற்றபி மானி
உலகுசம் மதவான் துர்ப்பலம் பொய்யன்
ஓரிரு பத்திரண்ட டுடன்தான்
அலகினில் இருபத் தாறுமுப் பதிலே
அறுபதில் அரிட்டமுண் டெனுமே. ★ (176)

*(இ-ள்.)* சிம்ம துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், மன்னனாக விளங்கக் கூடியவன். தனிமையான இடத்தில் வாழ்பவன்; நல்ல வயிற்றை உடையவன்; அபிமானி; உலகோடு ஒட்ட வாழ்பவன்; தீய பலத்தைக் கொண்டவன். பொய் சொல்லக் கூடியவன்; இவனுடைய இருபத்து ஆறு வயதிலும், முப்பது வயதிலும், அறுபது வயதிலும் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களைச் சந்திப்பான்.

### கன்னி துவாதசாங்கிச பலன்

அல்லவன் கன்னி துவாதசாங் கிசத்தில்
அமைந்துறப் பிறந்தவன் விதேசன்
நல்லபெண் பிள்ளை அதிகமாய்ப் பெறுவன்
நவிலுநற் காரியப் பிரியன்
வல்லவன் சகல கலையறி நிபுணன்
வயதொடு முப்பதைம் பதினும்
சொல்லறு பதிலே அரிட்டமுண் டிதற்கே
சுபவர்க்கம் உண்டெனிற் சுபமே. ★ (177)

(இ-ள்.) கன்னி துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன் அயல்நாடு செல்பவன். நல்ல பெண் பிள்ளைகளை அதிகமாகப் பெறுவான்; நல்ல காரியங்களைச் செய்வதில் விருப்பம் உடையவன். சகல கலைகளிலும் வல்லமை உடையவனாக விளங்குவான். இவனுடைய முப்பதாம் வயதிலும், அறுபதாம் வயதிலும் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை அடைவான். சந்திரன் சுபவர்க்கம் பெற, நன்மையடைவான்.

### துலா துவாதசாங்கிச பலன்

வருமதி கோலிற் றுவாதசாங் கிசத்தின்
மலிவுறப் பிறந்தவன் கோபி
தருமபுத் தியிலான் கிரகித்த தேகன்
சஞ்சலன் பந்துத்து வேசன்
இருமலாம் சிலேற்ப ரோகிதன் வயதில்
இரண்டுமூன் றிருபது மூன்றில்
ஒருபத் தாறில் எழுபத்தா றினிலே
உற்றிடும் அரிட்டமென் பதுவே. ★ (178)

(இ-ள்.) துலா துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், கோபத்தை உடையவன்; தர்ம சிந்தனை இல்லாதவன். நல்ல தேகத்தை உடையவன்; மனக்குழப்பம் அடைபவன்; உறவினர்களை பகைப்பவன்; இருமல், சிலேற்பனம் முதலான நோய்களைக் கொண்டவன். தன்னுடைய இரண்டாம் வயதில், மூன்றாம் வயதில்,

இருபத்து மூன்று வயதில், அறுபது வயதில், எழுபத்து ஆறு வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை இவன் அடைவான்.

### விருச்சிக துவாதசாங்கிச பலன்

தனமதி தேளிற் றுவாதசாங் கிசத்தைச்
சார்ந்திடப் பிறந்தவன் குருவும்
இனசன மில்லான் இமிசையே செய்வன்
எழில்தொந்தி வயிற்றினன் பாவி
சனசவுக் கியமில் லாதவன் கோபி
காரிய விக்கினனி ரண்டோன்
அனையமூ வேழொ டிருபத்து மூன்றில்
ஐம்பத் தைந்தெழுபதி லரிட்டம். ★ (179)

(இ-ள்.) விருச்சிக துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன்; குருவிடமும், தன்இன மக்களிடமும் உறவாக இல்லாதவன்; பிறரை இம்சை செய்பவன். தொந்தி வயிற்றைக் கொண்டவன்; பாவகாரியங்களைச் செய்பவன்; சுகங்கள் இல்லாதவன்; கோபப்படுபவன்; காரியங்களை முழுமையாகச் செய்யாதவன். இவனுடைய, இரண்டாம் வயதில், இருபத்து ஏழாம் வயதில், இருபத்து மூன்று வயதில், ஐம்பத்து ஐந்து வயதில், எழுபது வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை அடைவான்.

### தனு துவாதசாங்கிச பலன்

தனுவினிற் றுவாத சாங்கிசம் பிறையைச்
சார்ந்திடச் செனித்தவன் குணவான்
நினைவுள சோம்பல் அற்பசந் தோடன்
நீடிய கழுத்திளைத் தவனாம்
கனதனம் படைப்போன் பருத்திடு மூக்குக்
கட்டுரை மூன்றொரு நான்கில்
நனவிலெட் டொன்பான் பனிரண்டு நான்கு
நாற்பதில் வந்திடும் அரிட்டம். ★ (180)

(இ-ள்.) தனுத் துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், நல்ல குணங்களைக் கொண்டவன். சோம்பல் உடையவன். குறைந்த மகிழ்ச்சியைக் கொண்டவன்; கழுத்து மெலிந்தவனாக விளங்குபவன். செல்வத்தைச் சம்பாதித்தவன்; பருத்த மூக்கினைக் கொண்டவன். இவனுடைய மூன்றாம் வயதில், நான்காம் வயதில், எட்டாம் வயதில், ஒன்பதாம் வயதில், பதினாறாம் வயதில், நாற்பதாவது வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை அடைவான்.

**மகர துவாதசாங்கிச பலன்**

மதிமகரத் துவாதசாங் கிசத்திருக்கப் பிறந்தோன்
மருவலர்தம் பகையுடையன் நினைத்தபடி முடிப்பன்
அதிகபல மில்லாதான் இமிசைகளோ செய்வன்
அரூபமாந் திரியுடையன் வயதிரண்டு மூன்றே
இதமுறுபத் தொன்பதிரு பத்தேழு நாற்பத்
தேழுடனே ஒருநாற்பத் தொன்பதைம்பத் தொன்றிற்
சிதைவிலா மூன்றிலே அரிட்டமென வேதான்
செப்புமிது சுபவர்க்கம் சேரின்மிகச் சுபமே. ★ (181)

(இ-ள்.) மகர துவாதசாங்கிசத்தில் சந்திரன் இருக்கப் பிறந்த சாதகன், பகைவரின் பகையை உடையவன்; தான் நினைத்ததை நினைத்தபடி முடிப்பான். அதிக பலம் இல்லாதவன்; பிறரை இம்சை செய்பவன்; அழகற்ற பெண்ணை உடையவன்; இவனுடைய இரண்டாம் வயதில், மூன்றாம் வயதில், பத்தொன்பதாம் வயதில், இருபத்து ஏழாம் வயதில், நாற்பத்து ஏழாம் வயதில், நாற்பத்து ஒன்பதாம் வயதில், ஐம்பத்தோராம் வயதில், ஐம்பத்து மூன்றாம் வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை அடைபவனாக விளங்குவான்.

### கும்ப துவாதசாங்கிச பலன்

*பிறைகும்பத் துவாதசாங் கிசத்திருக்கப் பிறந்தோன்*
*பிணன்சற்றும் தயவிலான் மாபாவி கோளன்*
*நிறைபலஇல் லான்நெடியவன் சஞ்சலன்சஞ் சாரி*
*நிறைந்தசெல் வந்தனைக்கொடுப் பன்வயதுபதி நான்கில்*
*அறையுமூ வேழிருபத் தெட்டுடன்முப் பானான்கோ*
*டருநாற்பத் தேழுடனே ஐம்பத்தொன் பானில்*
*வறுமறுபத் தொன்றினிலே அரிட்டமிந்தக் கும்ப*
*முற்றசுப வர்க்கமுறில் உள்ளமட்டும் சுபமே.* ★ *(182)*

(இ-ள்.) வளர்பிறைச் சந்திரன், கும்ப துவாதசாங்கிசத்தில் இருக்கப் பிறந்தவன், கருணை இல்லாதவன்; பாவங்களைச் செய்பவன்; கோள் சொல்பவன்; குறைகள் உடையவன்; உயரமானவன். மனதில் கவலை நிறைந்தவன்; அலைபவன்; பதிநான்கு, இருபத்தொன்று, இருபத்தெட்டு, முப்பது, நாற்பத்து ஏழு, ஐம்பத்தொன்று, அறுபத்தொன்று ஆகிய வயதுகளில் மரணத்திற்கொப்பான கண்டம் நேரிடும். கும்பம் சுபவர்க்கமுற்றால் அனைத்தும் நன்மையாகும்.

### மீன துவாதசாங்கிச பலன்

*சசிமீனத் துவாதசாங் கிசத்திருக்கப் பிறந்தோன்*
*சம்பத்தன் தீர்க்காயுள் தக்கதிரி லோலன்*
*இசையுங்கிர கித்தவுடல் பராக்கிரக வாசன்*
*ஏராளத் திரிபோகி சலத்தில்சந்து வாலே*
*வசையன்றி யேபிழைப்பன் வயதிருப் தொன்றின்*
*மன்னுமிரு பத்திமூன் றிருபத்தெட் டினிலும்*
*அசைவிலன்முப் பத்தாறு நாற்பத்து நான்கோ*
*டைம்பத்தொன் றறுபத்தொன் றாகுநாள் அரிட்டம்.* ★ *(183)*

*(இ-ள்.)* சந்திரன், மீன துவாதசாங்கிசத்தில் இருக்கப் பிறந்தவன், பொருள் செல்வம் உடையவன்; தீர்க்காயுள் பெற்றவன்; பெண்கள்மோகம் கொண்டவன்; உடல் வலிமை மிக்கவன்; தைரியசாலி; அதிக பெண்களிடத்தில் இன்பம் காண்பான்; நீரில் வாழும் உயிரியினால் துன்பமடைந்து உயிர்மீளுவான்; இருபத்தொரு வயதில், இருபத்து மூன்று வயதில், இருபத்தெட்டு வயதில், முப்பத்தாறு வயதில், நாற்பத்து நான்கு வயதில், ஐம்பது வயதில், அறுபத்து ஒரு வயதில் இச்சாதகனுக்குக் கண்டம் ஏற்படும்.

குறிப்பு: சந்து - ஜந்து.

சந்திர துவாதசாங்கிச பலன் முற்றிற்று.

## பிணித்தொகுப்பு

வெருவுறு சிங்கம் கன்னிகோல் சால்மீன்
விருட்சிகம் இரவியின் கூறாம்
மருண்மறி விடையாழ் கடகமான் சிலைஇவ்
வாறுநற் சந்திரன் கூறாம்
ஒருபதோங் குதயத் தாறுமே மதிகூ
றுகந்திடில் உயிருண்டாம் என்பர்
பருதிகூ றாகிற் சாவுவெண் மதிக்குப்
பகர்தருங் கூறெனில் நோயே. ★ *(184)*

*(இ-ள்.)* சிம்ம இராசி, கன்னி இராசி, துலாம் இராசி, கும்ப இராசி, மீன இராசி, விருச்சிக இராசி ஆகிய ஆறு இராசிகளும், இரவி கூறு உடையவை. மேட இராசி, இடப இராசி, மிதுன இராசி, கடக இராசி, மகர இராசி, தனுசு இராசி ஆகிய ஆறு இராசிகளும் மதி கூறு உடையவை. இலக்கனம் மதி கூறாக இருந்தால் உயிருண்டு என்பர். சூரியன் கூறாக இருந்தால் மரணம் என்பர். பூரணச் சந்திரன் கூறாக இருப்பின் நோய் என்று கூறுவார்கள்.

**இதுவுமது**

அதிபதி யுடைய குணாகுணம் பலன்கள்
அவத்தையின் சூத்திரம் கூறிற்
துதிபெறும் உதயம் பத்தினுக் குடையோர்
தூய்மதிக் கூறினைச் சாரிற்
சதிருடன் உயிருண் டாகும்செங் கதிரோன்
தனதுகூ றெய்திடிற் சாவாம்
மதியுடன் கூறும் பருதியின் கூறும்
வந்திடின் வருந்தும்வெந் நோயே.★ (185)

(இ-ள்.) சென்ம இலக்கனம், பத்தாம் இடத்திற்கு அதிபதி ஆகியோர் மதி கூறாக இருப்பின் உயிர் உண்டாகும். சூரியன் கூறாக இருப்பின் மரணமாகும். மதிகூறும், இரவி கூறாகிய சூரியன் கூறும் ஒன்று சேர்ந்து வந்தால், கொடுமையான நோய்களால் துன்பம் ஏற்படும்.

அறையு மாரூட உதயமுஞ் சரமே
யாமெனில் உயிருண்டா மதுதான்
உறைசரந் திரமே ஆயிடில் நோயாம்
உபயமும் சரமுமேற் சாவாம்
நிறைதிரம் உபயம் சீவனுண் டாகும்
நிகர்திரம் சரமெனில் நோயாம்
மறைவிலா ரூட உதயமுந் திரமே
வந்திடில் இறப்பது திண்ணம். (186)

(இ-ள்.) ஆரூட இலக்கனம் சரமாக இருந்தால் உயிருண்டாம். சரம், திரம் இருப்பின் நோயுண்டாகும். உபயமும்,சரமும் இருப்பின் மரணம் நேரும், திரம், உபயம் இருப்பின் உயிர் உண்டாகும். திரம், சரமாக இருப்பின் நோயுண்டாகும். ஆருட இலக்கனமும் திரமாக இருப்பின் இறப்பது உறுதியாகும்.

தீட்டிய வுபயம் உதிக்கஆ ரூடத்
திரமெனில் உய்வது திண்ணம்
ஊட்டிடும் உதயம் நிற்கும்ஆ ரூடம்
இரண்டுமே உபயமேல் நோயே
ஊட்டிய உபயம் சரமுமே யாகில்
உடலைவிட் டுயிரகன் றேகும்
கூட்டிய உபயம் உடலுமா ரூடக்
குலவுயிர் உதயம தாமே.★ (187)

*(இ-ள்.)* உபய இராசியில் பிறக்க, ஆரூடம் திரம் என்றால் நன்மைப் பெறுவது உறுதியாகும். இலக்கனம், ஆரூடம் இரண்டுமே உபயமாக இருப்பின் நோய் உண்டாகும். உபயம், சரமாக இருக்கில், மரணம் ஏற்படும் உபயம் உடல், ஆரூட இலக்கனம் உயிராகும்.

**இதுவுமது**

இலக்கனா திபனும் எட்டினுக் கிறையும்
இசைந்தொரு இராசியிற் கூடிற்
துலங்குநட் பாட்சி உச்சமே வாய்க்கிற்
றுயருறு நோயெலாம் தீரும்
கலக்கமும் தீரும் ஆயுள்வர்த் திக்கும்
காட்சியாம் செல்வம்வர்த் திக்கும்
இலங்குமா றெட்டிற் சுபக்கிர கங்கள்
மேவிடிற் றிருவுண்டாம் என்பார்.★ (188)

*(இ-ள்.)* சென்ம இலக்கனாதிபதியும் எட்டாமிடத்திற்கு அதிபதியும் ஒரு இராசியில் சேர்ந்திருந்து நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று விளங்கினால் இச்சாதகனுக்கு நோயெல்லாம் தீரும். மனக்கலக்கம் நீங்கும். ஆயுள் அதிகமாகும். செல்வம் பெருகும். இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாம் இடத்தில் சுபக்கோள்கள் இருந்தால் செல்வம் உண்டாகும் என்று கூறுவார்கள்.

### இதுவுமது

*குருசனி சோமன் வெய்யவன் இவர்கள்*
*கூறிய உதயத்திற் நிற்க*
*இருக்கும்லக் கனத்தோன் நான்கெட்டின் வியத்தில்*
*இருந்திடப் பாவிய ரானோர்*
*திருக்குறும் எட்டில உதயத்திற் நிற்கிற்*
*தென்புலத் தாரொடும் சேர்வர்*
*உருக்குநோய் தீரா தென்றனர் கணித*
*நூன்முழ துணர்ந்தநா வலரே.★ (189)*

*(இ-ள்.)* குரு, சனி, சந்திரன், சூரியன் இவர்கள் சென்ம இலக்கனத்தில் நிற்க, இலக்கனாதிபதி நான்காமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகியவற்றில் ஒன்றில் இருந்திட, பாவக்கோள்கள் எட்டாமிடத்தில், இலக்கனத்தில் நிற்க, இச்சாதகன் தென்புலத்தாரோடு சேர்வன். இவனுக்கு உடலை உருக்கும் நோய் வந்து தீராது என்று சோதிட நூல்களைக் கற்றுணர்ந்த வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

### இதுவுமது

*ஆகிய உதய நாதனை எட்டுக்*
*கதிபனை யாறெட்டீ ராறை*
*வாகினி யான குருபுதன் வெள்ளி*
*மதியிவர் மகிழ்ச்சியாய்ப் பார்க்கில்*
*ஏகிடு நோய்கள் துன்பமே தீரும்*
*எண்ணிய கருமமும் நன்றாம்*
*பாகினிற் கலந்த அமுதென ருசிக்கும்*
*பண்ணமர் பனிமொழி குயிலே !★ (190)*

*(இ-ள்.)* சர்க்கரைப் பாகுடன் கலந்த அமுதத்தைப் போன்று இனிமை பயக்கக்கூடிய இசையோடு கூடிய இனிமையைக் கொண்ட குயில்போன்ற குரலைக் கொண்ட பெண்ணே ! சென்ம இலக்கனாதிபதியையும் எட்டா மிடத்திற்கு அதிபதியையும் ஆறாமிடம், எட்டாமிடம்,

பன்னிரண்டாமிடம் ஆகிய இடங்களைக் குரு, புதன், சுக்கிரன், சந்திரன் போன்றோர் நோக்க, இச்சாதகனுக்கு வரும் நோய்கள் தீரும். துன்பம் விலகும். எண்ணியகாரியங்கள் இனிதே நிறைவேறும்.

**இதுவுமது**

கனங்கா கக்கோ ளாயுறு சனியன்
கருமத்தை வேறுகூ றாக்கும்
வனங்கா கக்கோ ளாயெழில் செவ்வாய்
மறைநெறி வழாமலே நடத்தும்
தனங்கா கக்கோ ளாகிய வியாழம்
சாற்றிய வித்தைகட் கெல்லாம்
செனங்கா கக்கோ ளாம்புதன் வேதம்
செப்பிய தென்றனர் தெளிவோர். ★ *(191)*

(இ-ள்.) சனி, கருமத்தை வேறு செயலாக மாற்றும். செவ்வாய், மறைநெறியிலிருந்து மாறாமல் நடத்திச் செல்லும். வியாழன், வித்தைகளையெல்லாம் சிறக்கச் செய்யும். புதன், வேதத்தைச் சொல்லும்படி செய்யும் என்று சோதிடத்தைக் கற்றறிந்த வல்லநர்கள் கூறியுள்ளார்கள்.

**இதுவுமது**

பேருள சனியும் கருமநா யகனும்
பலத்திடிற் கருமத லாகும்
ஆறினுக் கிறையும் சேயுமே பலக்கின்
வறுமைநோய் வண்மையே செய்யும்
மீறிய வாகைத் தானத்தோன் சேய்க்கு
மிகவலி யுடையனே யாகிற்
சீறிய நோயால் வாதையே உண்டாம்
தீட்டிய திலதவா ணுதலே. ★ *(192)*

(இ-ள்.) சனியும் பத்தாமிடத்திற்கு அதிபதியும் வலிமை பெற்று விளங்கில், கருமதலாகும். ஆறாமிடத்திற்கு அதிபதியும் செவ்வாயும் வலிமை பெற்று இருப்பின் வறுமை

நோய் துயரம் செய்யும். ஆறாமிடத்திற்கதிபதி செவ்வாயைக் காட்டிலும் வலிமையுடையவனாக விளங்கினால், உடல் துயரம் உண்டாகும் என்பதைத் திலகம் தீட்டிய ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்ணே! அறிவாயாக.

குறிப்பு: கருமதல் என்பதன் பொருள் விளங்கவில்லை.

**இதுவுமது**

*அலவனே ஆறின் வியத்தினில் நிற்கில்*
*அடர்பில்லி சூனிய வாதம்*
*பலனுறும் உதயம் தன்னிலே நிற்கில்*
*பாண்டுநோய் அசீரணம் பிளவை*
*உலவிய அலவன்போய்ப் பாவியைக் கூடி*
*ஒன்றெட்டில் உயர்திரி கோணத்*
*தலமுறில் கண்ணோய் மிகுசய ரோகம்*
*தன்னினால் இறப்பது சரியே.* ★ (193)

(இ-ள்.) சந்திரன், சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடம், பன்னிரண்டாம் இடத்தில் இருக்க, பில்லி சூனிய வாதத்தால் நோய் உண்டாகும். சென்ம இலக்கனத்தில் நின்றால், சோகை, அசீரணம், பிளவை முதலாகிய நோய்கள் உண்டாகும். சந்திரன், பாவக்கோள்களோடு கூடி, இலக்கனம், எட்டாமிடம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றில் இருந்தால், கண்ணோயாலும் சயரோகத்தாலும் இறந்து போவான்.

**இதுவுமது**

*முன்னமே சொன்ன தலத்துறு மதியை*
*முற்றிய சுபரெதிர் பார்க்கில்*
*இன்னல்கூர் நோயால் நாட்சென்று மாய்வர்*
*இரண்டொடு மூன்றுபன் னொன்று*
*தன்னிலே மதியம் உறச்சுபர் கூடிற்*
*சரீரத்தில் வந்தநோய் எல்லாம்*
*பன்னிய பொன்னைச் சுடக்குளிர்ந் தார்போற்*
*பகருநோய் சீக்கிரம் தெளியும்.* ★ (194)

(இ-ள்.) பாவக்கோள்களோடு இலக்கனம் எட்டாமிடம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றில் ஒன்றில் சந்திரன் இருக்க, அவனைச் சுபக்கோள்கள் பார்த்தால், நோய் கொண்டவர்களாக நீண்ட நாட்கள் வாழ்ந்து மரணம் அடைவர். இரண்டாமிடம், மூன்றாமிடம், பதினோராமிடம் இவற்றில் சந்திரன் இருந்து, இவனோடு சுபக்கோள்கள் சேர்ந்திருக்க, வந்த நோய்கள் அனைத்தும் சூடான பொன்னின் மீது நீர்பட்டால் எவ்வாறு குளிர்ந்து போகுமோ, அதைப் போல சாதகனைவிட்டு நீங்கிவிடும்.

**இதுவுமது**

மேவுறு பகையும் விடம்பித்த ரோகம்
வேந்தர்கள் கோபமே செய்யும்
தாவுறு கதிரும் இவ்வகை சேய்க்கும்
சாற்றிய சன்னிபன் னிரண்டும்
வேவுறு கண்ணோய் சிலேத்துமம் உண்டாம்
இனியதோர் புந்திக்கும் பிரமைக்
கூவுறு குன்ம மிகுபிர மேகம்
கொடுந்துக்கம் சோபமும் உண்டே.★ *(195)*

(இ-ள்.) பகைக்கோள்கள், இரண்டாமிடம், மூன்றாமிடம், பதினோராமிடத்தில், நிற்கும் சந்திரனோடு சேர்ந்திருக்க, இச்சாதகனுக்கு விஷத்தினாலும் பித்த ரோகத்தாலும் துன்பம் நேரும். சந்திரனைப் போன்று அவ்விடத்தில் சூரியன் நின்றால், இச்சாதகன் மன்னர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். சந்திரனைப் போன்று அவ்விடத்தில் செவ்வாய் இருந்தால், இச்சாதகன் பன்னிரண்டு வகையான சன்னிகளுக்கு ஆளாவான். மேலும் கண்ணோய், சிலேத்துமம் முதலான நோய்கள் உண்டாகும். சந்திரனைப்போன்று அவ்விடத்தில் புதன் நின்றால், இச்சாதகனுக்குப் பிரமை, குன்ம ரோகம், பிரமோகம் முதலான நோய்கள் வரும். கோபம் வருவதோடு அவனுக்கு மிகுதியான துக்கங்கள் வந்து சேரும்.

**இதுவுமது**

*பவுத்திரம் வாக்குத் தோடமும் அல்லாற்*
*பரதிரவியத்தினில் ஆசை*
*தவத்தினைக் கெடுத்த தேவசாபத்தைத்*
*தந்திடும் பொன்னவர்க் கென்பார்*
*அவப்பிரமேக மூலங்கண் நோயும்*
*அதிசாரம் சிலேத்தும வாதம்*
*துவக்குறச் செய்யும் வெள்ளிக்கென் றுரைத்தார்*
*சொற்பதர் களைந்தமே லவரே.★* *(196)*

*(இ-ள்.)* சந்திரனைப் போன்று அவ்விடத்தில் குரு இருப்பின், சாதகனுக்கு பௌத்திர நோயுடன் வாக்கு தோஷம், பிறர் சொத்தின் மீது ஆசை, தவத்தினைக் கெடுத்த தெய்வ சாபத்தைக் கொடுக்கும். சந்திரனைப் போன்று அவ்விடத்தில் சுக்கிரன் இருக்க, இச்சாதகனுக்குப் பிரமேகம், மூலம், கண்ணோய், அதிசாரம், சிலேத்தும வாதம் முதலான நோய்கள் தீரும் என்று தேவையற்ற சொற்களைக் களைந்து கவியியற்றும் புலமையும் சோதிடப் புலமையும் உள்ளோர் கூறியுள்ளார்கள்.

**இதுவுமது**

*பேயினால் வாதைப் பேசுவெள் ளிக்கும்*
*பெட்புறு சனிக்குமே பேதாய்*
*நோயுறு கால்கை முடக்கமுட் காச்சல்*
*நொய்யதோர் உதரத்தில் வாதை*
*மாயராம் பாவர் மனைவிமைந் தருக்கும்*
*வான்துயர் போகமுண் டாக்கும்*
*காயுறு சர்ப்ப வேதையாங் கேது*
*கருவிழற் பிராந்திகுன் மமுமே.★* *(197)*

*(இ-ள்.)* மேலும் பேயினால் துன்பம் உண்டாகும் என்றும் கூறுவார்கள். சந்திரனைப் போன்று அவ்விடத்தில், சனி இருப்பின், இச்சாதகனுக்கு கால் கைகளில் முடக்கு நோய், உள்காய்ச்சல், வயிற்றுவலி முதலானவை வரும்.

சந்திரனைப் போன்று அவ்விடத்தில் பாவக்கோள்கள் இருப்பின், மனைவிக்கும் மைந்தருக்கும் துன்பமும் சுகமும் கிடைக்கும். பாம்பினால் துன்பம் உண்டாகும். சந்திரனைப் போன்று கேது இருப்பின், மனப்பிராந்தி, குன்மம் போன்ற நோய்கள் வரும்.

**இதுவுமது**

குளிகன்தான் வாந்தி அன்னத்தை மறுத்தல்
குலைந்திடும் குமரகண் டனுமாம்
களியொடு மவனே ஏழினிற் நிற்கிற்
கலங்குவர் பிரமையி னாலே
ஒளிதிகழ் வெள்ளி குருவுமே குளிகன்
உடனுற்றே ஏழினில் இருக்கிற்
றெளிவிலா துழன்று பிரமையால் மாய்வன்
திலகவா ணுதலவர்க் கரசே!★ *(198)*

(இ-ள்.) ஒளிபொருந்திய நெற்றியில் திலகத்தைப் போன்று விளங்கும் பெண்களுக்குத் தலைவியாக விளங்கு பவளே! சந்திரனைப் போன்று குளிகன் இருக்க, வாந்தி, உணவை வெறுத்தல், குமரகண்டன் முதலான நோய்கள் தோன்றும். குளிகன் ஏழாமிடத்தில் நிற்க, மனபிரமை ஏற்படும். சுக்கிரன், குரு, குளிகனுடன் சேர்ந்து ஏழாமிடத்தில் இருக்க, மனநோய் ஏற்பட்டு இச்சாதகன் மடிவான்.

**இதுவுமது**

வான்கதிர் சிவனால் வாதையாம் மதிக்கே
வன்துர்க்கை தர்மதே வதையாற்
தான்கரு வாதை குசன்சனி தனக்கே
சண்முக னாற்பிணி புதற்கே
தீன்காந் தருவர் வாதைநோன் பினர்தன்
தெய்வசா பத்தினில் வாதை
மீன்குறி வெள்ளி குருவுக்கே அரக்கர்
வேதைகா ரிக்குக்கண் நோயே.★ *(199)*

(இ-ள்.) சூரியனுக்குச் சிவனால் துன்பமாகும். மதிக்கு வனதுர்க்கை, தர்மதேவதையால் துன்பமாகும். செவ்வாய், சனி ஆகிய கோள்களுக்கு முருகனால் துன்பமாகும். புதனுக்கு நோன்பினராலும், தெய்வசாபத்தாலும் துன்பமாகும். சுக்கிரன், குரு ஆகிய கோள்களுக்கு அரக்கரால் துன்பமாகும். சனிக்கு கண்நோய் ஏற்படும்.

**இதுவுமது**

*கரியபாம் புக்கே சர்ப்வா தையுமாம்*
*காமுறு கேதெனும் அதற்கே*
*துரியசண் டாளர் வாதைமாந் திக்கே*
*துயரில்வெட் டுண்டவர் வாதை*
*எரியுறும் வாதைத் தானமே ஆறாம்*
*இவர்நிற்கத் தீயரே பார்க்கிற்*
*பிரிவுறா நோயாம் சுபருற்றுப் பார்க்கிற்*
*பெயர்ந்திடும் வாதைநோய் எல்லாம்.* ★(200)

(இ-ள்.) சந்திரனைப் போன்று அவ்விடத்தில் கரிய பாம்பாகிய இராகு இருந்தால் பாம்பினால் துன்பம் நேரிடும். சந்திரனைப் போன்று அவ்விடத்தில் கேது இருந்தால், தீயவர்களால் துன்பம் ஏற்படும். சந்திரனைப் போன்று அவ்விடத்தில் மாந்தி இருப்பின், இச்சாதகன் ஆயுதத்தால் வெட்டுப்பட்டு, அதனால் துன்பம் நேரிடும். வாதைத் தானம் என்பது ஆறாவது தானம். இதில் தீயக்கோள்கள் நிற்க, அத்தானத்தைத் தீயவர்கள் பார்க்க, நோய் உண்டாகும். சுபக்கோள்கள் நிற்க, அத்தானத்தைச் சுபக்கோள்கள் பார்க்க, இச்சாதகனுக்கு ஏற்படும் துன்ப நோய்கள் எல்லாம் பறந்தோடிவிடும்.

**இதுவுமது**

*உதயமா றெட்டீ ராறினிற் குளிகன்*
*உடுபதி இருந்திடின் வாந்தி*
*புதையுறு வாதம் சீதளக் காச்சல்*
*புகலதி சாரவாந் தியுமாம்*

மதிமயக் குண்டாய் மாளுவர் மதியை
வக்கிரன் சூரியன் கூடிற்
சதிசெய்காட் டேரி கன்னிமார் இருடி
தன்குறை நோயெனச் சாற்றே. ★ (201)

(இ-ள்.) சென்ம இலக்கனம், ஆறாமிடம், எட்டாமிடம், இவற்றில் ஒன்றில் குளிகனோடு சந்திரன் இருந்தால் இச்சாதகன் வாந்தி, வாதம், குளிர்க்காய்ச்சல், அதிசாரம், மயக்கம் ஆகியவற்றால் இறந்துபடுவர். சந்திரன், செவ்வாய், சூரியன் ஆகியோர் கூடி இருப்பின், காட்டேரி, கன்னிமார், இருடிகள் இவர்களால் குறைநோய் உண்டாகும் என்று கூறுவாயாக.

**இதுவுமது**

ஆறுகோள் பலக்கின் மந்திரார்ச் சனையால்
ஆறிடு நோய்களே என்பார்
தேறுமோர் எட்டோன் பலத்திடிற் றானே
தேகசம் என்னவே வேண்டும்
கூறிய வாதைத் தானத்தோன் ஏழிற்
குறுகிடக் கொடுக்கப்பத் தாகிற்
சோறொடு கழிக்க நாலொன்றோன் மற்றாற்
துலைந்திடும் வாதைகள் எல்லாம். ★ (202)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடத்தின் கோள்கள் பலம் பெற்று விளங்கினால் மந்திரார்ச்சனையால், இச்சாதகனுக்கு வந்த நோய்கள் நீங்கிவிடும். இலக்கனத்திற்கு எட்டாமிடத்திற்கு அதிபதி பலம் பெற்று விளங்கினால், தேகசம் என்று சொல்லவேண்டும். இச்சாதகன் ஆறாம் இடத்திற்கு அதிபதி ஏழாமிடத்தில், பத்தாமிடத்தில் இருக்க கழிச்சல் நோய் ஏற்படும். இலக்கனாதிபதி, நான்காமிடத்திற்கு அதிபதி இவர்களோடு சம்பந்தம் ஏற்பட்டால் நோய்கள் மாறி, ஆரோக்கியம் ஏற்படும்.

**இராசிகளும் இடங்களும்**

*வன்மிகம் காவற் சோலைசெம் பூமி*
*வருமேடம் இடபத்துக் கேதான்*
*மென்மைகொள் செந்நெல் களஞ்சந்தி யாகும்*
*மிதுனம்செய் பொழிலுடன் கோயில்*
*நன்மைகொள் நீர்சே ரிடமுடன் வாய்க்கால்*
*நலத்துறு ஞெண்டினுக் கென்பர்*
*பன்மையாம் கன்னிமார் கோயிற்*
*பசுவிடம் கடவுட்சா லையுமே.* ★ (203)

*(இ-ள்.)* மேஷத்திற்கு காவலை உடைய தோட்டம், செம்மைப் படுத்தப்பட்ட பூமி, இடபத்திற்கு வயல், முச்சந்தி, நாற்சந்தி போன்றவை. மிதுனத்திற்கு செயற்கை யான சோலையுடன் கோயில் நீர் சேருமிடம் வாய்க்கால் முதலானவை. கடகத்திற்குக் கன்னிமார் கோயில், பசுக்களின் இருப்பிடம், கோயில் முதலானவை.

**இதுவுமது**

*கன்னிக்கந் தாணர்தம் மனைப்பசுப் பரிகள்*
*கட்டிய சாலைநற் கோயில்*
*இன்னங்கோ லுக்கோ தெருவங்கா டியுமாம்*
*விருட்சிகம் கிணறுபுத் தென்பர்*
*அன்னதோர் சிலைக்கே போர்செயும் பூமி*
*ஆயுத சாலையு மாகும்*
*முன்னிய மகரம் குடங்குளம் காடு*
*வூருநீர்க் கயமல ரோடை.* ★ (204)

*(இ-ள்.)* கன்னிக்கு அந்தணர்களின் வீடு, பசுக்கள், குதிரைகள், கட்டிய சாலை, நற்கோயில் முதலானவை. துலாத்திற்குத் தெருவும் கடைத்தெருவுமாகும். விருச்சிகத் திற்கு கிணறு, புத்து முதலானவை. தனுசுவிற்கு போர் செய்யும் இடம் ஆயுதசாலை முதலானவை. மகரம், கும்பம் ஆகியவற்றிற்கு குளம், காடு, ஓடுகின்ற தண்ணீர்

முதலானவை. மீனத்திற்கு கடல், ஆறு, குளம் போன்ற நீர்நிலைகள்.

**இதுவுமது**

குளிர் தன்னை எட்டிடம் அதனைக்
குளிகன்தீக் கோள்களே சேரின்
விழிவர்க ணோயான் மதியின்கா லோனை
விளங்கிய உதயநா யகனை
ஒளிர்செவ்வாய் காலன் குளிகனும் சேரில்
ஓதிய அவமிருத் துண்டாம்
அழிவிலாப் பொருளும் அழிந்திடும் என்பார்
அம்புயம் பொருட்டுரை அனமே ! ★ (205)

(இ-ள்.) இராசியில் அல்லது எட்டாமிடத்தில் குளிகன், நிற்க, அவனைப் பாவக்கோள்கள் சேர்ந்திருந்தால், இச்சாதகனுக்கு கண்நோய் உண்டாகும். மதியின் அங்கிசாதி பதியுடன், இலக்கனாதிபதியுடன், செவ்வாயின் அங்கிசாதி பதியுடன் குளிகன் சேர்ந்தால் மரணத்திற்கு ஒப்பான கண்டம் உண்டாகும். பொருள் அழிவும் உண்டாகும் என்பதைச் செந்தாமரைமலரின் பீடத்தில் எழுந்தருளியுள்ள திருமகளைப் போன்ற அழகையும் அன்னத்தைப் போன்ற நடையினையும் உடைய பெண்ணே அறிவாயாக.

**இதுவுமது**

அடருநோய் வினவும் காலத்தில் உதய
மாகிய லக்கனப் புடத்தை
இடரைந்திற் பெருக்கி இரவிப்புடம் ஏழிற்
இந்துவின் புடத்தைஓர் ஆறிற்
திடமுறத் தாக்கிக் கூடிய தொகையிற்
திகழ்மாந்தி புடத்தையும் சேர்த்தே
உடனுற வைத்த இராசியாம் சீவன்
உடலமும் அடைவினிற் பாரே. ★ (206)

(இ-ள்.) ஆரூடமாக நோய்வினவும் காலத்தில், இலக்கனப் புடத்தை ஐந்தில் பெருக்கி, சூரியப்புடத்தை ஏழில் பெருக்கி,சந்திரனின் புடத்தை ஆறில் பெருக்கி, கூட்டிய தொகையுடன் மாந்தி புடத்தையும் சேர்த்து வைத்து உயிரையும் உடலையும் இராசி வரிசையில் கண்டு சொல்ல வேண்டும்.

**இதுவுமது**

சந்திரன் புடமும் எமகண்டன் புடமும்
தானொன்றாய்க் கூட்டிய தொகையே
வந்திடும் நோய்கள் தீரும்லக் கனத்தோன்
மன்னிய சரத்தினி லேதான்
முந்துற நிற்கின் வலியிநோய் முற்றும்
ஒழிந்திடும் ஸ்திரத்தினிற் சமனாம்
அந்தமாம் உபயம் தனினிற்கின் வலியன்
ஆகிய மூர்க்கமே யாகும். ★ (207)

(இ-ள்.) சந்திரனின் புடத்தையும் எமகண்டன் புடத்தையும் ஒன்றாகக் கூட்டி, நோய் தீரும் அல்லது தீராது என்று சொல்ல வேண்டும். இலக்கனாதிபதி, சர இராசியில் நின்றால், நோய் மேலும் அதிகமாகும். ஸ்திர இராசியில் நின்றால் நோயின் தன்மை சமமாக இருக்கும். உபய இராசியில் நிற்கில், நோய் மிக முற்றி இருக்கும்.

**இதுவுமது**

ஒள்ளிய உதயம் ஐந்துடன் ஏழில்
ஓரெட்டில் வெள்ளிதான் இருக்க
தெள்ளிய சோமன் மூன்றுடன் ஆறிற்
றிகழ்பத்துப் பதினொன்றில் எய்தில்
விள்ளரு நோய்கள் பலவுமே தீரும்
மிகுமூன்றிற் பாவரே இருக்கிற்
றள்ளரும் பதிவிட் டேகினார் அந்த
தலத்திரார் தாமரைத் திருவே! ★ (208)

(இ-ள்.) செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற அழகுடைய பெண்ணே! இலக்கனம், ஐந்தாமிடம், ஏழாமிடம், எட்டாமிடம் இவற்றில் ஒன்றில் சுக்கிரன் இருக்க, சந்திரன் மூன்றாமிடம், ஆறாமிடம், பத்தாமிடம், பதினோராமிடம் இவற்றில் இருக்க, இச்சாதகனுக்கு வரும் நோய்கள் பலவும் தீர்ந்துவிடும். மூன்றாமிடத்தில பாவக்கோள்கள் இருந்தால், இச்சாதகன் அந்த இடத்தில் இல்லாது வேறு இடத்திற்குச் சென்று சேருவான்.

## பொதுவிதி அறிதல்

ஆறினை எட்டைப் பன்னிரண் டதனை
அடைந்திடும் கோளுமல் லாது
கூறுமா றெட்டீ ராறினுக் குடைய
கோளுடன் இருக்குமக் கோளும்
தேறுநற் பகையை நீசத்தைக் கொடிய
தீக்கோளைச் சார்ந்திடும் கோளும்
ஊறுசெய் திடுமே அலதுநிற் பலனை
உதவிடா தென்றனர் உணர்ந்தோர். ★ *(209)*

(இ-ள்.) எந்தக் கோளாக இருந்தாலும் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் ஆகிய இவற்றின் அதிபதிகளோடு சேர்ந்துள்ள கோள்களும், பகை, நீசம் ஆகிய வீட்டில் இருந்த கோள்களும் என்றும் துன்பத்தைத் தருமேயன்றி என்றைக்கும் உதவாது என்று சோதிட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

எந்தத்தா னத்தின் பலனதும் சொலுங்கால்
இயம்புதல் உதயமாய் வைத்தே
பந்தித்த இராசி பன்னிரண் டையுந்தான்
பாந்தமாய் அடைவிலே பார்த்துச்

*சிந்தித்த முறையாய்ப் பலன்களைத் தெரிந்து*
*செப்புவம் குருகடாட் சத்தால்*
*அந்திக்கு முன்னங் குடக்கெழு பிறைபோல்*
*அழகிய திருநுதல் அணங்கே !* ★ *(210)*

*(இ-ள்.) மாலை நேரம் வருவதற்கு முன்னம் மேற்குத் திசையில் எழுகின்ற அழகிய பிறை நிலவினைப் போன்று எழில்மிகு நெற்றியினை உடைய பெண்ணே ! எந்த ஸ்தானத்தின் பலனையும் சொல்லத் தொடங்கும்பொழுது, அந்த ஸ்தானத்தை இலக்கனமாக வைத்து, இராசி பன்னிரண்டையும் கணக்கிட்டு, குருவின் அருளினால் அவற்றைப் பற்றி தெளிவாகத் தெரிந்துகொண்டு, முறையாகப் பலன்களைத் தெரிந்துகொண்டு கூறுவர் சோதிடர்கள்.*

**இதுவுமது**

*அதிபதி எனவும் காரகன் எனவும்*
*அறைந்திடும் இருவர்கள் தாமும்*
*முதிரிலக் கனத்தோன் தனக்குற வாயின்*
*மொழிந்திடும் பயனும்உண் டாமல்*
*சதிசெய்சத் துருவே யாயிடின் பலன்தான்*
*தவறிடும் உச்சநா யகனேல்*
*நிதயுறு பலனும் வாய்த்திடும் என்றார்*
*நிறைதரு கணிதநூ லவரே !* ★ *(211)*

*(இ-ள்.) அந்தந்த ஸ்தானங்களின் அதிபதி, காரகன் ஆகிய இருவரும் இலக்கனாதிபதியுடன் நட்புடன் இருந்தால், நல்ல பலன் கிடைக்கும். இவர்கள் இருவரும் இலக்கனாதிபதியுடன் பகையுடன் இருப்பின், தீய பலன் உண்டாகும். இவர்கள் மூவரும் சாதகத்தில் உச்சம் பெற்று விளங்க, செல்வமும் நல்ல பலன்களும் கிடைக்கும் என்று சோதிட நூல்களைக் கற்றுணர்ந்த வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.*

### இதுவுமது

நட்பினில் ஆட்சி தன்னிலுச் சத்தில்
நண்ணினும் சுபரொடும் கூடி
பெட்புறத் தானே இருக்கினும் அங்ஙன்
பிரிவிலாதிருந்தவர்க் குறவாய்
விட்டிலாதுரையிற் பலன்மிக உண்டாம்
விளங்கிய நன்மையே எய்தும்
முட்பொதி பலவின் தீஞ்சுவை நறுந்தேன்
மொழிஅயில் விழியணங் காரசே ! ★ (212)

(இ-ள்.) முட்கள் நிறைந்திருக்கக்கூடிய பலாப் பழத்தின் இனிமையான சுவைமிகுந்த சுளையினைப் போன்று இனிமையான மொழியினைப் பேசக்கூடிய, வேலைப் போன்ற விழிகளை யுடைய பெண்களுக் கெல்லாம் அரசியாக விளங்குபவளே! நட்பு, ஆட்சி, உச்சத்தில் இருந்தாலும் சுபக்கோள்களோடு கூடி, இருந்தாலும் அவ்வாறு கூடி இருந்தவர்களுடன் நட்பாக இருந்தாலும் அத்தானத்தின் பயன் அதிகமாக உண்டாகும். நன்மைகளும் கிடைக்கும்.

### இதுவுமது

பூண்டதானத்துக் காரகன் தானே
பொருந்தியே இருந்ததானத்தும்
வேண்டிட முன்னும் பின்னுமல் லாது
மிகுதிரி கோணத்து மேதான்
காண்டவிவ் விடமே பாபிகள் இருக்க
கடுங்கோட்கள் நோக்கிடு மாயிற்
றூண்டிய பலன்கள் மாண்டிடும் என்றே
சொல்லுதல் கணிதநூற் றனிலே ! ★ (213)

(இ-ள்.) பலன் அறிய வேண்டிய ஸ்தானத்தின் காரகன் பொருந்தி இருக்கின்ற ஸ்தானத்தினையன்றி அவனுக்கு

முன்னும் பின்னும் திரிகோணத்திலும் பாபக்கோள்கள் நிற்க, அல்லது பாவக்கோள்கள் நோக்க, இந்த ஸ்தானத்திற்கு ஏற்பட வேண்டிய நல்ல பலன்கள் மாறி, தீயப்பலன்கள் உண்டாகும் என்று சோதிட நூல்களில் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

**இதுவுமது**

எண்ணிய படியே காரகக் கோட்கள்
இயல்புறு தானத்தைச் சேரில்
நண்ணிய பலன்கள் யாவையும் நல்கும்
நலனுறும் சுக்கிரன் தானே
பெண்ணுடைத் தானக் கோள்மகத் தானம்
பெற்றிடில் உதவிய மனையாள்
திண்ணமாய் நாசம் என்றனர் கணிதத்
தியற்கையா வையுமுளத் தெரிந்தே. ★ *(214)*

*(இ-ள்.)* காரகக் கோள்கள் அவற்றிற்குரிய ஸ்தானங்களின் சேர்ந்தால், அந்த ஸ்தானத்திற்குரிய பலனைத் தரும். சுக்கிரன், ஏழாம் ஸ்தானத்திற்கு அதிபதியாகி, ஐந்தாமிடத்தில் நிற்க, உதவிய மனைவிக்கு நிச்சயம் கேடு விளையும் என்று சோதிட நூல்களில் கற்றுத்துளைபோகிய சோதிடர்கள் கூறியுள்ளார்கள்.

**இதுவுமது**

கொள்ளுந்தா னங்கள் தன்னையும் எடுத்துக்
கூறிய தானத்துக் கோளன்
உள்ளகோ ளுடனே காரகக் கோட்கள்
உடன்திரி கோணங்க டன்னின்
விள்ளுங்கேந் திரத்தில் நிற்பரே யாயின்
விளங்குமத் தானத்தின் பலன்கள்
தள்ளுதா தெய்தும் மதசகிக் கோட்டை
சருவிய தடமுலை அணங்கே ! ★ *(215)*

(இ-ள்.) மதம்பிடித்த யானையின் தந்தங்களை யொத்த பெரிய முலைகளைக் கொண்டிருக்கக் கூடிய பெண்ணே ! எந்தத் தானத்திற்குப் பலன் கூற வேண்டுமோ அந்தத் தானம் அந்தத் தானத்திற்கு அதிபதி, அந்த இடத்தில் உள்ள கோளோடு காரகக் கோட்கள் இணைந்து திரிகோணங்களில் அல்லது கேந்திரங் களில் நின்றால், அத்தானங்களின் பலன்கள் சிறப்பாகக் கிடைக்கும்.

**இதுவுமது**

ஓதுந்தா னத்துக் கதிபதி யுடனே
உற்றகா ரகனெனும் கோளும்
ஏதிலா இவரி லொருவனே சன்ம
இலக்கன கோணத்தி லேதான்
ஆதியாம் கண்டத் தானத்தி லுரினும்
அதிசய மாகிய பலன்கள்
நீதியால் அவனை அடைந்திடும் உதய
நிருபனுக் கவ்வகை பாரே. ★ (216)

(இ-ள்.) பலன் அறிய வேண்டிய ஸ்தானத்திற்கு அதிபதி அந்தத் தானத்திற்குரிய காரகனாகிய கோள் ஆகிய கோள்களில் ஒன்று, சென்ம இலக்கனத்திற்கு திரிகோணங்களில் அல்லது கேந்திரங்களில் இருந்தாலும், இவ்விரு கோள்களில் ஒன்று இலக்கனாதிபதிக்குக் கேந்திர திரிகோணங்களில் அல்லது கேந்திரங்களில் இருந்தாலும் இச்சாதகனுக்கு அந்த ஸ்தானத்திற்கு உரிய பலன்கள் சிறப்பாக இருக்கும்.

**இதுவுமது**

முந்திய சீவ னுடவன் கீர்த்தி
மூர்த்தியும் உதயமாய் இரண்டும்
வந்திடும் குடும்ப நேத்திரம் வாக்கு
வருதன மூன்றுக்குத் துணைவர்
சிந்தையாம் துயரம் கேள்விநா லுக்குத்
திகழ்பூமித் தமர்தாய் ஊர்தி
தந்தவைந் துக்கு வருணந்தாய் புதல்வர்
சற்குரு புத்ரரா சாங்கம். ★ (217)

(இ-ள்.) இலக்கனத்தைக் கொண்டு உயிர், சாதகனின் புகழ் தோற்றம் முதலியவற்றைப் பற்றியும் இரண்டா மிடத்தைக் கொண்டு, குடும்பம், கண், வாக்கு, தனம் முதலியவற்றைப் பற்றியும், மூன்றாம் இடத்தைக்கொண்டு உடன்பிறந்த இளைய சகோதரர், துயரம், கேள்வி முதலியவற்றைப் பற்றியும், நான்காமிடத்தைக் கொண்டு, நிலம், தாய், வாகனம் ஆகியவற்றைப் பற்றியும் ஐந்தா மிடத்தைக்கொண்டு சந்ததி, புதல்வர், குருபுத்திரர், ராசாங்கம் முதலியவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும்.

**இதுவுமது**

எஞ்சிய வாறுக் கிடர்பசி நோயாம்
ஏழுக்கே மனையவள் ஆட்சி
மெஞ்சும்எட் டுக்கே ஆயுளின் பொசிப்பு
மிகுமொன்பான் பிதுருடன் செல்வம்
வஞ்சமில் பத்தில் சீவனம் கமனம்
வருகர்ம பூசைபன் னொன்றிற்
தஞ்சமாம் மூத்தோன் இலாபமாம் வியத்தில்
சயனநற் செலவென லாமால். ★ (218)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாம் இடத்தைக் கொண்டு, துன்பம், பசி, நோய் முதலானவற்றையும், ஏழாம் இடத்தைக்கொண்டு மனைவி, ஆட்சி முதலானவற்றையும், எட்டாம் இடத்தைக்கொண்டு ஆயுள், மரணவழி முதலான வற்றையும், பத்தாமிடத்தைக் கொண்டு தொழில், தொடர்பு, கர்மம், பூசை முதலானவற்றையும், பதினோராம் இடத்தைக் கொண்டு மூத்த சகோதரம், இலாபம் முதலானவற்றையும், பன்னிரண்டாம் இடத்தைக்கொண்டு சயனம், செலவு முதலியவற்றையும் கூறலாம்.

**கிரகங்களின் காரகத்துவம்**

கதிரவன் தந்தை மதியன்னை செவ்வாய்க்
கனிட்டராம் புதன்மதி மாமன்
முதிர்குரு மைந்தர் வெள்ளியே மனையாள்
முந்துவா கனம்சனி வாழ்நாள்

சதிருள அடிமை என்றனர் இவர்கள்
சாற்றிய இவ்வகைக் கெல்லாம்
அதிபர்கா ரகனென் றறைந்தனர் முறையே
அறிந்துசொல் வதுபலம் என்பார். ★ (219)

(இ-ள்.) சூரியன்-தந்தை; சந்திரன்-தாய்; செவ்வாய்-இளைய சகோதரன்; புதன்-மாமன்; குரு-புதல்வர்கள்; சுக்கிரன்-மனைவி; வாகனம்; சனி-வாழ்நாள், பணியாட்கள். இவர்கள் அவ்வவற்றிற்குக் காரகர் என்று கூறியுள்ளார்கள். அதிபர், காரகன் இவர்களை அறிந்து சாதகப் பலன்களைக் கூறவேண்டும்.

குறிப்பு: காரகர் என்றால் செய்வோர் என்பது பொருள். ஒவ்வொரு கிரகமும் சில கடமைகளைச் செய்கின்றன. அவற்றிற்கென்று சில பணிகள் உள்ளன.

காரகன் புகலும் தானத்திற் கோட்கள்
கலந்நாள் ஆறெட் டே யாகிச்
சாருநாட் டிரிகோ ணத்திற்திக் கோட்கள்
சார்ந்தந்த நாட்சனி வருநாள்
ஒருமிக் கோட்கள் உணவருங் காலத்
தோதிய கோட்களவர் கானோர்
பாருளே மரணம் தன்னையே அடைவர்
பவளவாய் தவளவெண் ணகையே. ★ (220)

(இ-ள்.) பவளம் போன்ற சிவந்த வாயினால் வெண்ணிறப் பற்களைக் கொண்டு புன்னகை செய்யும் பெண்ணே ! காரகனும் ஸ்தானத்தின் கோள்களும் நின்ற நட்சத்திரம் பிறந்த நாளுக்கு ஆறாம், எட்டாம் நாட்களாக, திரிகோணத்தில் தீபக்கோள்கள் இருக்க, அந்த நாளில் சனி வரும் நாள், உண்ணவரும் நாளில் கோள்கள், அவற்றின் அதிபதிகளை உடையோர் பாரில் மரணம் அடைவர்.

நடக்கும்இலக் கனத்தின் கோணத்தில் எட்டில்
நாலினில் தேவமந் திரியும்
முடக்கமாய்க் குறைந்த மதியைத்தீக் கோட்கள்
முந்துறக் கூடினும் அன்னோன்

*இடக்குரு நீசம் மிகுபகை யதனில்*
*எய்தினும் அவன்குலம் அனைத்தும்*
*திடத்திலன் பலக்கில் நாசமாம் என்றே*
*செப்பினர் தெளிவுடை யோரே.★ (221)*

*(இ-ள்.)* சென்ம இலக்கனத்திற்குத் திரிகோணத்தில், எட்டாமிடத்தில், நான்காமிடத்தில் குரு நிற்க, தேய்பிறைச் சந்திரனைத் தீயக்கோள்கள் கூடியிருந்தாலும் குரு நீசம், பகை ஆகியவை பெற்று இருப்பின், அவனுடைய குலம் அனைத்தும் அழிந்துபோகும் என்று சோதிட நூல்களைக் கற்று அறிந்த தெளிவுள்ளோர்கள் கூறியுள்ளார்கள்.

*யாதுகா ரகனும் அப்பதிக் கிறையும்*
*இருந்திடும் ஓரைநா யகன்தான்*
*மீதுநட் பாட்சி உச்சநற் கோளை*
*மேவில் அன்னவர்க் குளதாய்*
*ஓதிய பலன்கள் மிகவுண் டாகும்*
*முற்பகை நீசமா றெட்டைத்*
*தீதுறு வியத்தைச் சேர்ந்தது மிக்கச்*
*செப்பிய பலனும்தீ தென்பார்.★ (222)*

*(இ-ள்.)* எந்தக் காரகனாக இருப்பினும் அந்த ஸ்தானத்திற்கு அதிபதியும் நின்ற இராசிக்கு அதிபதி நட்பு, ஆட்சி, உச்சம் பெற்று இருக்கில் அல்லது சுபக்கோளுடன் கூடி இருந்தால், அந்தப் பலன்கள் மிகுதியாகக் கிடைக்கும். காரகன், ஸ்தானாதிபதி நின்ற இராசிக்கு அதிபதி பகை, நீசம் பெற்று ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாம் இடத்தைச் சேர்ந்து இருந்தால் அதன் பலனும் தீயதாக இருக்கும் என்று கூறுவார்கள்.

*பாக்கியத் திறைவனை ஐந்தினுக் கதிபன்*
*பண்புறு காமத்தா னத்தோன்*
*தாக்கியே நின்ற வோரைகள் அதனைச்*
*சார்ந்திடும் கோட்களே பலனை*

ஆக்கமாய் நல்கும் அவர்திசை ஊணில்
அந்தரப் புத்தியி லேனும்
மாக்கடற் பிறந்த தோகைவீற் றிருக்கும்
மலர்முக வனிதையர்க் கரசே! ★ (223)

(இ-ள்.) திருப்பாற் கடலில் பிறந்த பெண்மயில் போன்ற திருமகள் வீற்றிருக்கும் செந்தாமரையை யொத்த முகத்தையுடைய பெண்களுக்கெல்லாம் தலைமை பூண்டவளே கேட்பாயாக. ஒன்பதாம் இடத்திற்கு அதிபதி, ஐந்தாம் இடத்திற்கு அதிபதி, ஏழாம் இடத்திற்கு அதிபதிகள் ஆகியவை சேர்ந்துள்ள இராசிகளைச் சார்ந்துள்ள கோள்களின் பலன்களை அவர்களின் திசைகளில், புத்திகளில், அந்தரங் களில் தரும்.

**இதுவுமது**

தூயக்கோள் நின்ற வோரைநா தனுக்கே
தொகுத்திடும் பலனும்தூய் தாகும்
தீயக்கோள் நின்ற இராசியா தியர்க்குச்
செப்பிய பலனும்தீ தாகும்
மாயவேழ் இரண்டுக் கதிபரும் அவரை
மலிவுடன் அடைந்திடும் கோளும்
காயமே குறைக்கும் எட்டுளோன் தானே
காலன்கை படுத்துவர் கண்டாய். ★ (224)

(இ-ள்.) சுபக்கோள் நின்ற இராசியாதிபதி தந்திடும் பலனும் சுபமாகும். தீயக்கோள் நின்ற இராசியாதிபதி தந்திடும் பலனும் தீயதாகும். ஏழாமிடம், இரண்டாமிடம் இவற்றிற்கு அதிபதிகள், அவ்விடங்களில் நின்றிடும் கோள்கள், எட்டாமிடத்தில் நிற்போன் ஆகியவர்களின் திசைகளில், புத்திகளில், அந்தரங்களில் எமகாலன் வந்து உயிரைக் கவர்ந்து செல்லுவான்.

மரணத்தா னத்தோன் இருக்கின்ற இராசி
மாதத்தில் அந்தநாள் தன்னில்

விரணத்தான் பகையு நோயுமன் னவரால்
வெறுப்பொடு முனிவுமுண் டாகும்
அரணத்தால் வீடு அழியும்ஐம் பொன்னும்
அழிந்திடும் துயரினில் சாவார்
தருணத்தாற் தோகை மயிலெனச் சாயற்
றனித்திரு வனையசெந் தேனே! ★ (225)

*(இ-ள்.)* தோகை மயிலை ஒத்த சாயலையும் ஒப்பற்ற திருமகளைப் போன்ற அழகினையும் உடைய சிவந்த இனிய பெண்ணே ! ஜென்ம இலக்கனத்திற்கு எட்டாம் இடத்திற்கு அதிபதி இருக்கின்ற இராசி மாதம், நாள் ஆகிவற்றில் காயங்களும் நோயும் உண்டாகும்; மேலும், கோபம் உண்டாகும்; வீடு அழியும்; செல்வம் கைவிட்டுப் போகும்; துன்பத்தால் அழிவு நேரிடும்.

**இதுவுமது**

பன்னிரு தானம் தன்னிலே நல்கும்
பலன்சொலும் பண்பது கூறில்
உன்னுமோர் தானம் தனக்குயர் அதிபன்
உகந்தங்கே இருந்தவர் பார்த்தோர்
மன்னுகா ரகனென் றுரைத்திடும் இவரால்
வருபலன் வகுத்திட லாகும்
முன்னுமீ ராறும் தானத்தின் பலனை
மொழிவார்கள் புலவரிம் முறையே. ★ (226)

*(இ-ள்.)* பன்னிரண்டு ஸ்தானங்களின் பலன்களைக் கூறும்பொழுது, ஸ்தானம், அந்த ஸ்தானத்திற்கு அதிபதி , அந்த ஸ்தானத்தின் நின்றவர், அந்த ஸ்தானத்தைப் பார்த்தோர். அந்த ஸ்தானத்திற்குரிய காரகன் ஆகியோரைக் கொண்டு கற்றறிந்த சோதிடநூல் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

தானத்தால் ஆய்ந்து சொல்லவே வேண்டும்
தற்கால பலன்களை யெல்லாம்
ஞானத்தால் அறிந்தே வரும்பலன் எல்லாம்
நவிலுவர் அறிவினிற் பார்த்தே

மானத்தாற் குருவே நின்றதோர் தானம்
வர்த்தனை யாகவே மல்கும்
பானத்தாற் சனியன் உரைக்கின்ற தானப்
பலன்கெடும் பீடையும் காணும். ★ (227)

(இ-ள்.) தற்கால பலன்களை அந்தந்த ஸ்தானங்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும். எதிர்காலப் பலன்களை எல்லாம் ஞானத்தால் அறிந்து, அறிவினால் கண்டறிந்து சொல்லவேண்டும். குரு நின்ற ஸ்தானம் பெருக்கமடையும். சனி நின்ற ஸ்தானத்தின் பலன் கெடும். துன்பமும் வந்து சேரும்.

## பன்னிரு தானங்களின் பலன்கள்

### இலக்கன ஸ்தான பலன்

இலக்கனம் உதயம் கீர்த்தி
இயல்மூர்த்தி சீவ னங்கள்
துலக்குகல் வியவா ராங்கம்
தோற்றமே தலைசொ ரூபம்
பலப்படு சிரசு பாங்கம்
பகர்சவுக் கியம்பொ சித்தல்
பலக்குமா யவைத்த னத்தைப்
பேசுவர் கணித நூலோர். ★ (228)

(இ-ள்.) சென்ம இலக்கனத்தைக் கொண்டு உதயம், கீர்த்தி, வடிவம், உயிர், கல்வி, யவராங்கம், தோற்றம், தலை, அழகு, உண்ணுதல், சுகம், ஆயுள் முதலானவற்றைச் சோதிட நூலோர் எடுத்துரைப்பர்.

குறிப்பு: யவராங்கம் என்பதன் பொருள் விளங்கவில்லை.

### இரண்டாம் தான பலன்

வாக்குநேத் திரம்கு டும்பம்
வருந்தனம் வித்தை பாத்திரம்
நோக்குறு முகமுத் தாரம்
நுவலுப கார தாரம்

ஆக்குமாஞ் சத்த சாத்ர
மாத்திரத் தொடுசற் பாத்திரம்
தூக்கிய குருவோ டல்லாற்
சுபர்சாதி இரண்டாந் தானம். (229)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு இரண்டாம் இடத்தைக் கொண்டு, வாக்கு, கண், குடும்பம், தனம், பாத்திரம், முகம், முத்தாரம், உதவி, மனைவி, சாத்திரங்கள், பொன் பாத்திரங்கள், குரு, சாதி முதலானவற்றைக் கூறவேண்டும்.

### மூன்றாம் ஸ்தான பலன்

சொன்னவிக் கிரமம் கேள்விக்
சரங்குரந் துணைவர் மார்பு
கண்ணபூ ஷணமெண் காது
கடித்துண்ணற் செவிடே யுத்தம்
உன்னிய பலங்கு ணத்தோ
டுரைத்திடல் மூன்றாம் தானம்
மன்னக மணியே காட்டும்
பையர வல்கு லாளோ! (230)

(இ-ள்.) நாகரத்தின மணியை உள்ளே வைத்து படமெடுத்தாடும் பாம்பின் படத்தைப் போன்ற அல்குலை உடையவளே! சென்ம இலக்கனத்திற்கு மூன்றாம் இடத்தைக் கொண்டு, தைரியம், கேள்வி, உடன்பிறந்த இளைய சகோதரர், மார்பு, காது ஆபரணங்கள், காது, செவிடு, உண்ணுதல், போர், வீரம் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

### நான்காம் ஸ்தான பலன்

மாதுருக் கிரக சேத்திரம்
வானகம் பந்து மித்திரம்
ஓதுதானியம்நாற் காலி
உறுசுகம் கடூர வித்தை

தீதில்பா தாள மூக்குச்
செலஞ்சுவைத் துணர்கு ழம்பு
மாதடா காதி பால்நெய்
வணங்குடை இதங்கம் என்பர். (231)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு நான்காம் இடத்தைக் கொண்டு, தாய், வீடு, இடம், வாகனம், உறவினர்கள், நண்பர்கள், தானியம், கால்நடை, சுகம், வித்தை, பாதாளம், மூக்கு, நீர், சுவை, குழம்பு, பிறபெண்கள் சிந்தனை, பால், நெய், கோயில் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

**ஐந்தாம் ஸ்தான பலன்**

மந்திரம் கியானம் தெய்வம்
மந்திரி தார சோரம்
சந்ததித் தவசு பத்திச்
சத்தியம் வயிறு தன்மை
அந்தமாம் பிதுர்க்கு ருக்கள்
ஆத்தும மிகுதி வாசனை
முந்திய நேத்ர ரோகம்
ஒருகண்போ சனம்பா லிப்போர். (232)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஐந்தாமிடத்தைக் கொண்டு, மந்திரம், கியானம், தெய்வம், மந்திரி, மனைவி, திருட்டு, சந்ததி, தவம், பக்தி, சத்தியம், வயிறு, தன்மை, பிதுர், குரு, ஆத்மா, மிகுதி, வாசனை, கண்நோய், ஒருகண், உணவு முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

**ஆறாம் ஸ்தான பலன்**

சத்துரு சாதி ரோகம்
சயனகடன் விரண காயம்
பத்தினிஆக் கினைக்கு ளாதல்
பகைகடை வாயி டுப்புச்

சுத்தமாம் பற்கள் வீழ்தல்
சுயதேசம் பரதே சந்தான்
ஒத்ததோர் உலகாம் என்றிங்
குரைத்தனர் உணர்ந்தோர் தாமே. (233)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்தைக் கொண்டு, பகைவன், சாதி, நோய், கடன், ஆயுத காயம், பத்தினி, தண்டனை அடைதல், பகை, கடைவாய், இடுப்பு, பற்கள் வீழ்தல், சொந்த நாடு, பகைநாடு முதலானவற்றைக் கற்றுணர்ந்த சோதிடர்கள் கூறியுள்ளார்கள்.

**ஏழாம் ஸ்தான பலன்**

களத்திரம் காமம் தூது
கழுத்துவாய் குய்யம் ஆசை
அளப்பில் தே சாந்திரம்போதல்
அன்பொடு தனத்தை வண்ணல்
வளைப்படு திரியின் போக
மன்னியத் திரிவி ரோதம்
தளப்பமின் மனைவி தன்னால்
தருங்காமம் ஏழுக் கென்பார். (234)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஏழாம் இடத்தைக் கொண்டு, களத்திரம், காமம், சூது, கழுத்து, வாய், குய்யம், ஆசை, தேசாந்திரம் செல்லுதல், மனைவியிடம் அன்பு, பொருள், சிற்றின்பம், பெண்போகம், பெண் விரோதம், மனைவி மீது விருப்பம் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

**எட்டாம் ஸ்தான பலன்**

அட்டமாம் கொண்ட ஆயுளென் றறையும்
அரணதத்துவப்புய லிங்கம்
நட்டமாய் விழுதல் பறிகொடுத் திடுதல்
நவிலன்ன தானம்சித் திரத்தோ

டொட்டிய சோரம் பலாய னம்வஞ்சம்
உக்கிரம் அவன்சினப் படுதல்
இட்டமாம் நேத்திர ரோகநீ ரேற்றம்
இலகுநாற் காலதாற் பலமே. (235)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு எட்டாம் இடத்தைக் கொண்டு ஆயுள், தத்துவம், புயலிங்கம், மலை ஏறி விழுதல், பறிகொடுத்தல், அன்னதானம், ஓவியம், திருட்டு, புறங்கூறல், வஞ்சனை, கொடுமை, கோபம், கண்நோய், நீரேற்றம், நாற்கால் பிராணிகளால் ஏற்படும் பயம் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

குறிப்பு: பலாயனம் என்பதன் பொருள் விளங்கவில்லை.

**ஒன்பதாம் ஸ்தான பலன்**

தருமபாக் கியமே வத்திரம்
தவங்குரு பிதுர்பு யத்தோ
டிருதொடை போக போக்கியம்
இனிதுடன் கூட உண்டோர்
பெருமையா தரவும் தர்மம்
பிதுர்பயம் விரோதம் அல்லால்
அருமையாம் மகிமை என்ன
அறைந்தனர் ஒன்ப துக்கே. (236)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு ஒன்பதாம் இடத்தைக் கொண்டு, பாக்கியம், வஸ்திரம், தவம், குரு, பிதுர், புயங்கள், தொடை, போக போக்கியம், பெருமை, ஆதரவு, தர்மம், பிதுர்பயம், விரோதம், மகிமை முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும் என்ற சோதிட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

**பத்தாம் ஸ்தான பலன்**

அரியதோர் கருமம் ஆக்கினை முழங்கால்
அரசர்சே வைஜெயம் கீர்த்தி
பரிவிற்கால் வயிறு அரைவயி றுண்ணற்
பாரிசம் தேவதா பக்தி

புரியுங்கா ரியங்கள் கெடுதிபின் பிழைத்தல்
பேசுமே காங்கிச நாசம்
தெரியபி மானம் சிறிதுடன் ஊமை
செயல்ஞான தானபா னமுமே. (237)

(இ-ள்.) சென்ம இலக்கனத்திற்கு பத்தாம் இடத்தைக் கொண்டு, கர்மம், ஆக்கினை, முழங்கால், அரசர்சேவை, வெற்றி, புகழ், கால் வயிறு, அரை, வயிறுண்ணல், பூமி, தெய்வபபக்தி, காரியங்கள், கெடுதி, பிழைத்தல், மேதமை, நாசம், அபிமானம், ஊமை, செயல், ஞானம், தானம், பானம் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

**பதினோராம் ஸ்தான பலன்**

வந்திடும் இலாபம் நன்சமு சாரம்
வருந்திர வியம்புதைத் திடுதல்
உந்திய புதையல் எடுத்தலே செவிடு
ஒளிர்கணைக் காற்கன்னம் மூத்தோர்
முந்துசந் தோடத் தினிலுண்ணல் இதயம்
முறைமையாம் மூத்தவர் நடக்கை
அந்தமாம் உலகிற் பலபல லாபம்
அனுதினம் வருவது காண்பார். (238)

(இ-ள்.) சென்ம இலக்கனத்தின் பதினோராம் இடத்தைக் கொண்டு இலாபம், மனைவியால் நன்மை, குலவிருத்தி, செல்வம் புதைத்திடுதல், புதையல் எடுத்தல், செவிடு, கணைக்கால், கண்ணம், மூத்த சகோதர சகோதரிகள், சந்தோஷம், இனிய உணவுகளை உண்ணுதல், மூத்தவர்களின் உறவு, இதயம், மேலும் ஒவ்வொரு நாளும் வரக்கூடிய இலாபம் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும்.

**பன்னிரண்டாம் ஸ்தான பலன்**

சயனங்காற் செலவு லோபம்
சயனப்பிர தாபம் மெத்தை
நயனங்கே டுடனே நாபி
நாடிநிச் சயமாய்த் தூங்கல்

அயர்வில்பாத் திரத்தா னத்தோ
டபாயத் தானம் என்னும்
பயன்தெரி கணித நூலோர்
பகர்ந்தனர் வியத்துக் கென்றே. (239)

(இ-ள்.) சயனம், பயணச்செலவு, கருமி, பணச் செலவினால் பெறும் சுகம், கண்களுக்குக் கேடு, மூக்கு, உறங்குதல், பாத்திரத் தானம் செய்தல் முதலானவற்றைப் பற்றிக் கூறவேண்டும் என்று சோதிட நூல் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

பன்னிரண்டு தான பலன் முற்றிற்று.

## மேஷ இலக்கன பலன்

மேடலக்க னம்பிறந்தோன் ராசபூ சிதானம்
மேன்மேலும் சஞ்சாரி கிரிகிச்ச தேகன்
நாடறியும் அவதாரி விசாலநேத் திரத்தன்
நவின்றிடகா ரியச்சமத்தன் பயிர்ச்செலவை உடையன்
நீடியசத் தியவாதி கோபிஅழ குடையன்
நிகர்தந்த ரோகமுட் டினதேக புருடன்
ஆடவர்துர்ச் சனப்பிரியன் வருடமைந்தி லேதான்
அக்கினி பயம்பத்திற் சுரம்வசூ ரியுமே. (240)

(இ-ள்.) மேஷ இலக்கனத்தில் பிறந்தவன் மன்னனால் போற்றப்படுபவன். அலையக்கூடியவன். மெலிந்த தேகம் உடையவன். பெரிய நெற்றியை உடையவன்; மிகுந்த சாமர்த்தியவான்; பயிர்ச் செலவு செய்பவன்; சத்தியம் பேசுபவன்; கோபம் உடையவன்; அழகினைக் கொண்டவன்; பல்நோய் கொண்டவன்; உஷ்ண தேகத்தை உடையவன்; தீயவர்களோடு உறவு உடையவன். ஐந்தாம் வயதில் தீயினாலும் பத்தாம் வயதில் வைசூரி, சுரம், போன்றவற்றால் இச்சாதகன் துயரமடைவான்.

## இதுவுமது

*பயனுடைத்தர் மிருபதிரு பத்தைந்திற் சர்ப்ப*
*பயமிகுபத் தெட்டினிலே அவமிருத்துத் தோடம்*
*மயக்கமிரு கத்தோடம் இராசிசுப மான*
*வர்க்கநூ றாண்டிருப்பன் மார்கழிமுப் பக்கம்*
*செயமுடபௌ ரணைவியாழம் உரோகணியும்*
*செப்பும்இராக் காலத்திற் சிரரோகத் தாலே*
*கயலனைய விழிமாதே ! மரித்திடுவன் கண்டாய்*
*கருதுஞ்சா தகசிரோமணி யர்சொன்ன திதிவே.* ***(241)***

*(இ-ள்.)* கயல்மீன் போன்ற கண்களை உடைய மாதே! இவனுக்கு இருபத்து ஐந்தாம் வயதில் பாம்பினால் துன்பம் நேரும்; இருபத்து எட்டாம் வயதில் மரணத்துக்கு ஒப்பான கண்டம் ஏற்படும்; மிருகத்தால் பயம் உண்டாகும். இராசியை சுபக்கோள்கள் பார்க்க இச்சாதகன், நூறுவயதுவரை இருப்பான். இவன் மார்கழி மாதம் பௌர்ணமி வியாழக் கிழமை, உரோகணி நட்சத்திரம் நடக்கும் நாளில் இரவு நேரத்தில் தலை நோயினால் மரணத்தை அடைவான்.

## இடப இலக்கன பலன்

*இவையாகும் இடபத்திற் பிறந்துளோன் கணித*
*ஏற்கும்வெகு புசிப்புடையன் தேவதாப் பிரியன்*
*அவையிலாத் திடப்புருடன் பரதாரப் பிரியன்*
*அனந்தசவுக் கியதேகன் அலங்காரப் பிரியன்*
*நவைமகிழுஞ் சாத்ரீகன் சத்தியவான் அழகன்*
*ஆனதிரி சனப்பிரியன் இளைஞர்புத்தி உடையன்*
*கவைதீரும் மானபுத்திர பவுத்திரரும் உடையன்*
*கைசாலின் அகமதனிற் பிணியுடைய னாமே.* ***(242)***

***(இ-ள்.)* இடப இலக்கனத்தில் பிறந்த சாதகன், கணிதத் தொழில் உடையவன்; இறைபக்தி கொண்டவன்; திடமனம் உடையவன்; பிற பெண்டிரிடம் உறவு கொள்பவன்; சந்தோஷம், சௌக்கியதேகம் உடையவன்; அலங்காரங்களில்**

ஈடுபாடு மிக்கவன்; சாத்திரங்களைக் கற்றவன்; சத்தியம் பேசுபவன்; அழகானவன்; பெண்களிடம் அன்பு பூண்டு இருப்பவன்; மன உற்சாகத்துடன் இருப்பவன்; நல்ல புதல்வர்களையும் பேரர்களையும் கொண்டவன்; கை கால்களில் உடலில் நோய் உள்ளவன்.

## இதுவுமது

ஆனவிட பமதனிற் கிலேசம்பின் செல்வம்
ஐந்தில்பதி மூன்றிலிரு பதிலிருபத் தேழில்
வானமரும் அக்கினிச்சிலேத் துமவெஞ்சு ரத்தால்
வசூரியிற் பயம்இந்த விடபத்துக் கேதான்
ஈனமில்லாச் சுபவர்க்க முறிலெழுபத் தேழில்
ஏற்றிடுதை மாதமுதற் பக்கம்உயர் திங்கள்
வேனின்திரி யோதசியும் ரோகணிநாள் அதனில்
வீரியஅந் தியகாலம் சுரத்தினில்மரித் திருவன். (243)

(இ-ள்.) இடப இலக்கனத்தில் பிறந்த சாதகன், மனக்கவலை உள்ளவன். பின் செல்வனாவான். ஐந்தாம் வயதில், பதிமூன்றாம் வயதில், இருபது வயதில், இருபத்து ஏழாம் வயதில் தீயினால், சிலேத்துமத்தினால், சுரத்தினால், வைசூரியால் பயம் உண்டாகும். இந்த இலக்கனம் சுபவர்க்கம் அடைந்தால் இச்சாதகன் 77 வயது வரையில் இருப்பவன். இவன் தை மாதம் சுக்லபட்சத்தில் திரியோதசி திதியில் ரோகிணி நாளில் மாலை நேரத்தில் சுரத்தினால் மரணத்தை அடைந்திடுவான்.

## மிதுன இலக்கன பலன்

வன்னமுறு மிதுனத்திற் பிறந்திட்ட சீவன்
மடந்தையர் சொரூபன்வெட் கமுடையன்மிகு பச்சை
தன்னிலுள்ள தாசையுளன் பரியவச னத்தன்
தான்தொடுத்த காரியத்தை நிறைவேற்றும் சமத்தன்
சொன்னபூ டணமுடையன் வாதபித்த தேகன்
சுகந்தகந்தப் பிரியன்கா வியசாத்திரப் பிரியன்
அன்னியரைத் தூடணிப்பன் பலசாத்ர விகடன்
அருள்கீர்த்தி திடப்புருடன் சகலமுமே அறிவன். (244)

(இ-ள்.) மிதுன இலக்கனத்தில் பிறந்த சாதகன் பெண்ணைப் போன்ற தோற்றம் உடையவன்; வெட்க முறுபவன்; பச்சை நிறத்தில் விருப்பம் உடையவன்; இனிமையான சொற்களைப் பேசக்கூடியவன்; தான் ஏற்றுக் கொண்ட செயலைச் சிறப்பாக நிறைவேற்றும் திறமை கொண்டவன்; ஆபரணங்களைப் பூண்டவன்; வாத பித்த தேகம் கொண்டவன். நறுமணப் பொருட்கள் மீது விருப்பம் கொண்டவன்; பிறரை துச்சமாகப் பேசுபவன்; பல சாத்திரங் களைக் கற்றுத்தேர்ந்தவன்; கருணை உடையவன்; பலராலும் புகழப்படுபவன்; உறுதியான சிந்தனைக் கொண்டவன். அனைத்தையும் கற்றுத்தேர்ந்தவன்.

**இதுவுமது**

அறியுமூன் றைந்தெட்டிற் பத்திருபத் தெட்டில்
அவமிருத்தாற் அக்கினியால் ஆயுதத்தால் பயமாம்
பொறியுடைய வாதங்கள் கண்ணோயொடு ரோகம்
புல்லரித்த கருப்பினால் அவமிருந்து தோடம்
செறியமிது னத்தானே சுபவர்க்கம் மேவிற்
சிறப்புடனே ஆண்டெழுபத் தைந்துஆ வணியில்
நெறியுடைய முற்பக்கம் வெள்ளிசதுர்த் தசியும்
நிகரோண ராத்திரியில் நிரியாணம் என்பர். (245)

(இ-ள்.) மூன்றாம் வயதில், எட்டாம் வயதில், பத்தாம் வயதில், இருபத்து எட்டாம் வயதில் நெருப்பினாலும் ஆயுதத்தாலும் வாதநோய், கண்ணோய், கருப்பு முதலான வற்றால் மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும். இலக்கனம் சுபவர்க்கம் அடைந்தால் இச்சாதகன் 75 வயது வரையில் வாழ்ந்திருப்பான். ஆவணி மாதத்தில் சுக்ல பட்சத்தில் சதுர்த்தசி திதியில், வெள்ளிக்கிழமை திருவோண நட்சத்திரத்தில் இரவு வேளையில் இச்சாதகன் மரணம் அடைவான்.

## கடக இலக்கன பலன்

என்பர்கட கம்பிறந்தோன் சீதளமாம் பூமி
இச்சையுள்ள குலவான்சஞ் சலன்நல்ல நேத்ரன்
பொன்பலசவுக் கியகிருது சாத்திரீகன் கடகம்
பொன்னலனே இருக்கின்மன் னர்மந்திரி நெற்றியுலும்
தன்பரிவிற் குய்யத்திற் பிதுரடையா ளத்தைத்
தானுடையன் பரகார பிரியன்கொடுப் போர்தம்மை
அன்புடனே மகிழ்வுகந்து பிரியன்சம் பத்துடையன்
அநேகதா னியமுடையன் மிகசெலவுள் ளவனே. (246)

(இ-ள்.) கடக இலக்கனத்தில பிறந்த சாதகன், குளிர்ச்சி யானவன்; நிலங்களை உடையவன்; நல்ல குலத்தைச் சார்ந்தவன்; மனதில் கவலை உடையவன்; நல்ல கண்களைப் பெற்றிருக்கக் கூடியவன் சுகவான்; பயிர்த்தொழில் செய்பவன்; சாத்திரங்களைக் கற்றவன். குரு, கடகத்தில் இருந்தால் மன்னர்களுக்கு மந்திரியாக விளங்கக் கூடியவன். நெற்றியில், குய்யத்தில் நோயுள்ளவன். பிற பெண்களுடன் உறவு கொள்பவன்; தனக்கு உதவுபவர்களிடம் அன்பு பாராட்டுவான்; தனம்; தானியம் மிக்கவன்; தாராளமாகச் செலவு செய்பவன்.

## இதுவுமது

அவனியில்சீக் கிரம்நடப்பன் ஐந்தில்பதி நாலில்
ஆகும்இரு பதிற்சுரத்தால் இருபத்து மூன்றில்
இவர்குட்சி பேதியவ மிருத்துநாற் பதிலே
எண்ணமிகும் பிராணபயம் இயல்கடகம் தனக்கே
பவமில்சுப வர்க்கமுறின் வயதுதொண்ணூ றிருப்பன்
பகர்மாசி முற்பக்கம் புத்தியும்பஞ் சமியும்
நவமிருக சீரிடத்தின் மத்தியா னத்தில்
நண்ணுநிரி யாணமென நவின்றனர்நன் னுதலே. (247)

(இ-ள்.) வேக நடையை உடையவன். ஐந்தாம் வயதில், பதினைந்தாம் வயதில், இருபதாம் வயதில் சுரத்தாலும்

இருபத்து மூன்றாம் வயதில் பேதியாலும் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களை இச்சாதகன் அடைவான். நாற்பதாம் வயதில் உயிர்பயம் தோன்றும். கடக இலக்கனம் சுபவர்க்கம் அடைந்தால் இவன் தொண்ணூறு வயது வரை இருப்பான். இவன் மாசி மாதத்தில் சுக்கில பட்சத்தில், பஞ்சமி திதியில் புதன் நாளில் மிருகசீரிட நட்சத்திரத்தில் நண்பகலில் மரணம் அடைவான் என்று சோதிட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

### சிம்ம இலக்கன பலன்

*நண்ணியசிங் கம்பிறந்தோன் சருவசனப் பிரியன்*
*நற்புத்தி மான்தெய்வப் பிராமணர்தன் பத்தி*
*எண்ணரிய தைரியத்தன் வெகுபுசிப்பை உடையன்*
*எள்ளளவும் பசிபொறான் சம்பத்தை உடையன்*
*திண்ணமுறு வயிற்றுவலி காரியத்திற் கோபி*
*செய்யகைகால் தன்னில்மச்ச ரேகையுமே இருக்கும்*
*பண்ணவரு வயதைந்திற் பத்திருபத் தேழிற்*
*பரிவாகும் முப்பதாம் வயததனிற் சுரமே. (248)*

*(இ-ள்.)* சிம்ம இலக்கனத்தில் பிறந்த சாதகன், நல்ல வார்த்தைகளைப் பேசுபவன்; நல்ல புத்தியை உடையவன்; தெய்வம், பிராமணர்கள் மீது பக்தியுடையவன்; மிகுந்த தைரியசாலி; மிகுந்த பசியையுடையவன்; பசி பொறுக்க மாட்டான்; கோபத்தை உடையவன்; காரியங்களைச் செய்பவன்; கை கால்களில் மச்சரேகை இருக்கும். ஐந்து வயதில் பத்து வயதில், இருபத்து ஏழுவயதில், முப்பதாம் வயதில் சுரம் வந்து வருந்துவான்.

### இதுவுமது

*சுரத்தினால் அவமிருத்தாற் பிராணபய மாகும்*
*தூயசிங்கம் தனக்குசுக வர்க்கமுண்டா மாயின்*
*வரத்தினால் ஓரெழுபத் தைந்துவய திருப்பன்*
*வாகான பங்குனிமா தங்கிருஷ்ண பட்சம்*

திரப்பட்ட பிரதமையும் அத்தமுமே கூடும்
தினத்தின்மத் தியானத்தில எமனுலகம் அடைவன்
விரத்தியான வர்மனதும் காமுகர்தன் மனதும்
வெங்கனலின் மெழுகாக நகைசெய்யுமின் கொடியே. (249)

(இ-ள்.) வாழ்க்கையில் வெறுப்புற்றவர்கள் மனதையும் காமுகர்கள் மனதையும் தீயில் இட்ட மெழுகென உருகச் செய்யும் புன்னகையையும், மின்னலையொத்த இடையையும் உடைய பெண்ணே! மேற்கண்ட வயதுகளில் சுரத்தினாலும், கண்டங்களாலும் மரணபயம் உண்டாகும். சிம்ம இலக்கனம் சுபவர்க்கத்தை அடைந்தால் இச்சாதகன், எழுபத்து ஐந்து வயதுவரை இருப்பான். பங்குனி மாதத்தில் கிருஷ்ண பட்சத்தில், பிரதமை திதியில் அஸ்த நட்சத்திரம் கூடும் நாளின் நண்பகலில் மரணமடைவான்.

## கன்னியா இலக்கன பலன்

கொடியேகன்னி தனிற்பிறந்தேன் கிலேசநற் சீலன்
குலவுசனப் பிரியன்மிக் கோரொழுக்க நடக்கை
படியதனிற் சகலகாரியச்சமர்த்த னாகும்
பன்னும்பூ ருவயதிற் றரித்திரத்தை உடையன்
துடியாகப் பின்வயதிற் தனமுந்தா னியமும்
சொந்தமாய்ப் படைத்திடுவன் சுகந்தகந்தம் உடையன்
வடிவாகும் வயதைந்தில் ஒன்பதிற்பத் தெட்டின்
மன்னியப் தொன்பதனில் வாய்க்குமவ மிருத்தே. (250)

(இ-ள்.) கன்னி இலக்கனத்தில் பிறந்த சாதகன் மனக்கவலை உடையவன்; நல்ல ஒழுக்கம் மிக்கவன்; வெகுசனப் பிரியன்; நல்ல நடத்தையை உடையவன்; அனைத்துக் காரியங்களையும் திறமையுடன் முடிக்க வல்லவன்; இளம்வயதில் வறுமையை உடையவன்; பின் வயதில் தனம், தானியம் ஆகியவற்றைச் சொந்தமாக சம்பாதிக்கக் கூடியவன்; நறுமணப் பொருட்களில் விருப்பம் உடையவன்; ஐந்து, ஒன்பது, பதினெட்டு, பத்தொன்பது வயதுகளில் மரணத்துக்கு ஒப்பான கண்டங்களை அடையக் கூடியவன்.

**இதுவுமது**

*மிருத்துவாம் வயிறு பேதிஅக் கினியால்*
*வெகுசுர மாம்தாற் பயமாம்*
*விருத்தியாம் கன்னி சுபவர்க்கம் அடையில்*
*எழுபத்தே ழாமாண்டில் வைகாசி*
*வெருக்கொள் பிற்பக்கம் தனிற்சதுர்த் தசியாம்*
*வியாழம்சித் திரைநட்சத் திரத்தில்*
*அருக்கிய குன்ம ரோகத்தான் மத்தி*
*யானத்தில் மடிவனென் றுரையே. (251)*

(இ-ள்.) வயிறு பேதி, தீ, சுரம் இவற்றால் இடப இலக்கன சாதகன் துன்பமுறுவான். கன்னி இலக்கனம் சுபவர்க்கத்தை அடைந்து இருந்தால், இச்சாதகன் எழுபத்து ஏழு வயது வரை இருப்பான். வைகாசி மாதத்தில் அமர பட்சத்தில் சதுர்த்தசி திதியில் வியாழக்கிழமையில் சித்திரை நட்சத்திரத்தில் நண்பகல் வேளையில் குன்ம நோயின் காரணமாக இச்சாதகன் இறந்துபடுவான்.

**துலா இலக்கன பலன்**

*உரைசெய்து லாம்தனிற்பிறந் தோன்சனப் பிரியன்*
*உயர்ந்தகுல சம்பத்து சுகந்தகந்தப் பிரியன்*
*துரைராறு பூசிதவான் அபிமானி சுகியன்*
*சொல்லுபய களத்திரத்தன் பந்துக்கள் உடையன்*
*தரையில்வய தேழுசபனி ரண்டொடுபத் தொண்பான்*
*சாற்றிருபத் தெட்டினிலக் கினிபேதி கருவிப்*
*புரையுடைய கள்ளராற்பய முண்டாமி தற்கே*
*பொற்புடைய சுபவர்க்கம் அடையின்மட மாதே! (252)*

(இ-ள்.) துலா இலக்கனத்தில் பிறந்த சாதகன், வெகுசனப் பிரியனாவான். உயர்ந்த குலத்தில் தோன்றி செல்வம் மிக்கவனாக விளங்குவான். நறுமணப் பொருட் களில் விருப்பம் உடையவன்; இன்பத்தை நுகர்பவன்; இரு களத்திரங்களை உடையவன்; உறவினர்கள் சூழ வாழ்பவன்;

ஏழாம் வயதில், பன்னிரண்டாம் வயதில், பத்தொன்பது வயதில் இருபத்து எட்டு வயதில் தீயால், பேதியால், ஆயுதத்தால், திருடர்களால் பயம் உண்டாகும்.

**இதுவுமது**

*மானே எண்பத் தைந்தினிற்றான்*
*வைகாசியினின் முற்பக்கம்*
*தேனே இரவி வாரத்திற்*
*திரிதி யுடனே சித்திரையும்*
*தானே சூலை ரோகத்தாற்*
*சாயுங் காலம் மரித்திடுவன்*
*பூனேர் விரிஞ்சன் வகுத்தபடி*
*பொற்பாய் முனிவர் இயம்பியதே. (253)*

(இ-ள்.) துலா இலக்கனம் சுபவர்க்கத்தை அடைந் திருந்தால், இச்சாதகன் 85வயது வரை வாழ்வான். வைகாசி மாதத்தில் சுக்ல பட்சத்தில் ஞாயிற்றுக் கிழமையில் திருதியை திதியில் சித்திரை நட்சத்திரத்தில சூலை நோயின் காரணமாக இச்சாதகன் மாலை நேரத்தில் மரணமடைவான் என்பது இறைவன் வகுத்தபடி சோதிடக்கலையைக் கற்றுணர்ந்த வல்லவர்கள் கூறியபடியாகும்.

**விருட்சிக இலக்கன பலன்**

*இயலும்விருட் சிகம்பிறந்தோன் மாதுர்பிதுர் கர்மன்*
*எதார்த்தன் அதிகனபி மானிதிட விரதன்*
*உயரும்பாக் கியமுடையன் சுகியில்லான் நான்கில்*
*ஓரைத்திற் பத்தில்பனி ரண்டில்பதி னெட்டில்*
*அயருநாற் பதிற்சன்னி சுரத்தாற்கண் டமிதிற்*
*கானசுப வர்க்கமுறிற் றொண்ணூறாண் டிருப்பன்*
*தயவுறும்ஆ னியிலேமுற் பக்கதுவா தசியாம்*
*சனிவாரம் விசாகமத்தி யானத்தில்நிரி யாணம். (254)*

(இ-ள்.) விருச்சிக இலக்கனத்தில் பிறந்த சாதகன், தாய் தந்தைக்குத் தன் கடமைகளைச் செய்பவன்; எதார்த்த மானவன்; அதிக அபிமானி; திடமாக விரதங்களிருப்பவன்; பாக்கியங்களைக் கொண்டவன்; சுகக்குறைவு இல்லான். இவனுடைய நான்காம் வயதில், ஐந்தாம் வயதில், பத்தாம் வயதில், பன்னிரண்டாம் வயதில், பதினெட்டாம் வயதில், நாற்பதாம் வயதில் சன்னி சுரத்தால் கண்டம் உடையவன். இலக்கனம் சுபவர்க்கமுறில் தொண்ணூறு வயதுவரை இருப்பான். ஆனி மாதத்தில் சுக்ல பட்சத்தில் துவாதசி திதியில் சனிக்கிழமை விசாக நட்சத்திரத்தன்று நண்பகலில் இச்சாதகன் மரணமடைவான்.

### தனுர் இலக்கன பலன்

நெறிவிலாமுயர் தனுப்பிறந்தோன் மாதுர்பத்தி அழகன்
நிலையுஞ்சன் மார்க்கன்சாத் திரிகன்வா லிபம்தொட்
டரியசவுக் கியன்தனுசு முற்பாதிக் கேதான்
அடைவிலாப்பா லகன்மியைந் தினிலே கண்டம்
உரியபனி ரண்டுபதி னைந்துபதி னெட்டில
ஒருநாற்பத் தேழிலவ மிருத்திதற்குச் சுபமேற்
பரிவிலெழு பத்தேழின் மார்கழிப்பிற் பக்கம்
பஞ்சமிஞா யிறுசோதி இராத்திரியில் மரணம். (255)

(இ-ள்.) தனுசு இலக்கனத்தில் பிறந்த சாதகன் தாயின்மீது அன்புடையவனாக விளங்குவான்; அழகானவன்; நல் வழியில் செல்பவன்; சாத்திரங்களில் வல்லவன்; இளம் வயது முதல் வசதிகளை உடையவன். ஐந்தாம் வயதில், பன்னிரண்டாம் வயதில், பதினைந்தாம் வயதில், பதினெட்டாம் வயதில், நாற்பத்தேழாம் வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டம் உண்டாகும். இலக்கனம் சுபவர்க்கத்தில் இருந்தால் இச்சாதகன், தன் எழுபத்து ஏழு வயதுவரை இருப்பான். மார்கழி மாதம் அமர பட்சத்தில், பஞ்சமி திதியன்று, ஞாயிற்றுக்கிழமை, சுவாதி நட்சத்திரத்தில் இரவு நேரத்தில் இச்சாதகன் மரணமடைவான்.

## மகர இலக்கனத்தில் பலன்

மரபுடைய மகரத்தில் பிறக்கிலபி மானி
மச்சரேகை யையுடையன் சுகந்தகந்தப் பிரியன்
திரமுடைய காரியத்தன் மிகுந்தசிறப் புடையன்
தீரன்கோபிப் பெரியகண்ணன் செப்பருங்ஏ காந்தன்
விரவுகாரி யச்சமர்த்தன் மூன்றைந்தோ டேழின்
மிக்கபனி ரண்டினிலே விதேசமவ மிருத்து
பரவுமிந்த மகரந்தான் சுபவர்க்க மடையிற்
பார்மீது வயதெழுபத் தைந்தெனுமாண் டதுவே. (256)

(இ-ள்.) மகர இலக்கனத்தில் பிறந்த சாதகன் அபிமானம் உடையவன். அவன் கையில மச்சரேகை அமைந்திருக்கும். நறுமணப் பொருட்களில் விருப்பம் உடையவன். சுய காரியத்தில் ஆர்வம் மிக்கவன். சிறப்புகளைப் பெற்றவன்; வீரமுடையவன்; கோபத்தைக் கொண்டவன்; பெரிய கண்களைப் பெற்றவன்; தனிமை விரும்பி; காரியங்களைத் திறமையுடன் செய்பவன்; இச்சாதகனின் மூன்றாம் வயதில் ஐந்தாம் வயதில், ஏழாம் வயதில், பன்னிரண்டாம் வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டம் ஏற்படும். இந்த மகர இலக்கனம் சுபவர்க்கத்தை அடைந்தால், இச்சாதகன் எழுபத்தைந்து வயது வரை இருப்பான்.

## இதுவுமது

ஆண்டினிற் புகழா வணியிற்பிற் பக்கம்
தீண்டிய பஞ்சமி இரவிவா ரத்தில்
ஊண்டிய உத்திரட் டாதி தயத்தில்
பூண்டிடும் மரணந்தான் பொருந்தும் அன்னமே. (257)

(இ-ள்.) ஆவணி மாதத்தில் அமரபட்சமும் பஞ்சமி திதியும் கூடிய அன்று ஞாயிற்றுக்கிழமையில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் விடியற்காலையில் இச்சாதகன் மரண மடைவான் என்று சொல்லவேண்டும்! என்பதை அன்னம் போன்ற நடையையுடைய பெண்ணே! அறிவாயாக.

## கும்ப இலக்கன பலன்

*அன்னரும்பந் தனிற்பிறந்தோன் சோமனாங் கிசத்தன்*
*அரியபித்த ரோகத்தன் கிரிகிச்ச தேகன்*
*சொன்னபிர திக்கையன் சிரேட்ட திடச் சித்தன்*
*துரியகிரா மாதிபதி காரியத்திற் சதுர்த்தன்*
*மன்னுபல வான்காம ரூபிசவுக்கி யத்தன்*
*மாறுகண்பார் வையன்புத்தி மானிரத்தக் கண்ணன்*
*துன்னியபன் னொன்றுடனே இருபதுமுப் பதினிற்*
*சுரபீடை இதற்குசுப வர்க்கமுண்டாம் எனுமே. (258)*

*(இ-ள்.) கும்ப இலக்கனத்தில் பிறந்த சாதகன் அழகுடையவன்; பித்த ரோகம் உடையவன்; மெலிந்த தேகம் உடையவன்; சொன்ன சொல் காப்பவன்; நல்லவன்; உறுதியான மனம் படைத்தவன்; அதிகாரப் பதவி உடையவன்; காரியங்களைத் திறமையாகச் செய்யக் கூடியவன்; பலம் மிக்கவன்; விரும்பப்படும் தோற்றம் உடையவன்; சுகங்களோடு வாழ்பவன்; மாறுகண் கொண்டவன்; புத்திசாலியாக விளங்குபவன். சிறந்த கண்களைக் கொண்டவன். பதினோராம் வயதில், இருபது வயதில், முப்பது வயதில் சுரத்தால் துன்பம் அடைவான். கும்ப இலக்கனம் சுபவர்க்கம் பெற, எண்பது வயதுவரை வாழ்வான்.*

## இதுவுமது

*எண்ணும் ஓர்வய தெண்பதிற் சித்திரை*
*பன்னுபிற் பக்கம் பஞ்சமி ஆதிரை*
*பொன்னின் வாரம் புகழ்ந்திருள் நேரத்தின்*
*மின்னி லங்கிய விண்ணிடைச் சேர்வனே. (259)*

*(இ-ள்.) எண்பதாவது வயதில் சித்திரை மாதத்தில் அமர பட்சத்தில் பஞ்சமி திதியுடன் கூடிய நாளின் வியாழக் கிழமையில் திருவாதிரை நட்சத்திரத்தில் இரவு நேரத்தில் இச்சாதகன் மரணத்தை அடைவான்.*

## மீன இலக்கன பலன்

*சேருமீனம்பிறந்தோன் சத்தியவான் அழகன்*
*திகழ்மோகா லங்காரன் நல்நேத்திரன் தனவான்*
*கூருமாங் கிடப்பிரியம் விந்தையிற்பிர சித்தன்*
*குறிக்கும்வய தொருமூன்றில் இருபதினிற் றானே*
*சோருமவ மிருத்துபயம் இம்மீனம் தனக்கே*
*சுபவர்க்கம் உண்டாயின் நூறுவய திருப்பன்*
*போருலவும் மதகரியை வடகிரியைப் பழித்தே*
*பூரித்தே இளகிவிம்மிப் புடைத்தெழுபூண் முலையே. **(260)***

*(இ-ள்.)* போரிடுகின்ற மதம்பொழியும் யானையையும் இமயமலையையும் பழிப்பது போன்று திமிர்ந்து இளகி விம்மி புடைத்தெழுந்துள்ள ஆபரணங்கள் அணிந்த தனங்களை உடைய பெண்ணே! மீன இலக்கனத்தில் பிறந்த சாதகன், சத்தியவான்; அழகு வாய்ந்தவன்; அலங்காரங்களில் பிரியம் உடையவன்; நல்ல கண்களைக்கொண்டவன்; செல்வன்; மாமிச உணவில் பிரியம் உள்ளவன்; கற்ற வித்தைகளினால் பலரும் அறியும் வண்ணம் இருப்பவன். மூன்றாம் வயதில் இருபதாம் வயதில் மரணத்திற்கு ஒப்பான கண்டத்தை அடைவான். மீன இலக்கன சுபவர்க்கம் பெற்றால், இச்சாதகன் நூறு வயது வரை வாழ்ந்திருப்பான்.

இலக்கன பலன் முற்றிற்று.

***காரக நிகண்டு முற்றிற்று.***

சாதக சிந்தாமணி

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(பாடல் எண்.)


## அ

அச்சுவினி சதயம் 144
அட்டமாம் கொண்ட 235
அடருநோய் வினைவும் 206
அண்டிய புவியிற் 108
அணங்குவது கோல் 73
அத்தமாம் கன்னி 71
அதிகவுச்சந் தனையு 117
அதிபதி எனவும் 211
அதிபதி யுடைய 185
அம்புலி மிதுன 174
அரசெனும் மீனம் 89
அரிசிங்கம் வேங்கை 14
அரியதோர் கருமம் 237
அருக்கன் சேய்பொன் 149
அருக்கனுக்குச் சிங்க 109
அல்லவன் கன்னி 177
அலவனே ஆறின் 193
அவமிணன் டினின்முன் 65
அவரவர்க்கு மூலத்திரி 104
அவனியில் சீக்கிரம் 247
அளக்குநெய் பயறு 7
அறியுமூன் றைந்தெட் 245
அறையும் மேட 55
அறையு மாரூட 186
அன்னதோர் கடக 63
அன்னரும் பந்தனிற் 258
அனவியே பகலோன் 17

## ஆ

ஆகிய உதய 190
ஆகிய தனுவின் 78
ஆடுகீழ்ப் பாலே 39
ஆடுமுதற் கடக 53
ஆண்டினிற் புகழா 207
ஆதரிச இலக்கன 139
ஆதிநாள் புனர்தம் 5
ஆய்ந்த நவாங்கி 90
ஆய்ந்திடு சாலி 85
ஆயுமே இடப 57
ஆருடலக் கனத்து 136
ஆறினை எட்டை 209
ஆறுகோள் பலக்கின் 202
ஆனகா லாங்கிசம் 98
ஆனவிட பந்தனிற் 243

## இ

இகதச மிக்கே 157
இகல்கட கந்தான் 25
இகன்மிருத்து பாக 147
இசையுறு கும்ப 84
இடபந்தான் இடப 23
இடறு புவியில் 154
இந்து இருந்த 164
இயலும் விருட்சிகம் 254
இரவி புதன்மதி 112
இரவி மதி புதன் 110
இரவி யுடன் மதி 116
இரவி லப்தை 166

இலக்கனம் உதயம் 228
இலக்கனா திபனும் 188
இவையாகும் இடப 242
இனியவெள்ளி தெற்க 121

ஈ

ஈட்டிய சனியின் 168

உ

உச்சத்திற் நின்ற 122
உச்சமாம் தலைவல 152
உதயத்தின் மானுட 41
உதயமா றெட்டீ 201
உரியதிரே காண 171
உருவினில் உத்தி 159
உரைக்கு மொன்று 103
உரைசெய் துலாம் 252
உரைத்தலக் கனத்தோன் 133
உரைத்திடு சிங்கம் 68
உன்னிய கடிகா 132
உன்னிய துவாத 91

எ

எஞ்சிய வாறு 218
எண்ணிய படியே 214
எண்ணும் ஓர்வய 259
எந்தத்தா னத்தின் 210
எந்நாளும் தினவோரை 52
எலிபக வதிநாள் 6
எற்பாய குளிகனு 126
என்பதோர் தேளின் 75
என்பர்கட கம்பிற 246
என்றுமுதற் கிரகங்கள் 114

ஏ

ஏகாங்க சந்துர் 101
ஏற்றநாள் திசை 137
ஏற்றரிய பதினொன் 111
ஏற்றிய புட்கர 146
ஏற்றிய புந்தி 36

ஒ

ஒள்ளிய உதயம் 208

ஓ

ஓதரும் பாச 124
ஓதிய மிதுனம் 40
ஓதுந்தா னத்து 216

க

கடைநீர்க் குளமே 9
கண்ட தேளினில் 77
கதிர்மகன் மந்த 21
கதிரவன் செவ்வாய் 115
கதிரவன் தந்தை 219
கதிரவன் தன்கதி 127
கரிபாம் புக்கு 46
கரியபாம் புக்கே 200
கடிலைக் கனத்தி 142
கலன்கொள் சஷ்டி 95
கவிப்பறிந் துரைக்கி 162
களத்திரம் காமம் 234
கன்னிக்கந் தணர்தம் 204
கன்னியில் இரண்டாம் 70
கனங்கா கக்கோ 191

கா

காணவே குடமூன் 86
காணிய யாழ்மூன் 62
காணிரு பத்தி 170
காரகலக் கனமு 138
காரகன் புகலும் 220

கு

கும்பந்தான் புருட 32
குயின்மொழி மிதுன 60
குருசனி சோமன் 189
குளிகன்தான் வாந்தி 198
குளிர் தன்னை 205

கூ

கூறிய கொண்டல் 13

கே

கேது இருந்த 165

கொ

கொங்கலர் குசாதி 120
கொடிசெறு மீன் 87
கொடி கன்னி 250
கொடுமரம் சாபம் 15
கொள்ளுந்தா னங்கள் 215

கோ

கோடுறு குளிக 48
கோதிலாக் கன்னி 27

ச

சகடுதே ரூற்றால் 4
சசிமீனத் துவாதசம் 183
சந்திரன் புடமும் 207
சந்திரன் மேட 172
சத்துரு சாதி 233
சயனங்காற் செலவு 239
சயனராகு வின்கதி 128
சரத்துட னேசரம் 140
சனிசெவ்வாய் இராகு 37

சா

சாருநவக் கிரக 100

சி

சிங்கமே முதலாய் 42
சிரசு நெற்றி 151
சிலையரி மறியும் 34
சிறந்தவா ரூடஇலக்கனம் 134

சீ

சீர்பெறு ஞாயிறு 1
சீரான நட்சத்திர 136

சு

சுக்கிரனுக் குறவு 45
சுரத்தினால் அவமிரு 249

சூ

சூரியன் வீதி 161
சூரியனுக் குறவு 43

செ

செய்யகேதுக்குறவு 47
செயலான கிரகம் 106

சே

சேரு மீனம்பிற 260

சொ

சொல்லிய குசாதி 119
சொற்பிர தமைக்கு 156
சொன்னவிக் கிரமம் 230

சோ

சோடசாங் கிசத்தின் 95
சோதியி ரேவதி 145

ஞா

ஞாயிறு புந்தி 148

த

தந்தவிந்த அங்கி 99
தருகதி ரோனுடன் 119
தருசப்தாங் கிசத்தை 93
தருதேவ லோக 102
தருமபாக் கியமே 236
தருமிரவி இருந்த 169
தனமதி தேளிற் 179
தனுவினிற் றுவாத 180

தா

தாமுசறுகோல் 74
தானசிங் கத்தின் 66
தானத்தால் ஆய்ந்து 227

தி

திங்கணற் கடக 175
திண்டிறற் கதிரோன் 130

திரசிங் கத்தில் 67
திரமக ரத்தில் 82
திரமுறை ஓரை 51
திரிமிகு மகர 83
திருமறி தனின்மூன் 56
திருமிது னத்தின் 61

தீ

தீட்டிய வுபயம் 187
தீதிலாத் தெய்வ 20

தூ

தூயக்கோள் நின்ற 224

தெ

தெளிவுறு தனுசி 79

தே

தேருசமை இலக்க 141
தேவ கணேசா 97

ந

நட்பினில் ஆட்சி 212
நடக்கும்இலக் கனத்தின் 221
நண்ணிய சிங்கம் 248
நயக்குமா ருட 135

நி

நிலவுதான் சிங்க 176

நெ

நெறிவிலா முயர்தனு 255

ப

பகர்தசாங் கிசந்தான் 92
பகருநண் டிரண்டாம் 64
பகருமகு பதிக்கு 159
பயனுடைத் தர்மி 241
பரிமருத் துவநாள் 3
பரிவிற் கரண 12
பரிவேடம் தனக்குச்சம் 125
பருதி இருந்த 163
பருதி புடத்து 123
பருதியா தித்தன் 16
பவுத்திரம் வாக்கு 196
பன்னிய ஏழாம் 129
பன்னிய ஞாயிறின் 155
பன்னிரு தானம் 226
பாக்கியத் திறைவனை 223

பா

பாசமாந் துலாத்தின் 72
பாதுறும் இடபம் 59

பி

பிரதமை துவிதிகை 2
பிறைகும் பத்து 182

பு

புதனுக்கு நட்பு 44
புலமையாம் கன்னி 69

பூ

பூண்டதா னத்து 213
பூணிட பத்தின் 192

பே

பேயினால் வாதை 197
பேருள சனியும் 192

பொ

பொறியரவின் தோடம் 105

போ

போற்றுமுற் கொழுங்கோல் 10

ம

மகசிரம் பூராடம் 143
மகரந்தான் சுறவும் 31
மங்கலன் குருதி 19
மதிஇராக் கதிரோன் 18
மதிஇருந்த தானத்தி 154
மதிமகரத் துவாத 181
மந்திரம் கியானம் 232

மரணத்தானத்தோன் 225
மரபுடைய மகர 250
மருவிய விட்கம் 11
மன்னிய இடப 123
மன்னிய சிங்கம் 26
மன்னுந் தான 107
மனுவின் மீனிரண் 88

**மா**

மாதுருக் கிரக 231
மானே எண்ப 253

**மி**

மிக்கமதி லப்தை 108
மிதுனத்தின் முதற்றிரே 60
மிதுனமே ஆணும் 24
மிருத்துவாம் வயிறு 251
மின்னிய மகர 81

**மீ**

மீனமே இருமீன் 33

**மு**

முந்திய சீவ 217
முந்திய திரிமி 91
முறைமையாம் ஓரை 50
முன்னமே சொன்ன 194

**மே**

மேடந்தான் மேட 22
மேடம் எதிர்விருட்சி 113
மேடமோ டிடபம் 160, 35
மேடலக் கனம்பிற 240
மேவுறு பகையும் 195

**யா**

யாதுகா ரகனும் 222

**வ**

வடிவுள தனுவே 30
வந்திடும் இலாபம் 238
வருத்தும் தேளினி 76
வருந்துலாத் தானே 28
வருடத்துக் கதிபன் 150
வரும்இரவிக் கைந்து 49
வருமதி கோலி 178
வல்லதோர் தனுர்மூன் 80
வலப்பக் கத்தடி 153
வன்னமுறு மிதுன 244
வன்மிகம் காவ 203

**வா**

வாக்கு நேத்திரம் 229
வான்கதிர் சிவனால் 199

**வி**

விதமுறு மிதுனம் 38
விருட்சிகம் தேளின் 29

**வெ**

வெருவுறு சிங்கம் 184

# துணை நூல்கள்


1. **காலச்சக்கரம்**, திரு. அடிகளாசிரியர், (பதிப்பு) சரசுவதி மகால் நூலக வெளியீடு, ஐந்தாம் பதிப்பு, மார்ச் 1994.

2. **சாதக சிந்தாமணி** (மூலபாடம்), கூடலிங்கம் பிள்ளை, எஸ்., (பதிப்பு) ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ், சென்னை, முதற்பதிப்பு 1922.

3. **சாதக சிந்தாமணி** (மூலபாடம்), வைத்திலிங்க சோதிடர், பாலசுப்பிரமணிய முதலியார் (பதிப்பு), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1934.

4. **சாதக சிந்தாமணி** (மூலபாடம்), நித்தியானந்த சோதிடர் (பதிப்பு), எஸ்.பி.வி.பிரஸ், சென்னை, 1941.